


நகரத்தார் வாழ்வியல்

(மருந்து குடித்தல் முதல் படைப்பு வரை)













மணிவாசகர் பதிப்பகம்

முனைவர் கரு. முத்தய்யா

நகரத்தார் வாழ்வியல்

(மருந்து குடித்தல் முதல் படைப்பு வரை)

முனைவர் கரு. முத்தய்யா

மணிவாசகர் பதிப்பகம்
31, சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600108.

முதல் பதிப்பு : செப்டம்பர், 2018
திருவள்ளுவர் ஆண்டு : 2049
விலை : ரூ. 100.00
மணிவாசகர் பதிப்பக வெளியீட்டு எண் : 2656

நினைவில் வாழும்
நிறுவனர்
ச. மெய்யப்பனார்



டாக்டர் ச. மெய்யப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.

பல்கலைக்கழகங்கள் பலவற்றில் இவர் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்.

'வள்ளுவம்' இதழின் நிறுவன ஆசிரியர்.

குன்றக்குடி அடிகளார் **'தமிழவேள்'** என்றும், தருமபுரம் ஆதீனத் தலைவர் **'செந்தமிழ்க் காவலர்'** என்றும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

'பதிப்புச் செம்மல்' என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

கிடைக்குமிடங்கள்:

மணிவாசகர் நூலகம்

12-B, மேலச் சன்னதி, **சிதம்பரம்** - 608001. ☎:*04144*-230069
31, சிங்கர் தெரு, பாரிமுனை **சென்னை** - 600108. ☎:044-25361039
6, சிவஞானம் தெரு, தி.நகர், **சென்னை** - 600017. ☎:044-24357832
110, வடக்கு ஆவணி மூலவீதி, **மதுரை** - 625001. ☎:0452-2622853
15, ராஜ வீதி, **கோயமுத்தூர்** - 641001. ☎:0422-2397155
296/134, செரி சாலை, **சேலம்** - 636007. ☎:0427-4030709
28, நந்தி கோயில் தெரு, **திருச்சி** - 620002. ☎:0431-2706450

அச்சிட்டோர் : மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ்,
சென்னை – 600 021, தொலைபேசி : 25954528

அணிந்துரை

முனைவர் கரு. முத்தையாவை, சபா அருணாசலத்துடன் நகரத்தார் கலைக்களஞ்சியம் தொகுக்க வைத்தவர், பதிப்புச் செம்மல் ச.மெய்யப்பன் ஆவார். அன்று தொட்டு முனைவர் முத்தையா நகரத்தார்களின் வாழ்வியல் மரபுகளில் கருத்துச் செலுத்தி வருகிறார். நகரத்தார் மகளிர் பழந்துணியானாலும் பழையது (சோறு) ஆனாலும் வீணாக்கித் தூக்கி எறியமாட்டார்கள். இதே குணம் சடங்கு மரபு முதல் பழக்க வழக்கம் வரை ஓரளவு நிலை பெற்றுள்ளது: இரண்டாயிரம் ஆண்டுப் பழைமையுடையவற்றையும் இன்றும் கைவிடாது காப்பாற்றி வருகிறார்கள்.

அதனால் அமெரிக்கர் முதல் சப்பானியர் வரை நகரத்தார் மரபு ஆய்வை, ஏதோ தொல்பொருள் ஆய்வு போலச் செய்வதில், ஆர்வம் காட்டுகிறார்கள்.

நகரத்தார் வாழ்வியல் எனும் இந்நூலில், கூறப்படும் செய்திகளைப் பிறப்பு முதல் இறப்பு வரை என விளக்கலாம். முத்தையா மங்கல வழக்காகப் பிறப்புக்கு முந்தைய மருந்துகுடித்தலில் தொடங்கி, இறப்புக்குப் பிந்தைய படைப்புவரை முடித்துள்ளார். இஃதொன்றே அவரது நுண்மாண் நுழைபுலத்திற்குத் தக்க சான்றாகும்.

இந்நூலில் வரும் அனைத்துச் சடங்குக் கலைச் சொற்களையும் தொகுத்தால், அதுவே நகரத்தாரின் மரபுவழிப் பெருமையை விளக்கிவிடும்.

காப்புக் கட்டுப் புதுமை, கார்த்திகைப் புதுமை, திருவாதிரை போல்வன நின்று விட்டன. எனினும் இவை ஆழ்ந்த ஆராய்ச்சிக் குரியன. அன்று வணிகர்கள் மன்னர் பின்னோராய், தங்கட்கெனப் பாய்மரக் கப்பல்கள், தனிக்கொடி, தனிப்படை வைத்திருந்தனர். தரை வாணிகத்திலும் கடல் வாணிகத்திலும் அதற்குத் தேவை இருந்தது. கார்த்திகைப் புதுமை, குதிரையேற்றப் பயிற்சியின் அரங்கேற்ற மாகவும் இருக்கலாம் என்ற முத்தையா கருத்து ஏற்புடையதே.

கண்ணகியும் கோவலன் மகள் மணிமேகலையும் நம்மவர்களே. ஆதிரை பிச்சையிட்ட காதையை, மணிமேகலைக் காப்பியத்தில் படித்தவர்கள், நம் கன்னிப் பெண்களுக்கு நடந்த திருவாதிரைச் சடங்கை அதன்வழி வந்ததென்று நம்ப நிரம்ப இடமுளது. முத்தையா அதையும் குறிப்பிடத் தவறவில்லை. அரசியையும் அரசனையும் எதிர்த்து நின்று, சிறைச்சாலையை அறச்சாலையாக மாற்றிய நம் மகள் மணிமேகலை வரலாற்றை, நம் மகளிருக்குச் சொல்வது என்றோ? அண்மையில் தாய்லாந்தில் தோண்டி எடுக்கப்பட்ட தாழி ஓடுகளில் துறவோன் எனத் தமிழில் எழுதப் பெற்றிருப்பதை மேனாட்டார் கண்டுபிடித்து வெளியிட்டுள்ளனர். மணிமேகலை மணிபல்லவத்தீவில் அறவணவடிகள் என்ற துறவோரிடம் புத்த சமய விளக்கம் பெற்றதை இது நிலை நிறுத்துகிறது.

ஊர்க் கலியாணம் சொல்லுதல் அண்மைக்காலம் வரை இருந்தது. உறவினரல்லாத ஊரார்க்குத் திருமணம் சொல்வது இது. யான் ஒரு முறை ஊர்க் கலியாணம் சொல்லிப் பாக்குப் பணம் வாங்கிவந்தது நினைவிலுள்ளது.

தலைச்சீலையில் முடிதல் பற்றி, முத்தையா ஒரு விளக்கம் தருகிறார். எனினும் வேவு, தும்பு பிடித்தல், மிஞ்சி போடுதல், பூரம் கழித்தல் என வரும் பல சடங்குகளுக்குப் பெயர்ப் பொருளும் காரணமும் மேலும் விளங்க வேண்டியுள்ளது.

தமிழ்ப் பேரகராதி வேள்வு, வேள்வெடுத்தல் என்று இதைக் குறிக்கிறது. இருவீட்டாரும் ஒருவருக்கொருவர் உணவுப் பண்டங்களை வரிசையாகக் கொண்டு போதல் என விளக்கமும் தருகிறது. முத்தையாவும் இது வேள்வு வேவு என ஆகியிருக்கலாம் என்றே எழுதுகிறார்.

மொய்ப்பணம் எழுதுதல் (பணத்திருப்பு, பணம் எழுதுதல்) என்பது வருகைப் பதிவு பற்றிய, சிறந்த முறையாகும். இசைபிடிமானம் நம் பழந்தமிழ் நடையில், கல்வெட்டுக்களில் வருவதுபோல் உள்ளது. ஆயினும் நம் சடங்குகள் அனைத்திலும் வருமானம் கருதி, பிராமணர்கள் நுழைந்து கொண்டது போல, அழகிய செந்தமிழ் நடை இசைபிடிமானத்தில் பூஷணம், பாணிக்கிரகணம் போன்ற வடசொற்கள் இடைக்காலத்தே நுழைக்கப் பட்டு விட்டன. காதல் ஒருவனைக் கைப்பிடித்தே, அவன் காரியம்

யாவினும் கைகொடுத்து, என்பார், மகாகவி பாரதியார். கைப் பிடித்தலை, பாணிக் கிரகணம் என மொழிபெயர்த்திருப்பது தவறு, பாணி – கை கிரகணம் – பற்றுதல் மண வீட்டில் கிரகணம் பற்ற வேண்டுமா?

கல்லெடுத்துப் புலாலூற்றிக் கொள்ளுதல் என்பது, மூவாயிரம் ஆண்டுப் பழைமையுடைய நடுகல் சடங்கு, அதனையும் நம்மவர் கைவிட்டிலர். குறிப்பாக இந்நூல் நகரத்தார்கள் தங்கள் சடங்கு முறைகளை அறிய, ஒரு கையேடாக உதவும் என்பதுறுதி!

தமிழண்ணல்

சதாசிவநகர்

மதுரை – 625 020

முன்னுரை

நானும் நண்பர் சபா. அருணாசலமும் பதிப்புச் செம்மல் ச.மெய்யப்பனாரோடு இணைந்து, நகரத்தார் கலைக்களஞ்சியத்தை உருவாக்கிக் கொண்டிருந்த நேரம். அதன் ஆலோசகர்களில் ஒருவரும் என் ஆசிரியப் பெருந்தகையுமான முனைவர் தமிழண்ணல் நகரத்தார் குடும்பத்தில் ஒரு குழந்தை பிறப்பதிலிருந்து. இறக்கும் வரை, அது தொடர்பான, குடும்ப விழாக்கள் என்னென்ன நிகழும் என்பதை ஒரு கட்டுரை வடிவாக்க வேண்டும் என்று ஆலோசனை கூறினார்கள்.

அதிலே நான் என் சிந்தனையையும் இணைத்து, மருந்து குடித்தலில் தொடங்கி படைப்பு வரையான விழாக்களையும், அவை தொடர்பான, சடங்குகளையும் உள்ளடக்கி. குடும்பச் சிறப்பு நிகழ்ச்சிகள் என்ற கட்டுரையைக் கலைக்களஞ்சியத்தில் அமைத்தேன்.

சில ஆண்டுகட்குப் பின், ஆச்சி வந்தாச்சு ஆசிரியர் நா.பழநியப்பன், என் இனிய நண்பர் பேராசிரியர் தேவநாவே வாயிலாக இதழுக்குத் தொடர்கட்டுரை ஏதாவது எழுதுங்கள் என்ற வேண்டுகோளை முன் வைத்தார். அப்போது மேற்கூறிய கலைக் களஞ்சியக் கட்டுரையை விரிவுபடுத்தி, மருந்து குடித்தல் முதல் படைப்பு வரை என்ற தலைப்பில் 33 இதழ்களில் தொடர்ந்து எழுதினேன்.

அத்தொடரைப் படித்த நகரத்தார் பெருமக்கள் பலர் என்னிடம் இத்தொடர் நிறைவு பெற்றதும் இதனை ஒரு நூலாக்கிவிடுங்கள். மிகவும் பயனுள்ள பார்வை நூலாக இது உதவும் என்று குறிப்பிட்டனர். நானும் அவ்வாறே செய்ய விரும்பினேன்.

ஆனால் பல்வேறு சூழல்களால் காலத்தாழ்வு ஏற்பட்டது. பின்னர் ஆச்சி வந்தாச்சு ஆசிரியர் நா.பழநியப்பன் தாமே இந்நூலை வெளியிட முன் வந்தார்கள். அவர்களுக்காக இதற்கு நூல் வடிவம் கொடுக்கும் போது நகரத்தார் வாழ்வியல் என்ற தலைப்பை அமைத்தோம்.

வாழ்வியற் செய்திகளாகச் சடங்குகள் பட்டியலிடப் பெறும் போது, சில செய்திகள் விட்டுப் போயிருக்கின்றன. அவற்றையும்

சேர்க்க வேண்டும் என்று தோன்றியது. பிள்ளை பெற்ற குடும்பத்தினர், அப்பிள்ளைக்குரிய அனைத்து விழாக்களையும், சடங்குகளையும் செய்து மகிழ்கின்றனர். ஆனால் பிள்ளை இல்லாதவர்கள்? அவர்கள் முதலில் பிள்ளை கூட்டிக் கொள்கின்றனர். எனவே, தொடரில் இடம்பெற வாய்ப்பில்லாமற் போன பிள்ளைகூட்டுதல் என்பதை நூலில் இணைத்துள்ளேன்.

சடங்குகள் மட்டும் தொடரான காரணத்தினால், தனி விழாவாகிய பிள்ளையார் நோன்பு தொடரில் இடம் பெறவில்லை. நகரத்தார் வாழ்வியல் எனும்போது அவர்கள் மட்டும் கொண்டாடும் பிள்ளையார் நோன்பு பற்றிய செய்திகள் இல்லையெனில் நூல் முழுமை அடையாது என்பதால் அவ்விழாபற்றிய கட்டுரையையும் இணைத்துள்ளேன்.

ஆச்சிமார்களின் தனித்திறமையாகிய ஆசுகவி புனையும் ஆற்றலை வெளிப்படுத்தும் தாலாட்டு மற்றும் ஒப்பாரி பற்றியும் தனிக்கட்டுரைகள் இணைத்துள்ளேன்.

இந்நூலின் உள்ளடக்கம் பற்றி என்னைச் சிந்திக்கத் தூண்டிய தோடு, தொடர் வெளிவந்த காலத்தில் ஊக்கம் கொடுத்தும், நூலுக்கு அணிந்துரை எழுதியும் உதவிய என் ஆசிரியப் பெருந்தகை பேராசிரியர் தமிழண்ணல் அவர்களுக்கு நன்றி.

நகரத்தாரியல் தொடர்பான ஆய்வுத் துறையை நான் பற்றிக் கொள்ளக் காரணமாக அமைந்த பதிப்புச் செம்மல் ச.மெய்யப் பனாருக்கும், அவரது மணிவாசகர் பதிப்பகத்திற்கும் நன்றி.

தொடர் கட்டுரை எழுதத் தம் இதழில் இடம் கொடுத்ததோடு, இப்போது அதனை நூல் வடிவிலும் வெளியிட்டு உதவ முன் வந்துள்ள ஆச்சி வந்தாச்சு ஆசிரியர் நா.பழநியப்பனுக்கு நன்றி. நல்ல முறையில் அச்சிட்டு, நூலுக்குச் சிறந்த வடிவமைப்புச் செய்து தந்த ஸ்ரீ விநாயகா ஸ்கிரீன்ஸ் (ஆப்செட் பிரிண்டர்ஸ்) அச்சகத்தாருக்கும் நன்றி. புகைப்படங்கள் தந்து உதவிய நண்பர் முனைவர் வ.தேனப்பன் அவர்களுக்கும் நன்றி.

அன்புடன்

கரு. முத்தய்யா

நன்றியுரை

நூலைப் பற்றிய அடிப்படைச் செய்திகள் முதற்பதிப்புக்கு நான் எழுதிய முன்னுரையில் உள.

2009, டிசம்பரில் முதல் பதிப்பு வெளி வந்தது. அதற்குப் பிறகும் சில பதிப்புக்கள் வெளி வந்துள்ளன. (எத்தனை பதிப்புக்கள் என்பது எனக்குத் தெரியாது). இவ்வாறு எனக்குத் தெரியாமலே, நான் எழுதிய நூலின் பதிப்புக்கள் வெளியாவதற்கு முற்றுப் புள்ளி வைக்கும் முறையில் நான் இந்த மீள் பதிப்பை (முதல் பதிப்பாளரிட மிருந்து மீட்டு, இப்போதைய பதிப்பாளரிடம் கொடுத்து வெளிவரும் பதிப்பாகையால் இது மீள் பதிப்பு) வெளியிட முடிவு செய்தேன்.

என்னை நகரத்தாரியல் ஆய்வில் நெறிப்படுத்திய பதிப்புச் செம்மல் ச.மெய்யப்பனாரின் மணிவாசகர் பதிப்பகத்தின் வாயிலாகவே இந்த மீள் பதிப்பு வெளிவர வேண்டும் என நான் விரும்பினேன்.

மெய்யப்பனாரின் மகன் ச.மெ.மீனாட்சி சோமசுந்தரத்திடம் நான் இந்த வேண்டுகோளை வைத்தவுடன், அவர் இசைவு தெரிவித்து நூலை வெளியிட்டுள்ளார். அவருக்கும், பதிப்பக மேலாளர் குருமூர்த்திக்கும் நன்றி.

அன்புடன்

கரு. முத்தய்யா

உள்ளடக்கம்

பதிப்புரை

முனைவர் கரு.முத்தய்யாவின் நகரத்தார் வாழ்வியல் நூல் புதிய பதிப்பாக வெளிவருகிறது. அவரது நூலை முதற் பதிப்பாயினும், புதிய பதிப்பாயினும், எப்போதும் வெளியிட மணிவாசகர் பதிப்பகம் தயாராகவே இருக்கிறது.

கரு. முத்தய்யா அவர்களின் நகரத்தாரியல் ஆய்வு எவ்வளவு முழுமையானது, ஆழமானது என்பதை இந்த நூலை நுணுகிக் கற்போர் புரிந்து கொள்ளலாம். அணிந்துரையில் பேராசிரியர். தமிழண்ணல் கூறியிருப்பதைப்போல் இந்நூல் ஒரு சிறந்த பார்வை நூலாகத் திகழ்கிறது (Reference Book)

நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்த இன்றைய இளைய தலைமுறையினருக்கு, இச்சமூகத்தின் மரபையும், பெருமைகளையும் விளக்கும் இந்நூலை மணிவாசகர் பதிப்பகம் மகிழ்ச்சியோடு வெளியிடுகிறது.

அன்புடன்

ச.மெ.மீனாட்சி சோமசுந்தரம்

சென்னை

செப்டம்பர், 2018.

நகரத்தார் வாழ்வியல்

ஒரு குழந்தை தாயின் கருவில் உருவானதில் இருந்து, அக்குழந்தை பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, மறையும் வரை, ஏன், மறைந்த பின்னும் கூட அது தொடர்பான சிறப்பு நிகழ்ச்சிகள் (விசேடங்கள், அனுவல்கள்) குடும்பங்களில் நிகழ்வது என்பது சமூக இயல்பு, நகரத்தார் சமூகத்தில் நடைபெறும் இவ்வாறான குடும்பச் சிறப்பு நிகழ்ச்சிகளைப் பிறப்புக்கு முன்பிருந்து தொடங்கி, இறப்புக்குப் பின்னர் வரை வரிசைப்படுத்தித் தருவது இந்நூலின் நோக்கம்.

இச்சிறப்பு நிகழ்ச்சிகள் ஏன் நடத்தப் பெறுகின்றன? அவற்றின் நோக்கம் என்ன? உட்பொருள் என்ன? நடைமுறையில் அவை எவ்வாறு நடத்தப்பெறுகின்றன? காலப்போக்கில் அவற்றில் ஏற்பட்டுள்ள மாறுதல் யாவை? இப்போது நடைபெறாமல் நின்றுபோன அல்லது மறக்கப்பட்டு விட்ட சிறப்பு நிகழ்ச்சிகள் யாவை? அவை ஏன் மறைந்தன? என்பது போன்ற செய்திகளையெல்லாம் நம் சமூகத்தின் இளைய தலைமுறையினர் தெரிந்து கொள்ளும் பொருட்டு எழுதப்பெறும் இந்நூல் முதலில் நம் சமூக இதழான ஆச்சி வந்தாச்சு இதழில் மாதம் தோறும் தொடராக வெளியாயிற்று.

ஒரு குடும்பத்தின் தலைப்பிள்ளை தாயின் கருவில் உருவானவுடன், ஐந்து அல்லது ஏழாவது மாதத்தில் அக்குழந்தை தொடர்பான முதல் குடும்பச் சிறப்பு நிகழ்ச்சி மருந்து குடித்தல் என்ற நிகழ்ச்சியாகத் தொடங்குகிறது.

நிறைவாழ்வு வாழ்ந்து, குடும்பத்தினர் தேவைகளை நிறைவு செய்து, இறந்த பெரியவர்களுள் சிலர், அவர்தம் வழிமுறையினரால் தெய்வமாக ஏற்றுக்கொள்ளப்பெறும் நடைமுறை நம் சமூகம் உள்ளிட்ட அனைத்துச் சமூகங்களிலும் காணப்பெறும் மரபு, இவ்வாறு இறந்து, தெய்வமானவர்களை, நினைத்து அக்குடும்பத்தினர் நிகழ்த்தும் ஒரு சிறப்பு நிகழ்ச்சி படைப்பு ஆகும்.

எனவே, நகரத்தார் குடும்பச் சிறப்பு நிகழ்ச்சிகள் என்பவை மருந்து குடித்தலில் தொடங்கிப் படைப்பில் முடிகிறது. அவை அனைத்தின் பட்டியல் வருமாறு :

மருந்து குடித்தல்

பிள்ளை பெறக் கூட்டுதல்

பேறு சொல்லல் – கேட்டல்
பிள்ளை பார்க்க வருதல்
பிள்ளையை அழைத்துச் செல்லுதல்
பிள்ளைக்குக் காது குத்துதல்
பெயர் வைத்தல்
முதல் முடி எடுத்தல்
தொட்டில் கட்டுதல்
விளையாட்டுப் பெட்டி வேவு
புதுமை
பிறந்தநாள் விழா
கிலுக்கி எடுத்தல்
அம்பு போடுதல்
கொப்பி கொட்டுதல்
பள்ளியில் வைத்தல்
கார்த்திகைப் புதுமை
திருவாதிரை
சடங்கு கழித்தல்
திருமணம் பேசி முடித்துக் கொள்ளுதல்
முகூர்த்தக்கால் ஊன்றுதல்
திருமணம்
மாம வேவு
காய்ச்சி ஊற்றுதல்
பழந் தேங்காய் கொடுத்தல்
முதலாண்டு தீபாவளிக்கு
(தலைத் தீபாவளிக்கு) வருதல்
பொங்கற்பானை கொடுத்தல்
வேறு வைத்தல்
திருமண நாள்
ஐம்பத்தொன்பது சாந்தி
மணி விழா
முத்து விழா (எழுபது)
பிறையாயிரம் கண்ட பெருவிழா (எண்பது)
தாலிகொண்டு வருதல்
இழவு கூட்டுதல்
திதி கொடுத்தல்
படைப்பு

கருவிலிருந்து கலியாணம் வரை

மருந்து குடித்தல்

நகரத்தார் குடும்பங்களில் தலைக் குழந்தைக்காகக் கருவுறும் பெண்ணின் வாழ்வில் நடைபெறும் சிறப்பு இது. கருவுற்றதிலிருந்து ஐந்தாவது அல்லது ஏழாவது மாதத்தில் இது நடத்தப்பெறும்.

ஒரு பெண், முதன் முதலாகக் கருவுறும்போது, அக்கரு நன்முறையில் வளரவும், மகப்பேறு எளிதாக அமையவும் தக்கவண்ணம், அப்பெண்ணுக்கு நாட்டு மருந்து இடித்துக் கொடுப்பது பழக்கம்.

முதற் குழந்தை என்பது ஒரு குடும்பத்தின் பெயர் விளங்கப் பிறக்க உள்ள, அடுத்த தலைமுறையின் தோற்றம் ஆகும். எனவே, அக்குழந்தை கருநிலையில் நன்கு வளர வேண்டும், பிள்ளைப்பேறு தொல்லையின்றி நிகழ வேண்டும் என்பவற்றில் கருவுற்ற பெண்ணின் கணவன் வீட்டார் மிகுந்த அக்கறை கொள்கின்றனர்.

முதன் முறை கருவுற்ற பெண்ணுக்கு வளைகாப்பு, அல்லது சீமந்தம் எனும் பெயரால் சிறப்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது. பிற சமூகங்களில் இந்நிகழ்ச்சி, கருவுற்ற பெண்ணின் தாய் வீட்டார் நடத்தும் நிகழ்ச்சியாக அமைகிறது. ஆனால் நகரத்தார் சமூகத்தில் கருவுற்ற பெண்ணின் கணவன் வீட்டிலேயே இச்சிறப்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது. தங்கள் குடும்பத்தின் பெயர் சொல்ல, பிறக்க இருக்கும் பிள்ளையின் நலத்தில் அவர்கள் காட்டும் அக்கறையின் வெளிப்பாடு இது.

மருந்து குடிக்கும் நல்ல நாளில் பங்காளிகள், உறவினர்கள் அழைக்கப்பெறுவர். கருவுற்ற பெண்ணின் நாத்தனார் மருந்து இடித்து, அப்பெண்ணுக்கு மூன்று முறை ஊற்றிக் கொடுப்பார். ஆனால் இம்மரபுப் படியான, மருந்து குடித்தல் எனும் சிறப்பு நிகழ்ச்சி நகரத்தார் குடும்பங்களில் ஒரு பகுதியினரால் மட்டுமே இப்போதும் கைக்கொள்ளப் பெற்று நடந்து வருகிறது.

பெரும்பாலான நகரத்தார் குடும்பங்களில் மருந்து குடித்தலுக்குப் பதிலாகத் தீர்த்தம் குடித்தல் எனும் சிறப்பு நிகழ்ச்சி நடக்கிறது.

குறித்த நாளில், கருவுற்ற பெண்ணின் குடும்பத்தினர், தங்கள் குலதெய்வக் கோவில் அல்லது தங்கள் பொதுப்படைப்புக்குரிய சாமி

வீட்டிற்குப் பங்காளிகள் உறவினர்களையெல்லாம் அழைத்துக் கொண்டு செல்கின்றனர். அங்கே அச்சாமியின் புனிதத் தீர்த்தத்தை நாத்தனார் மூன்று முறை கொடுக்க, கருவுற்ற பெண் அதைக் குடிப்பாள். இத்தீர்த்தம் கருவையும், மகப்பேற்றையும் நலமுடையதாக ஆக்கும் என்ற நம்பிக்கையே இதன் பின்னணி.

உடல் நலம் தொடர்புடைய, ஆழமான காரணத்தோடு அமைந்த ஒரு சிறப்பு நிகழ்ச்சி, நம்பிக்கை அடிப்படையில், சமயத்தொடர்புடைய ஒரு சடங்கு நிகழ்ச்சியாக மாறிப்போன நிலைதான் மருந்து குடித்தல், தீர்த்தம் குடித்தலாக மாறியிருக்கும் பண்பாட்டு மாற்றம் ஆகும்.

பிள்ளை பெறக் கூட்டுதல்

ஒரு பெண்ணின் பிள்ளைப்பேற்று நிகழ்வு, அவள் தாய் வீட்டில் நிகழ்வதுதான், நடைமுறையில் பல்வேறு வாய்ப்பு வசதிகளை உடையதாக அமையமுடியும். எனவே, நகரத்தார் சமூகத்தில் கருவுற்ற பெண்ணை, அவள் கருவுற்ற ஏழு அல்லது ஒன்பதாவது மாதத்தில் தாய் வீட்டார், கணவன் வீட்டிலிருந்து அழைத்துச் செல்வது மரபு.

பிறக்க உள்ள குழந்தை, தலைக் குழந்தையாக இருந்தால், இம்மரபு நிகழ்ச்சி ஒரு குடும்பச் சிறப்பு நிகழ்ச்சியாக, பங்காளிகள், உறவினர்களையும் அழைத்து நிகழ்த்தப்பெறும். இல்லையேல் கருவுற்ற பெண்ணின் தாய் வீட்டார் மட்டும் அவள் வீட்டிற்கு வந்து அவளை அழைத்துச் செல்வர்.

பேறு சொல்லல் – கேட்டல்

பதினாறு வகைப் பேறுகளில் ஒன்று பிள்ளைப்பேறு. அந்த அடிப்படையில், ஒரு பெண்ணின் குழந்தைப் பேற்றிற்குத் துணை செய்வதைப் பேறு இடுதல் என்றும், குழந்தைபெற்ற மகிழ்ச்சியைப் பங்காளிகளுக்கும், உறவினர்களுக்கும் சொல்வதைப் பேறு சொல்வது என்றும் அவர்கள் வீட்டிற்கு வந்து பிள்ளை பிறந்ததைக் கேட்டு மகிழ்வதைப் பேறு கேட்டல் என்றும் வழங்குவது நகரத்தாரின் நற்றமிழ் மரபு.

ஆனால், இன்றோ, இச்சொற்கள் நம் ஆச்சிமார்களின், பேச்சு வழக்கில் மருவி, போரிடுதல் என்றும் போருகேட்டல் என்றும் வழங்கப் பெறுகின்றன.

ஒரு குழந்தை பிறந்தவுடன் அவ்வீட்டார் (அப்பத்தாள் வீட்டினர், ஆயா வீட்டினர் இருவரும் தனித்தனியே) தம் பங்காளிகள், உறவினர்கள் வீடுகட்குச் செய்தி சொல்லி அனுப்புவர். அன்று முதல் சில நாட்கள் பங்காளிகளும், உறவினர்களும் ஒவ்வொருவராகக் குழந்தை பிறந்த வீட்டிற்கு வருவர்.

அக்குடும்பத்தார் ரொட்டி, மூன்று அல்லது நான்கு வகை மிட்டாய்கள் (சிலர் இன்னும் கூடுதலாக) கற்கண்டு இவை வைக்கப்பெற்ற மிட்டாய்த் தட்டினை வைப்பர். வந்தவர்கள் பேரன் பிறந்திருக்கிறானே பேத்தி பிறந்திருக்கிறாளே என்று கேட்டுவிட்டு மிட்டாய் ரொட்டி எடுத்துக் கொள்வர், பின்னர் சுவைநீர் அல்லது காப்பி வழங்கப்பெறும் தொடர்ந்து வெற்றிலைத் தாம்பாளம் வைப்பர். பேறு கேட்க வரும் பெண்களுக்குக் குங்குமம், பூ முதலியவற்றையும் கொடுப்பர்.

தங்கள் குடும்பத்துப் பெண் (மருமகள்) பெற்றுப் பிழைத்திருக்கும் மகிழ்ச்சியையும், தங்கள் குடும்பத்துப் புது வரவினையும் பங்காளிகள், உறவினர்களுக்கு அறிவிப்பதும், அவர்களோடு மகிழ்வைப் பகிர்ந்து கொள்வதுமே இச்சிறப்பு நிகழ்ச்சியின் நோக்கம். எனவே, ஊரில் இருக்கும் பங்காளிகள் உறவினர்கள் அனைவரும் பேறு கேட்பது எனும் நல்ல வழக்கம், நகரத்தார் சமூகத்தில் இன்றும் நின்று நிலவிவருகிறது.

பிள்ளை பார்க்க வருதல்

ஒரு குடும்பத்தின் தலைக் குழந்தை பிறந்தவுடன் (இக்குழந்தைப் பேறு ஆயாள் வீட்டில் நடைபெறும்) பிள்ளையின் அப்பத்தாள் வீட்டினர், தமக்கு மிக நெருங்கிய உறவினர் சிலரை அழைத்துக் கொண்டு, பிள்ளையைப் பார்ப்பதற்காக, பிள்ளையின் ஆயாள் வீட்டிற்கு வருவர். தங்கள் குடும்பத்துப் புது வரவினை, தங்கள் நெருங்கிய உறவினர்கட்குக் காண்பித்து, தங்கள் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வதே இந்நிகழ்ச்சியின் நோக்கம். வருவோர் அனைவர்க்கும் ஆயாள் வீட்டில் சிறப்பான முறையில் விருந்து நடைபெறும்.

பிள்ளையை அழைத்துச் செல்லுதல்

பிள்ளை பிறந்து ஒரு திங்கள் ஆனதும், பிள்ளையையும் தாயையும் ஆயாள் வீட்டிலிருந்து, அப்பத்தாள் வீட்டிற்கு அழைத்துச்

செல்வர். பிறந்தது தலைப்பிள்ளையாக இருப்பின், இதுவும் சிறப்பான நிகழ்ச்சியாக இரு பக்கத்திலும் நெருங்கிய உறவினர்கள் அழைக்கப் பெற்று, விருந்து முதலியவற்றோடு நிகழும், தங்கள் குடும்பத்தின் பெயர் விளங்கப் பிறந்திருக்கும், அடுத்த தலைமுறையின் அடையாளமாக அமையும் பிள்ளையைத் தங்கள் வீட்டிற்கு அழைக்கும் நிகழ்ச்சி, உறவினர் பங்கேற்கும் விழாவாக அமைய வேண்டும் என்ற நோக்கத்திலேயே இது நிகழ்கிறது.

அடுத்தடுத்த பிள்ளைகள் பிறக்கும்போதும் கூட (பிள்ளை ஆயாள் வீட்டில் பிறப்பதே மரபு) அப்பத்தாள் வீட்டினர் (பிள்ளையின் தந்தை மட்டுமாவது), வந்து பிள்ளை பார்ப்பதும் ஒரு திங்களுக்குப் பின், பிள்ளையை அழைத்துச் செல்வதும் நிகழும், ஆனால், உறவினர்கள் அழைக்கப்பெற்று, விழாவாக நிகழ்வது இல்லை. ஒரு குடும்பத்தின் தலைப்பிள்ளை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நகரத்தார் சமூகத்தின் இச்சிறப்பு நிகழ்ச்சிகள் (மருந்து குடித்தல், பிள்ளை பெறக் கூட்டுதல், பிள்ளை பார்க்க வருதல், பிள்ளையை அழைத்துச் செல்லுதல்) நமக்கு நன்கு உணர்த்துகின்றன.

காது குத்துதல்

பிள்ளை பிறந்து பதினாறாவது அல்லது இருபத்தோராவது நாளில் அதற்குக் காது குத்தித் தோடு அணிவிக்கப்பெறும். எனவே, பெரும்பாலும் இந்நிகழ்ச்சி ஆயாள் வீட்டில் நிகழும். ஆயினும் நகரத்தார் சமூகத்தைப் பொறுத்தவரை, இதற்கு உறவினர்களோ, பங்காளிகளோ அழைக்கப் பெறுவதில்லை.

பெயர் வைத்தல்

பிள்ளைக்குப் பெயர் வைப்பதும், உறவினர், பங்காளிகளை அழைத்து, நடத்தப் பெறுவதில்லை. ஆயினும், அந்தந்தக் குடும்ப மரபிற்கேற்ப, பெயர் வைக்கும் நிகழ்ச்சி நடத்தப்பெறும். சிலர் தங்கள் குலதெய்வக் கோவிலுக்குக் குழந்தையைக் கொண்டு செல்வர். அங்கே அர்ச்சகரிடத்தில் (பூசாரியிடத்தில்) பிள்ளைக்கு வைப்பதாக முடிவு செய்திருக்கும் பெயரைச் சொல்லி, தெய்வத் திருமுன்பு, பூசாரி, குழந்தையை, முதன் முறையாக, பெயர் சொல்லி அழைப்பார். (மூன்று முறை பெயர் சொல்லி அழைப்பதும் உண்டு)

பெரும்பாலான குடும்பங்களில் இந்நிகழ்ச்சி இல்லத்திலேயே (அப்பத்தாள் வீட்டில்) நிகழும். குடும்பப் பெரியவர் (பாட்டய்யா, பெரிய அய்யா, அய்யா போன்ற ஒருவர்) குழந்தையை முதன் முறையாக, (மூன்று முறை) பெயர் சொல்லி அழைப்பார்.

பிள்ளையை அப்பத்தாள் வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு வந்த பின்னர், ஒரு நல்ல நாளில் இந்நிகழ்ச்சி நடைபெறும்.

முதல் முடி எடுத்தல்

இது ஒரு சமயம் சார்ந்த சடங்கே தவிர, சிறப்பு விழாவன்று, நகரத்தார் சமூகத்தில் இதற்கு, உறவினர் பங்காளிகள் அழைக்கப் பெறுவதில்லை. விருந்து நடைபெறுவதில்லை.

அந்தந்தக் குடும்பத்தின் பழக்கத்திற்கு ஏற்ப, பிள்ளை பிறந்து ஒரு திங்கள் அல்லது ஆறு திங்கள், அல்லது ஓராண்டு முடிந்ததும் முதல் முடி எடுப்பர். சில குடும்பத்தினர் தங்கள் குல தெய்வக் கோவிலில் முதல் முடி எடுப்பர். வேறு சிலர் தங்கள் ஊர்க்கோவிலில் (சிவன் கோவில், அம்மன் கோவில், ஐயனார் கோவில் இவற்றில் ஏதேனும் ஒன்றில்) முதல் முடி எடுப்பர். சில குடும்பத்தினர் ஒரு குறிப்பிட்ட கோவிலில் (குன்றக்குடி, அரியக்குடி, அழகர்கோவில், நாட்டரசன் கோட்டை போன்ற சிறப்பு மிக்க கோவில்களில் ஒன்றில்) தங்கள் குடும்பத்தில் பிறக்கும் ஒவ்வொரு பிள்ளைக்கும் முதல் முடி எடுப்பார்கள்.

தொட்டில் கட்டுதல்

நகரத்தார் வாழும் ஊர்களிலும் நகரத்தார் குலதெய்வக் கோவில்களிலும், நகரத்தார் கொண்டாடி வணங்கும் கோவில்களிலும், கோவில் திருவிழாக்களில் பிள்ளைகளுக்குத் தொட்டில் கட்டுதல் என்பது ஒரு சிறப்பு நிகழ்ச்சி. பணியாளர்கள் கரும்புக்கட்டைத் (பெரும்பாலும் 3 முழுக் கரும்புகள் கொண்ட கட்டாக இருக்கும்) தூக்கிக்கொள்ள, அக்கரும்பில் சேலையைக் கொண்டு தொட்டில் கட்டப்பெறும். அத்தொட்டிலில் பிள்ளையைப் போட்டு, தொட்டிலைத் தூக்கிக் கொண்டு, மேளதாளத்துடன் கோவிலை வலம் வருவர்.

தலைப்பிள்ளை என்றில்லாமல், அனைத்துப் பிள்ளைகட்கும், பிள்ளையின் அப்பத்தாள் ஊர்த்திருவிழா, ஆயாள் ஊர்த் திருவிழாக்

களில் தொட்டில் கட்டுவர். அக்குடும்பத்தினரின் குலதெய்வக் கோவிலிலும் தொட்டில் கட்டுவதுண்டு. தனிப்பட்ட வேண்டுதல்கள் செய்து கொண்டு, அதனால் பிற தலங்களில் தொட்டில் கட்டுவதும் உண்டு. இந்நிகழ்ச்சி உறவினர், பங்காளிகளை அழைத்து, விருந்து வைத்து நடத்தப் பெறும் சிறப்பு நிகழ்ச்சியன்று.

விளையாட்டுப் பெட்டி வேவு

தலைப்பிள்ளைக்கு மட்டுமே நிகழும் மற்றொரு சிறப்பு நிகழ்ச்சி விளையாட்டுப்பெட்டி வேவு. இதைப்பற்றித் தெரிந்து கொள்ளுமுன், நகரத்தார் சமூகத்தின், வீட்டு விழாக்களில் இன்றியமையாத இடம் பெறும் வேவு பற்றிய சில அடிப்படைப் பொதுச் செய்திகளைத் தெரிந்து கொள்வோம்.

வேவு என்பது பெண்ணின் தாய் வீட்டார் தலைச்சுமையாகக் கொணரும் பொருட்களை, அவள் கணவன் வீட்டார் இறக்கிக் கொள்வது என்ற மரபில் அமைந்த ஒரு சடங்காகும். தொடக்க காலத்தில் பெண்ணின் தாய் வீட்டார் சமைத்த உணவுப் பொருள்களையே, ஓலைக் கடகாம்களில் தலைச்சுமையாகக் கொண்டு வந்தனர். அதனால் வெந்த பொருள்களைக் கொண்டு வருதல் என்ற பொருளில் வேவு கொண்டு வருதல் எனவும், அதனை இறக்கிக் கொண்டதால் வேவு இறக்குதல் எனவும் இச்சடங்கிற்குப் பெயர் அமைந்தது.

வேள் என்றால் விருப்பம் என்று பொருள். பெண்ணின் தாய் வீட்டார் விருப்பத்துடன் கொண்டு வந்து கொடுத்த பொருள்கள் வேள்வு எனப்பெயர் பெற்று வேவு என மருவியிருக்கவும் கூடும்.

வேய்தல் என்றால் கூரையின் மீது பரப்புதல் அல்லது சூடுதல் எனப் பொருள்படும். அம்முறையில் தலைச்சுமையாக (இப்போதும் வேவுக் கடகாம்களைப் பெண்ணின் தாய் வீட்டார் தலைப்பாகை கட்டித் தலைச் சுமையாக வைத்துக் கொள்ளப் பெண்ணின் கணவர் வீட்டார் இறக்கிக் கொள்வதே மரபு) கொண்டுவரப் பட்ட பொருள்கள் வேய்வு எனப்பெயர் பெற்று வேவு எனவும் மருவியிருக்கலாம்.

பொதுவாகக் கடகாம் ஒன்றில் (முன்னர் ஓலைக்கடகாம்: இப்போது எவர் சில்வர் அல்லது வெள்ளிக் கடகாம்: அவற்றிற்கு வாய்ப்பில்லாத இல்லங்களில் பிளாஸ்டிக் வாளி பயன்படுத்தப்படுகிறது) பச்சரிசி,

கத்தரிக்காய், தேங்காய் ஆகியவற்றை வைத்துப் பெண்ணின் தந்தை மற்றும் சகோதர முறையுடையவர்கள் ஒவ்வொருவராகத் தலைச்சமையாகப் பிடித்துக்கொள்ள, பெண்ணின் கணவர் வீட்டுப் பெண்கள் ஒவ்வொருவராக இறக்கிக் கொள்வர்.



வீட்டின் வளவு நடையில் சிலேட்டு விளக்கு வைத்து வேவு இறக்குவர். ஒவ்வொருமுறை வேவுக் கடகாத்தை இறக்கியதும் சாமி வீட்டிற்குள் (அல்லது திருமண வீட்டிற்குள்) அதனைக்கொண்டு போய் வைத்துத் திரும்ப எடுத்து வருவர். ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று என ஒற்றைப் படையில் எண்ணிக்கை அமையும் வண்ணம் வேவு இறக்குவர்.

ஒரு குடும்பத்தில் தலைப்பிள்ளை பிறந்தவுடன், அப்பிள்ளையின் ஆயாள் வீட்டினர் பிள்ளையைப் பார்க்க வரும்போது வழக்கம் போல உணவுப் பொருள்களோடு அப்பிள்ளை விளையாடுவதற்குரிய விளையாட்டுப் பொருள்களையும் தலைச்சுமையாகக் கொண்டு வந்து கொடுப்பது அக்கால மரபு. எனவே, இதற்கு விளையாட்டுப் பெட்டி வேவு என்று பெயர். ஆனால், இப்போது வழக்கமான வேவுப் பொருட்களை மட்டும் வைத்தே இந்த வேவும் இறக்கப்படுகிறது.

செட்டி நாட்டின் சில பகுதிகளில், பிறந்த பிள்ளையையும், தாயையும் அப்பத்தாள் வீட்டுக்கு அழைத்து வந்து விடுகின்ற நாளிலேயே விளையாட்டுப் பெட்டி வேவு இறக்குகின்றனர். பெரும்பாலும், இப்பிள்ளைப் பேற்றிற்குப் பிறகு, அப்பத்தாள் வீட்டில் நிகழும் திருமணம் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளை ஒட்டி ஒரு நாள் மாலையில் விளையாட்டுப் பெட்டி வேவு இறக்குகின்றனர்.

எப்போது நிகழ்ந்தாலும் இருதரப்பு உறவினர்கள், பங்காளிகள் அழைக்கப்பெற்று, விருந்துடன் கூடிய ஒரு சிறப்பு விழாவாகவே விளையாட்டுப் பெட்டி வேவு இறக்குதல் நிகழும்.

காரைக்குடியில், இந்திய அஞ்சல் துறையினர் ஒரு தபால்தலை சேகரிப்புத் திருவிழா (8.1.04 முதல் 10.1.04 முடிய) நடத்தினர். அதன் இரண்டாம் நாளன்று கவியரசர் கண்ணதாசன், செட்டி நாட்டுத் திருமணம் என இரு சிறப்பு அஞ்சல் உறைகள் வெளியிட்டனர். அவ்விரு

உறைகளிலும், சிறப்பு அஞ்சல் முத்திரையாக வேவுக் கடகாத்தை முத்திரை யிட்டனர். இது, நகரத்தார் இல்ல விழாக்களில் வேவு பெறும் சிறப்பிடத்தை ஏனையோரும் கூர்ந்து கவனித்துப் புரிந்து கொண்டிருப்பதைக் காட்டுகிறது.

விளையாட்டுப்பெட்டி வேவு, தலைப்பிள்ளையின் முக்கியத்துவத்தை நகரத்தார் சமூகம் எவ்வாறெல்லாம் உணர்ந்து போற்றுகிறது என்பதற்கு மற்றுமொரு சான்றாகும்.

தலைப்பிள்ளை தாயின் கருவறையில் உருவானதும், ஐந்தாம் மாதம் மருந்து குடித்தலில் தொடங்கி, அப்பிள்ளை விளையாடுதற்குரிய விளையாட்டுச் சாமான்களை ஆயா வீட்டினர் கொணர்ந்து தரும் விளையாட்டுப் பெட்டி வேவு வரை நிகழும் பத்து சிறப்பு நிகழ்ச்சிகள் பற்றி இதுவரை கண்டோம்.

இவை அனைத்தும் நம் முன்னோர் ஆழமான காரணங்களோடு தொடங்கிய சிறப்பு நிகழ்ச்சிகள். அவற்றின் காரணங்களை அறிந்தோ அறியாமலோ இன்றும் நம் சமூகம் பின்பற்றி நடத்திக் கொண்டிருக்கும் சிறப்பு நிகழ்ச்சிகள்.

இனி நாம் பார்க்கப் போகும் சில சிறப்பு நிகழ்ச்சிகள் நம் சமூகத்தினரால் இப்போது நடத்தப் பெறாமல் மறைந்து கொண்டிருக்கும் சிறப்பு நிகழ்ச்சிகள் ஆகும். இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் முதிய தலை முறையினர் இச்சிறப்பு நிகழ்ச்சிகளை நெஞ்சில் நிறுத்தி அசை போட்டுக் கொண்டிருக்கின்றனர். ஆனால் நம் இளைய தலைமுறை யினருக்கோ, இவையெல்லாம் கேள்விப் பட்டிராத சிறப்பு நிகழ்ச்சிகளாகும். எனவே, அவர்கள் இவற்றை அறிய வேண்டும் என்ற நோக்கத்தோடு இவை குறித்த செய்திகளைப் பார்ப்போம்.

புதுமை

நகரத்தார் குடும்பங்களில் பிறந்த முதல் ஆண் குழந்தை, முதல் பெண் குழந்தை ஆகியோரைக் கொண்டாடிய விழாவே புதுமையாகும். காப்புக் கட்டுப் புதுமை என்றும் இவ்விழா அழைக்கப்பெற்றது. முதற் குழந்தை பிறந்த ஓராண்டில் அக்குழந்தையின் முதல் ஆண்டு நிறைவு விழா, புதுமை என்ற சிறப்பு நிகழ்ச்சியாகக் கொண்டாடப் பெற்றது.

முதற் குழந்தை ஆண் குழந்தையாக இருந்து, அதற்குப் புதுமை நிகழ்த்திய பிறகு, இரண்டு அல்லது மூன்றாண்டுகள் கழித்து முதற்பெண் குழந்தை பிறந்தால், அதன் ஓராண்டு நிறைவை ஒட்டி அதற்குப் புதுமை

நிகழ்த்தப் பெற்றது. அதற்குப் பின் பிறக்கும் ஆண், பெண் குழந்தைகட்கு இவ்விழா நிகழ்த்தப் பெறவில்லை.

முதல் ஆண் குழந்தை, முல்பெண் குழந்தை இரண்டும் தங்கள் குடும்பத்திற்கு வந்த புதுவரவு என்பதை ஊருக்கும், உறவுக்கும் காட்டிமகிழ்ந்த விழா ஆகையால் இது புதுமை எனப்பெயர் பெற்றது.

நாளடைவில் முதற் குழந்தை (ஆண் அல்லது பெண்) பிறந்து ஓராண்டை எட்டும் போது, அடுத்த குழந்தை (பிறந்தது போக மற்றைய பாலினக் குழந்தையும், பிறந்த பிறகு, இரண்டு குழந்தைகட்கும் சேர்த்துக் காப்புக்கட்டுப் புதுமை நடத்தலாம் எனக்குடும்பத்தின் பொருளியல் காரணங்களால் இரண்டு புதுமை விழாக்களை, ஒன்றாக்கிக் கொண்டாடத் தொடங்கினர்.

அவ்வாறு கொண்டாடும் போது அண்மையில் பிறந்த குழந்தை ஓராண்டு நிறைந்ததாகவும், முன்னரே பிறந்த குழந்தை மூன்று முதல் ஐந்தாண்டுகளுக்குள் நிறைவு பெற்றதாகவும் அமையும்.

புதுமை, உறவினர்கள், பங்காளிகள், ஊரார் அனைவரையும் அழைத்து நடத்தப்பெறும் ஒரு பெரிய சிறப்பு நிகழ்ச்சியாகும். புதுமை கொண்டாடிய குழந்தைக்கு நான்கைந்து நாட்களில் முடி இறக்குவதும், அதற்கு அடையாளமாக விழா நாளில் ஒரு முடியை எடுப்பதும் வழக்கமாக இருந்தது.

குழந்தையைத் திரைமறைவில் வைத்து அலங்காரம் செய்து, மாராப்புக் கட்டிய பின், வளவு வாசலுக்குக் குழந்தையை அழைத்து வருவர். அங்கே ஊரும், உறவும் கூடியிருக்க, குழந்தையை மரவையில் வைத்து அத்தைமார்கள் சுற்றுவார்கள். புதுமைக்கு வந்தவர்களுக் கெல்லாம் ரொட்டி, மிட்டாய்ப்பை போட்டுக் கொடுப்பதும் வழக்கமாக இருந்தது.

இப்போது இச்சிறப்பு நிகழ்ச்சியே நின்று போய், மறைந்து போய் விட்டது. அதற்குரிய முதற் காரணம், பொருளியல் காரணம் ஆகும். குடும்பச் சிறப்பு நிகழ்ச்சிகளைப் பெரிய விழாக்களாக நடத்துவது பெரும் செலவு, எனவே, அவற்றைக் குறைக்க வேண்டும் என்ற எண்ணம் எல்லோருக்கும் இயல்பாக எழுவதே. ஆயினும், சிறந்த காரணங்களோடு கூடிய விழாக்களை யாரும் நிறுத்தவில்லை.

ஆனால், புதுமை என்பது ஏறத்தாழ முதலாண்டு நிறைவு நாள் விழாதான் என்ற அடிப்படையில் சிந்தித்தால், ஒரு திருமண விழாவின் செலவில் பாதியளவு செலவு செய்து, இந்த விழாவைக் கொண்டாட வேண்டுமா? என்ற எண்ணம் தனித்தனியே பலருக்கும் தோன்றி யிருக்க வேண்டும். எனவே, கூட்டம் கூடி முடிவெதுவும் எடுக்காமலே இப்புதுமை விழா நாளடைவில் சமூகத்தினரால் கைவிடப்பெற்று மறைந்து விட்டது.

அதே நேரத்தில் ஆங்கில நாகரிகத் தாக்கத்தின் விளைவாக, பிறந்த நாள் விழா கொண்டாடும் பழக்கம் அனைத்துச் சமூகத்தினரையும் பற்றிக் கொண்டதுபோல நகரத்தார் சமூகத்தையும் பற்றிக் கொண்டுள்ளது.

நம்மவர்கள், தலைப்பிள்ளையின் (அது ஆணாயினும், பெண்ணாயினும்) முதலாண்டு நிறைவு நாளை, இருதரப்புப் பெற்றோர், தாம் வாழும் இடத்திலும், பணியாற்றும் இடத்திலும் பழகியோர் ஆகியோரை அழைத்து, மாலைச் சிற்றுண்டி (அல்லது இரவுச் சிற்றுண்டி) வழங்கி, கேக் வெட்டி, சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். இது நம் சமூகத்தைப் பொறுத்தவரை புதுமையின் பதிலி என நாம் பொருத்திப் பார்த்துக் கொள்ளலாம். ஆனால் இது நாகரிக மாற்றத்தின் விளைவே.

தலைப்பிள்ளையின் அடுத்தடுத்த பிறந்த நாள்கள், பின்னர் பிறக்கும் பிள்ளைகளின் பிறந்த நாள்கள் ஆகியவற்றிலும், பிள்ளைக்குப் புத்தாடை அணிவிப்பதும், அப்பிள்ளையை, அண்டை வீட்டார்க்கும், தான் பயிலும் பள்ளிப் பிள்ளைகட்கும் மிட்டாய் வழங்கச் செய்வதும் ஆகிய நிகழ்ச்சிகள் ஏனைச் சமூகத்தாரைப் போல நம்மவராலும் செயற்படுத்தப் படுகின்றன என்பது இந்நாகரிக மாற்றத்தைப் பறை சாற்றும் சான்றுகளாம்.

புதுமை போலவே, நம் சமூகத்திலிருந்து முற்றிலும் மறைந்துவிட்ட, அல்லது மறைந்து கொண்டிருக்கின்ற, சில சிறப்பு நிகழ்ச்சிகளை இனிக் காணலாம்.

கிலுக்கி எடுப்பு – அம்பு போடுதல்

நகரத்தார் குடும்பத்து ஆண் பிள்ளைகள் தங்கள் இளமைக் காலம் முழுவதும், ஆண்டுதோறும், புரட்டாசி மாதம் மகார் நோன்பு விழாவின் தொடக்க நாளன்று கிலுக்கி எடுப்பும், இறுதி நாளன்று அம்பு போடுதலும் ஆகிய சிறப்பு நிகழ்ச்சிகளைச் செய்து வந்தனர்.

புரட்டாசி மாதம் வரும் அமாவாசை மகாளய அமாவாசை எனப்படும். அந்த அமாவாசை தொடங்கிப் பத்து நாட்கள் விசயதசமி, தசரா போன்ற பெயர்களில் விழாவாக இந்தியா முழுவதும் கொண்டாடப் பெறுகிறது. இவ்விழாவைச் செட்டிநாட்டுப் பகுதியில் நவராத்திரி விழா என்பர். இவ்விழாவின் தொடக்க நாளில் (அமாவாசை அன்று) கிலுக்கி எடுப்பு நடைபெறும். இறுதி நாளன்று (10 ஆம் நாளில்) அம்பு போடுதல் நடைபெறும்.

செட்டிநாட்டு ஊர்களில், மகார் நோன்பு அன்று, ஊர்ப் பொது இடத்தில் ஒரு திடலில் அவ்வூர் ஆலயத்திலிருந்து சாமி எழுந்தருளி அம்பு போடும். (சில ஊர்களில் ஒன்றுக்கு மேற்பட்ட சாமிகள் எழுந்தருளி அம்புபோடுகின்றன) அந்த இடத்தில் ஒரு வாழை மரம் கட்டப் பெற்றிருக்கும். அந்த மரத்தில் நகரத்தார் குடும்பங்களைச் சேர்ந்த ஆண் பிள்ளைகள் அம்பு போடுதல் எனச் சொல்லி ஓர் ஆயுதத்தால் குத்துவார்கள். அந்த ஆயுதத்திற்குக் கிலுக்கி என்பது பெயர்.

இந்தக் கிலுக்கி வெள்ளியில் அல்லது எவர்சில்வரில் செய்யப் பெற்று நகரத்தார் குடும்பங்கள் தோறும் இருக்கும். நவராத்திரி விழாத் தொடக்க நாளில், இந்தக் கிலுக்கி வெளியே எடுக்கப்பெற்று, அக்குடும்பத்தைச் சேர்ந்த ஆண் பிள்ளையிடம் கொடுக்கப்பெறும். அப்பிள்ளையைக் கையில் ஆயுதத்தோடு கோவிலுக்கு அழைத்துச் சென்று வழிபட்டுத் திரும்புவர். இதுவே கிலுக்கி எடுப்பு எனும் சிறப்பு நிகழ்ச்சி ஆகும்.

நம் சமூகத்தினர் முற்காலத்தில் படைப்பயிற்சி போர்ப் பயிற்சி உடையவர்களாக இருந்தார்கள் என்பதை நினைவுபடுத்தும் ஒரு சிறு அடையாளமே இச்சிறப்பு நிகழ்ச்சி எனலாம். இயற்பகை நாயனார் நம்மவர் ஆவார். அடியவர் வேடத்தில் வந்த ஆண்டவனின் வேண்டுதலை ஏற்று, இயற்பகையார் தம் மனைவியை அவரோடு அனுப்பிய போது, அதனைத் தடுக்க வந்த, அவர் உறவினர் அனைவரும் ஆயுதம் தாங்கிப் போரிட்டனர் என்றும், இயற்பகையார் தனி ஒருவராகப் போரிட்டு அவர்களனைவரையும் வென்றார் என்றும் பெரிய புராணம் காட்டுகிறது.

இப்போது இச்சிறப்பு நிகழ்ச்சி பெரும்பாலும் மறைந்து போய்விட்டது காரணங்கள் இரண்டு. முதற்காரணம் நடைமுறை வாழ்க்கை தொடர்பானது. ஆண்டுதோறும் புரட்டாசி மாதம் பத்து நாட்கள் தம் சொந்த

ஊரில் வந்து இருந்து கிலுக்கி எடுத்து, அம்பு போடப் பெரும்பாலான நகரத்தார் குடும்பத்தினரால் இயலவில்லை. அவரவர்கள் வேலை அல்லது தொழில் செய்யும் ஊர்களில், இந்நிகழ்ச்சிகளை நடத்தவும் இயலாது. ஏனெனில் இழை எடுத்தல் போல, நம் இல்லத்திற்குள் நடக்கும் நிகழ்ச்சியல்ல இவை. எனவே, இவை கைவிடப் பெற்று வருகின்றன. மற்றொரு காரணம், நம் சமூகத்தினரின் இன்றைய வாழ்வியலில் படைப்பயிற்சி, போர்ப்பயிற்சி என்பவை நம்மோடு முற்றிலும் தொடர்பற்றவையாகி விட்டன. அதனாலும் இவ்விழா தேவையற்றதாகக் கருதப்பெற்றுக் கைவிடப்பெற்று வருகிறது எனலாம்.

எப்படியாயினும் இவ்விழாவின் பெயரைக் குறிக்கும் மகார் நோன்பு என்ற சொல் நம் சமூகத்தினரின் தனித்தமிழ் கையாளும் போக்கை எடுத்துக் காட்டுகிறது. மகார் எனும் சொல் சிறுவர் என்ற பொருளில் சங்க இலக்கியத்தில் காணப்பெறும் சொல்லாகும். சிறுவர் தொடர்புடைய விழாவை மகார் நோன்பு என அழைத்த நம்மவர்தம் மொழிப் பற்றும் அறிவும் வியந்து போற்றத் தக்கவை.

கொப்பி கொட்டுதல்

நகரத்தார் குடும்பத்துச் சிறுவருக்குரிய சிறப்பு நிகழ்ச்சி அம்பு போடுதல் என்றால், சிறுமியர்க்குரிய சிறப்பு நிகழ்ச்சி கொப்பி கொட்டுதல் ஆகும். ஆண்டுதோறும் தை மாதம் மாட்டுப் பொங்கலன்று இச்சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

பொங்கலன்று வீட்டுக்குள் விளக்குச் சட்டியில் தேங்காய், பழம், கரும்பு பனங்கிழங்கு, சர்க்கரை வள்ளிக்கிழங்கு, நெல்கொத்து, கண்ணுப்பூ (சிறுபூளை) ஆகியவற்றை வைத்துச் சாமி கும்பிடுவர். இப்பொருட்களை மறுநாள் (மாட்டுப் பொங்கலன்று) குடும்பத்துச் சிறுமிகள் கொப்பிப் பொட்டலுக்கு எடுத்துச் செல்வர்.

பெரும்பாலும் நகரச் சிவன் கோவிலுக்கு அருகே உள்ள திடலே கொப்பிப் பொட்டலாக இருக்கும். அங்கு வரும் சிறுமியர் தாம் கொண்டு வரும் பொருட்களை நடுவில் வைத்து, வட்டமாகச் சுற்றி நின்று கும்மி கொட்டுவர். இக்கும்மியே மருவிக் கொப்பி ஆகியிருக்கலாம் எனக் கருதுகின்றனர். கும்மி கொட்டிப்பாடிய பின், அங்கு வந்திருக்கும் குடிச் சலவையாளரிடம் தாம் கொண்டு வந்த பொருட்களை வழங்கிவிட்டுச் சிறுமியர் வீடு திரும்புவர், இதுவே கொப்பி கொட்டுதல் ஆகும்.

ஒரு சிறிய வெள்ளித்தட்டில், இப்பொருட்கள் (தேங்காய் பழம் முதலியவை) வெள்ளியினால் செய்யப்பெற்று, பிடியோடு கூடியதாகச் செய்யப் பெறும். அதற்குக் கொப்பித் தட்டு என்பது பெயர். இதனையும் சிறுமியர் கையில் கொப்பிப் பொட்டலுக்கு எடுத்துச் சென்று திரும்பிக் கொணர்வர்.

இச்சிறப்பு நிகழ்ச்சிக்கு ஆழமான காரணம் எதுவும் இல்லாததாலும் நடைமுறையில் பொங்கலையும் தாம் வேலைபார்க்கும். அல்லது தொழில் செய்யும் ஊரிலேயே கொண்டாடுவதாலும் இச்சிறப்பு நிகழ்ச்சியும் இப்போது நம்மவர்களால் கொண்டாடப்பெறுவதில்லை.

பள்ளியில் வைத்தல்

நம் இனத்துப் பிள்ளைகள் அனைவரும் பள்ளிக்கு அனுப்பப் பெறும் காலம் இது. முற்காலத்தில் பல குடும்பங்களில் சிறுவர்களைத் தொழிலுக்காகவும் (வட்டிக்கடை) சிறுமியரை வீட்டு வேலைகளுக்காகவும் பழக்கினால் போதும் என நினைத்துப் பள்ளிக்கு அனுப்பாமலே இருந்தனர்.

ஆனால் அடிப்படைக் கல்வி அளவாவது தேவைதான் என நினைத்துத் தம் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பிய நகரத்தார் குடும்பத்தினர் அதனை உறவினர்களை அழைத்து ஒரு சிறப்பு நிகழ்ச்சியாகவே அக்காலத்தில் நடத்தினர்.

பிள்ளைக்கு ஐந்தாண்டு நிறைந்தவுடன் வரும் விசயதசமியன்று, பிள்ளை படிக்கச் செல்லும் உள்ளூர் ஏட்டுப் பள்ளிக் கூடத்திலிருந்து ஆசிரியர், 20 அல்லது 30 பிள்ளைகளைத் தம் வீட்டிற்கு அழைப்பர். நெருங்கிய உறவினர்களும் வந்திருப்பர். உறவினர்கள், பள்ளிப் பிள்ளைகள், ஆசிரியர் அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பெறும்.

பள்ளிப் பிள்ளைகள் கும்மி, கோலாட்டம் என ஆடிப் பாடி, அந்த வீட்டுப் பிள்ளையையும் அழைத்துக் கொண்டு பள்ளி செல்வர். பெற்றோர், உறவினரும் உடன் செல்வர். பள்ளியில், நெல்லைக் கொட்டி, அதில் ஆசிரியர் பிள்ளையின் கையைப் பிடித்து அ எழுதச் சொல்லிக் கல்வியைத் தொடங்கி வைப்பார். பின்னர் பெற்றோர் உறவினர் தத்தம் வீடு திரும்புவர்.

இப்போது மூன்றரை வயதிலேயே பிள்ளைகள் மழலையர் பள்ளிக்கு அனுப்பப் பெறுகின்றனர். மேலும் பெற்றோர் பணியாற்றும்,

அல்லது தொழில் செய்யும் ஊரிலேயே பிள்ளைகள் கல்வி கற்கின்றனர். உள்ளூரில் கற்றாலும், அங்கும் ஏட்டுப் பள்ளிக் கூடங்கள் இல்லை. எனவே, இச்சிறப்பு நிகழ்ச்சி இப்போது நடைபெறுவது இல்லை.

நகரத்தார் சமூகத்தில் மிகச் சிறப்பாகப் பெரிய அளவில் நடத்தப் பெற்று, இப்போது முற்றிலும் மறைந்துவிட்ட இரு சிறப்பு நிகழ்ச்சிகள் கார்த்திகைப் புதுமையும், திருவாதிரையும். இன்றைய இளைய தலைமுறையினர் இச்சிறப்பு நிகழ்ச்சிகள் பற்றிக் கேள்விப்பட்டிருக்கவே மாட்டார்கள்.

கார்த்திகைப் புதுமை

நகரத்தார் குடும்பத்தில் பத்து வயதைத் தாண்டிய ஆண் பிள்ளைகளுக்குக் கார்த்திகைப் புதுமை செய்வது மரபு. கார்த்திகை மாதம் திருக்கார்த்திகை நட்சத்திரத்தன்று இது நடத்தப்பெறும். கார்த்திகை முருகப்பெருமானுக்குரிய விண்மீன் என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சிறப்பு நிகழ்ச்சியன்று நிகழ்ச்சியின் நாயகனாகிய மைந்தன், மணக்கோலத்தில் அணிகள் செய்யப் பெற்றுக் குதிரை மீதேறி, வீட்டிலிருந்து உறவினர், பங்காளிகள் சூழ ஊர்வலமாகச் சிவன் கோவிலுக்குச் சென்று வழிபட்டுத் திரும்புவான்.

கார்த்திகைப் புதுமையைச் சூப்பிடி என்றும் குறிப்பிடுவர். சூள்பிடி என்பதன் மருவிய வடிவம் என்பர். சுளுந்து அல்லது சூள் என்பது ஒரு காட்டு மரம். அதில் தீவட்டிபோல அமைத்து, அதனைக் குதிரை ஏறிச் சொல்லும் பிள்ளைக்கு முன்னே பிடித்துச் சென்றமையால் இதற்குச் சூப்பிடி என்பது பெயர்.

அந்தணர் இனத்தில் உபநயனம் என்ற சடங்கு பெறும் இடத்தைச் சூப்பிடி பெறும் என்பர் சிலர். மன்னர் பினோராகிய நகரத்தார்கள். அக்காலத்தில் படைப்பயிற்சி, குதிரையேற்றம் முதலிய பயிற்சிகள் பெற்றிருந்தனர் என்பதை இயற்பகையார் வரலாறு உறுதி செய்கிறது. அவ்வாறு படைப்பயிற்சி குதிரையேற்றத்தில் தங்கள் வீட்டுப் பிள்ளை நன்கு பயிற்சி பெற்று விட்டான் என்பதை ஊருக்கு உணர்த்தும் அரங்கேற்றம் போன்ற நிகழ்ச்சியே சூப்பிடி என்றும் சிலர் கூறுவர்.

திருவாதிரை

நகரத்தார் குடும்பங்களில் பத்து வயதைத் தாண்டிய பெண் பிள்ளைகளுக்குத் திருவாதிரை செய்வது மரபு. இது மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தன்று நடத்தப்பெறும் திருவாதிரை சிவபெருமானுக்குரிய விண்மீன் என்பது குறிப்பிடத்தக்கது.

திருவாதிரையன்று, விழா நாயகியாகிய பெண் குழந்தை மணக்கோலத்தில் அணிகள் செய்யப்பெற்று, தன்னையொத்த சிறுமியர் புடை சூழ அருகில் உள் வீடுகட்குச் சென்று.

ஆடிஆடிவாரோம் அவரைக்காய்போடுங்கள்

பாடிப்பாடிவாரோம், பாடவரங்காய் போடுங்கள்

கூடிக்கூடிவாரோம், கொத்தவரங்காய் போடுங்கள்

எனப் பாடி, தம் கைகளில் ஏந்திச் சென்ற பாத்திரத்தில் உணவுப் பொருட்களைப் பெற்றுத் திரும்புவர்.

மார்கழி நீராடல், பாவை நோன்பு இவை போன்ற ஒரு நோன்பாக இந்நிகழ்ச்சி தொடங்கப் பெற்றிருக்கலாம் என்பர் சிலர். மணிமேகலை ஆதிரை என்ற நகரத்தார் மரபுக் கற்பரசியிடம் தான் தன் அமுதசுரபியில் முதன் முதலாகப் பிச்சைபெற்றாள் என்ற இலக்கிய வரலாற்று நிகழ்ச்சியின் அடிப்படையில் இந்நிகழ்ச்சி அமைந்திருக்கலாம் என்றும் சிலர் கருதுவர்.

கார்த்திகைப் புதுமை, திருவாதிரை இரண்டுக்கும் அரைக் கலியாணம் என்ற பெயரும் நம் சமூகத்தில் வழங்கியது. அதனை நோக்கும் போது, தம் குடும்பத்தில் திருமண வயதில் (அப்பொதெல்லாம் திருமண வயது 12 அல்லது 13 தான்) பையன் அல்லது பெண் இருக்கிறது என்ற செய்தியை ஊராருக்குத் தெரிவிக்கவே இவ்விரு சிறப்பு நிகழ்ச்சிகளும் பெரும் செலவில் நடத்தப்பெற்றன எனத் தெரியவருகிறது.

இவ்விரு விழாக்களிலும், விழா நாயகன் அல்லது நாயகிக்குச் செய்யப்படும் ஒப்பனைகள் மணமகன் அல்லது மணமகளுக்குச் செய்யப் பெறும் ஒப்பனை போலவே அமைகிறது. புதுமையில் விழா நாயகனும், நாயகியும் தங்கள் வீட்டிற்குள்ளேயே இருக்கும் வண்ணம் விழா நிகழ்ச்சிகள் அமையும். ஆனால் இவ்விரு விழாக்களிலும், விழா நாயகன் அல்லது நாயகி ஊர்வலமாகக் கோவிலுக்கோ, பக்கத்து

வீடுகளுக்கோ செல்வது போல விழா நிகழ்ச்சிகள் அமைந்துள்ள முறையும் மணமகன் அல்லது மணமகள் தயார் என அறிவிப்பதே (தெரியப்படுத்துவதே) இவ்விரு விழாக்களின் நோக்கம் என்பதை உறுதிப் படுத்துகிறது.

இன்றைய சமுதாய அமைப்பில் திருமண வயது உயர்ந்து விட்டது மணமகன் அல்லது மணமகள் தம் குடும்பத்தில் இருக்கிறார்கள் என்பதைத் தெரியப்படுத்த இப்போது வேறு எத்தனையோ வழிமுறைகள் தோன்றிவிட்டன. எனவே, நிறையச் செலவு செய்து கார்த்திகைப் புதுமை, திருவாதிரை விழாக்களைக் கொண்டாட வேண்டாம் என்று கருதியே நம் சமூகத்தினர் இவ்விரு சிறப்பு நிகழ்ச்சிகளையும் கைவிட்டு விட்டனர் எனலாம்.

முன்னர் நடந்ததும் இப்போது மறைந்துவிட்டதும் ஆகிய சில சிறப்பு நிகழ்ச்சிகளைப் பார்த்தோம். இப்போதும் சிறப்பாக நடந்து கொண்டிருக்கும் சிறப்பு நிகழ்ச்சிகளை இனித் தொடர்ந்து காண்போம்.

சடங்கு கழித்தல்

நம் குடும்பத்தில் மாப்பிள்ளை அல்லது பெண் தயார் நிலையில் இருப்பதை உணர்த்தக் கார்த்திகைப் புதுமை அல்லது திருவாதிரை முன்னர் நடத்தப்பெற்றது. இப்போது அது நடத்தப் பெறுவதில்லை என்பது நமக்குத் தெரிந்ததே. ஆயினும், ஆண் மகன், திருமணத்திற்கு உடலளவில் தயாராவதை வெளிப்படையாக அறிவிக்காத இயற்கை, பெண் மகள் திருமணத்திற்குத் தயாராவதை உடலில் சில மாற்றங்களின் வாயிலாக அறிவிக்கிறது. இதனைப் பெண் பூப்படைதல், சமைதல், சடங்காதல், பெரிய பெண்ணாகுதல், வயசுக்கு வருதல் முதலிய பல சொற்களால் சமுதாயம் வழங்குகிறது. அவற்றுள் நகரத்தார் சமூகத் தமிழ் வழக்கு பயன் படுத்தும் சொல் சமைதல் என்பது.

சமைதல் என்றால் பக்குவப்படுதல் என்பது பொருள். உணவுப் பொருள்கள் உண்ணுவதற்குரிய அளவு பக்குவப்படுத்தப் படுவதைத்தான் சமைத்தல் எனப்பிற வினைவாய்பாட்டில் கூறுகிறோம். ஒரு பெண் இயற்கையாகவே, உடலளவில் திருமணத்திற்கும், பிள்ளைப் பேற்றிற்கும் பக்குவமடைவதைப் பெண் சமைதல், எனத் தன்வினை வாய்பாட்டில் வழங்கும் நகரத்தார் தமிழ் வழக்கு, நினைந்தும் வியந்தும் போற்றத்தக்க வழக்காகும்.

ஒரு பெண் சமைந்தவுடன், அவளுக்கு நீராட்டி அவளை வீட்டுக்குள், பிறர் புழங்காத, ஒரு தனி இடத்தில் அமர வைப்பர். முற்காலத்தில் எல்லாம் பதினாறு நாட்கள் இப்படி, தனிமையில், அப்பெண் இருப்பாள். இப்போது பள்ளி செல்லுதல் போன்ற புறத்தேவைகள் காரணமாக, அத்தனிமை நிலை, குறைந்த நாட்களே நீடிக்கிறது.

குறிப்பிட்ட சில நாட்களுக்குப் பின், அவளுக்குத் தீட்டு நீக்கி, அவளை வீட்டிற்குள் அழைத்துக் கொள்வதற்காக நிகழ்த்தும் சிறப்பு நிகழ்ச்சியே சடங்கு கழித்தல், சடங்கு கழிப்பதாக முடிவு செய்த நாளில், சமைந்த பெண் குளித்து விட்டு வளவில், பெற்றோரின் வீட்டிற்கு முன், கிழக்கு முகமாக. கோலத்தின் மீது நிற்பாள். அவள் அத்தை சடங்கு கழித்தல் எனும் சடங்கைச் செய்வார்.

சடங்கு கழிப்பதற்காக என்றே சுடப்பட்ட கேப்பை அல்லது கோதுமை ரொட்டிகளைச் சமைந்த பெண்ணின் தலை, இரு தோள்பட்டைகள், இரு கைகள், இடுப்பின் இருபக்கங்கள் ஆகிய ஏழு இடங்களிலும் வைத்து, ரொட்டியின் மேல் வேப்பங்குழையையும் வைத்து, ஒரு வேப்பங்குச்சியால் அத்தை, அவற்றைத் தட்டி விடுவார் இதுவே சடங்கு கழித்தல் ஆகும்.

பிறகு சமைந்த பெண்ணுக்கு ஆரத்தி எடுத்து, அவளை மீண்டும் குளிக்கச் சொல்லி, அவளை வீட்டுக்குள் அழைத்துக் கொள்வர். சமைதல் என்பது முதன் முறையாக ஒரு பெண் வீட்டுக்கு விலக்காகுதல் என்பது நாமறிந்ததே. அவ்வாறு நிகழும் போது, வயதில் சிறிய அப்பெண் உடலாலும், மனத்தாலும் மிகவும் பல மாறுதல்களுக்கு உள்ளாவது தவிர்க்க இயலாதது. அவளை மனத்தளவில் தேற்றி, உடலளவிலும் அவளுக்குத் தெம்பூட்ட உதவுவதே இச்சிறப்பு நிகழ்ச்சியின் நோக்கம். கேப்பை அல்லது கோதுமை உடலுக்குத் தெம்பூட்டும் உணவுப் பொருள். வேம்பு உடல் நலத்துக்கு உறுதுணையான ஒன்று. மன அளவிலும், காற்று, கருப்பு முதலியவற்றை விரட்டும் ஆற்றல் வேம்புக்கு உண்டு என்பது பொது நம்பிக்கை. எனவே இச்சிறப்பு நிகழ்ச்சி, புதிய உடல் மாற்றத்தைச் சந்திக்கும் இளம் பெண்ணை மனத்தாலும், உடலாலும் தேற்றும் நிகழ்ச்சியே எனலாம்.

நகரத்தார் சமூகத்தைப் பொறுத்தவரை இன்னொரு சிறப்பும் குறிப்பிடத் தக்கது. பெண் சமைந்த வீட்டிலும் மிட்டாய்த்தட்டு வைப்பார்கள்.

உறவினர் பங்காளிகள் எல்லாம் வந்து, கேட்டுவிட்டு, மிட்டாய் எடுத்துக் கொண்டு குளிர்பானம் அருந்திச் செல்வார்கள். இதற்கும் பேறு சொல்லல், பேறு கேட்டல், என்ற சொற்களையே (மருவிய நிலையில் போரு சொல்லல், போரு கேட்டல்) பயன்படுத்துகின்றனர்.

சமைந்த வீட்டிற்குப் பேறு கேட்கவரும் உறவினர்களும், நண்பர்களும், சமைந்த பெண்ணின் பெற்றோரைப் பார்த்து, பேரன் உண்டா என்று கேட்பார்கள். ஒரு பெண் சமைவது என்பது அவள் தாய்மைப் பேற்றுக்குத் தகுதி அடைவதையே குறிக்கிறது என்ற ஆழமான உட்பொருள் இந்நடைமுறையால் நமக்குப் புரிகிறது. இவ்வாறு பொருள் ஆழத்தோடு மொழியைப் பயன்படுத்தும் மரபு நகரத்தாரிடையே வேரூன்றியிருக்கும் ஒரு நன்மரபாகும்.

ஒரு குடும்பத்தின் மூத்தபெண் சமைந்தால், சடங்கு கழித்தல், உறவினர், பங்காளிகள், நண்பர்களை அழைத்துப் பெரிய அளவில் கொண்டாடப்பெறும். அடுத்தடுத்த பெண்கள் சமையும் போது மிக நெருங்கிய உறவினர்களை மட்டும் அழைத்துக் குடும்ப விழாவாக நடடத்தப்பெறும்.

இனி, திருமணம் பற்றி விரிவாகப் பார்க்கலாம்.

கல்யாணம்

நகரத்தார் குடும்பத்தில் மிகச் சிறப்பான குடும்ப நிகழ்ச்சியாக நடைபெறுவது திருமணம் ஆகும். ஓரிரு தலைமுறைகளுக்கு முன்னர் ஏழு நாட்கள் திருமணம் நடைபெற்றது. தொலைக்குப் பொருளீட்டச் செல்வதைத் தவிர ஏனைய அலுவலகப் பணி எதுவும் அன்றைய நாளில் செட்டியார்களுக்கு இல்லை. எனவே, உறவினர், பங்காளிகளெல்லாம் ஒன்று கூடி ஒவ்வொரு நாள் ஒவ்வொரு சடங்காகச் செய்து, ஏழு நாட்கள் ஆற அமரத் திருமணம் நடத்தினர்.

சென்ற தலைமுறையில் இது மூன்று நாட்கள் நிகழ்ச்சியாகச் சுருங்கியது. அப்போது முதல்நாள் மாப்பிள்ளை வீடுசெல்வது, மறுநாள் திருமணம், மூன்றாம் நாள் பெண்ணழைத்தல் எனத் திருமண நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இப்போது காலத்தின் நெருக்கடியும், அனைவரும் பல்வேறு அலுவலகங்களில், தொழில் நிறுவனங்களில் பணியாற்றுவதால் ஓய்வின்மையும் சேர்ந்து ஒரு நாள் திருமணம் என்ற அமைப்பு ஏற்பட்டு விட்டது. ஆயினும் சில சடங்குகள், திருமண நாளுக்கு முன்னரே செய்ய வேண்டிய சடங்குகளாக உள்ளன. அவை பற்றி இப்போதைய இளைஞர் களுக்கும், பெற்றோர்களில் கூடப் பலருக்கும் முழுமையாகத் தெரிய வில்லை. எனவே, இந்நூலில் இச்சடங்குகள் பற்றி விரிவாகவே பார்க்கலாம்.

நகரத்தார்களை ஏனைய செட்டியார்களில் இருந்து இனம் பிரித்துக் காட்டுவது அவர்கள் சார்ந்துள்ள கோவிற் பிரிவுகளே ஆகும். நகரத்தாரின் ஒன்பது கோவிற் பிரிவுகள் வருமாறு.

1. இளையாத்தங்குடி,
2. மாத்தூர்
3. வைரவன் கோவில்
4. நேமங்கோவில்
5. இலுப்பைக்குடி
6. சூரைக்குடி
7. வேலங்குடி
8. இரணிக் கோவில்
9. பிள்ளையார்பட்டி.

இவற்றுள் இளையாத்தங்குடிக்கோவில்

1. ஒக்கூருடையார், 2.பட்டினசாமியார், 3.பெருமருதூருடையார், 4.கழனிவாசற்குடியார், 5.கிங்கிணிக் கூருடையார், 6.பேரசெந்தூருடை யார், 7.சிறுசேத்தூருடையார் என்ற ஏழு உட்பிரிவுகளையும்

மாத்தூர்க்கோவில்

1.உறையூருடையார், 2.அரும்பாக்கூருடையார், 3.மணலூருடையார், 4. மண்ணூருடையார் 5. கண்ணூருடையார், 6.கருப்பூருடையார், 7.குளத்தூருடையார் என்ற ஏழு உட்பிரிவுகளையும் உடையவை.

இந்த 14 பிரிவுகளோடு ஏனைய 7 கோவில்களையும் சேர்த்தால் நகரத்தார் திருமண நோக்கத்தில் 21 பிரிவுகளாக அமைவர். இப்பிரிவினர் ஒவ்வொருவரும் தத்தம் பிரிவுக்குள் திருமணம் செய்து கொள்வதில்லை. பிள்ளையார்பட்டிக் கோவிலாரும், இரணிக் கோவிலாரும் ஒருவர் பிரிவில் மற்றவர் திருமணம் செய்து கொள்வதில்லை.

இந்த அடிப்படைக் கட்டுப்பாட்டின் மீது, மாப்பிள்ளை, பெண் ஆகியோர், ஜாதகம், படிப்பு, குடும்ப நிலை, பொருளியல் நிலை ஆகியவற்றையும் பொறுத்து, திருமணங்கள் முடிவு செய்யப் பெறுகின்றன. அவ்வாறு முடிவு செய்யப்பெற்ற திருமணங்கள் நிகழும் போது, அதன் நிகழ்முறை, மிக நீளமான சடங்குகளை (நிகழ்ச்சிகளை) உள்ளடக்கியது. அவற்றின் பட்டியல் வருமாறு: அவை ஒவ்வொன்றையும் பற்றி விரிவாக அறிந்து கொள்வோம்.

1. திருமணம் பேசி முடித்துக் கொள்ளுதல்
2. முகூர்த்தக்கால் ஊன்றுதல்
3. கலியாணம் சொல்லுதல்
4. கோவிலில் பாக்கு வைத்தல்
5. கூடி ஆக்கி உண்ணுதல்
6. மணை போடுதல்
7. மாப்பிள்ளைக்கு மிஞ்சி போடுதல்
8. முதல் சீர் வைத்தல்
9. மறு சீர் வைத்தலும் கலியாண வேவும்
10. கோலமிடுதலும், அரசாணிக்கால் கட்டுதலும், தும்பு பிடித்தலும்
11. மாற்றுக் கட்டுதல்
12. கழுத்துரு வாங்கப் போதல்
13. தலைச்சீலையில் முடிதல்
14. மாம வேவு

15. முகூர்த்தம் வைத்தல் அல்லது கழுத்துருவுக்குப் பொன் கொடுத்தல்
16. பூரம் கழித்தல்
17. மாப்பிள்ளை அழைத்தல்
18. பகவணமும் காப்புக் கட்டுதலும்
19. மாப்பிள்ளை கோவிலுக்குப் போய்வருதல்
20. மாப்பிள்ளை திருப்பூட்டச் செல்லுதல்
21. பெண்ணெடுக்கிக் காட்டுதல்
22. கழுத்துரு – ஆசிவாங்குதல்
23. திருப்பூட்டுதல்
24. இசைபிடிமானம் எழுதுதல்
25. திருப்பூட்டிய சடங்கு
26. மணவறைச் சடங்கு
27. சாப்பாடு போடுதல்
28. பணம் எழுதுதல்
29. கும்பிட்டுக் கட்டிக் கொள்ளுதல்
30. மஞ்சள் நீராடுதல்
31. காப்புக் கழற்றிக் கால் மோதிரம் இடுதல்
32. பிள்ளை எடுக்கிக் கொடுத்தல்
33. பெண் சொல்லிக் கொள்ளுதல்
34. பெண் அழைப்பும் சடங்கும்
35. குலம்வாழும் பிள்ளை எடுத்தல்
36. சீராட்டுக் கொடுத்தலும் பாக்குச் சுருளும்
37. பால் வேவு, வருஷ வேவு, பொங்கல்வேவு
38. தும்புகட்டுதல்
39. பால் பழம் சாப்பிட உறவினர் வீடு சென்று வருதல்

பேசி முடித்துக் கொள்ளுதல்

மாப்பிள்ளை வீட்டாரும், பெண் வீட்டாரும் சாதகம் பார்த்தல், பெண் பார்த்தல், முறைச்சிட்டை எழுதிக் கொள்ளுதல் போன்றவற்றைத் தங்கள்

இரு குடும்பங்கள் அளவில் நிகழ்த்தித் திருமணத்தை உறுதி செய்கின்றனர். அவ்வாறு உறுதி செய்யப்பட்டுவிட்டது என்பதை இரு தரப்பு உறவினர்கள், பங்காளிகளுக்கு அறிவிக்கும் சிறப்பு நிகழ்ச்சியே பேசி முடித்துக் கொள்ளுதல் ஆகும்.

பொதுவாக, பெண் வீட்டாரின் உறவினர்களும், பங்காளிகளும், ஒரு நல்ல நாளின் மாலைப் பொழுதில் பெண் வீட்டிற்கு வந்து கூடுவர். அங்கிருந்து அவர்கள் அனைவரும் மாப்பிள்ளை வீட்டிற்குச் செல்வர். அங்கே அவர்களது உறவினர்களும், பங்காளிகளும் ஏற்கனவே கூடி இருப்பர். பெண் வீட்டுப் பங்காளிகளுள், வயதிலும், வாரிசிலும் பெரியவர், மாப்பிள்ளை வீட்டுப் பங்காளிகளில் வயதிலும், வாரிசிலும் பெரியவரிடம் எங்கள் இன்னார் மகளை உங்கள் இன்னார் மகனுக்குத் திருமணம் செய்து தருகிறோம் எனத் தெரியப்படுத்துவார். அவர் அதற்கு இசைவு தெரிவிப்பார். இது பழைய மரபு. இன்றும் தேவகோட்டையில் இம்மரபு அப்படியே பின்பற்றப் பெறுகிறது. அங்கே இச்சிறப்பு நிகழ்ச்சி கெட்டிபண்ணிக் கொள்ளுதல் எனக் குறிப்பிடப்பெறுகிறது. திருமணம் அறிவிக்கப்பெற்று உறுதி செய்யப் பெற்றவுடன் அனைவருக்கும் சிற்றுண்டி விருந்து நடைபெறும்.

ஏனைய நகரத்தார் ஊர்களில் பெரும்பாலான ஊர்களில் மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டிற்குச் செல்ல, இச்சிறப்பு நிகழ்ச்சியும், சிற்றுண்டி விருந்தும் பெண் வீட்டில் நிகழ்கிறது.

பல ஊர்களில் ஆரிய நாகரிகத் தாக்கத்தின் விளைவாக இந்த நேரத்தில் ஐயர் (பஞ்சாங்கக்காரரர்) வந்து, முடிவு செய்யப்பெற்ற திருமணத்தையும், அது நிகழ இருக்கும் நாள் நேரத்தையும் மஞ்சள் தடவிய இருதாள்களில் எழுதி, அவற்றைச் சபையில் உரக்கப் படித்த பின், மாப்பிள்ளை வீட்டாரிடம் ஒரு தாளையும், பெண் வீட்டாரிடம் ஒரு தாளையும் கொடுக்கின்றார்.

முகூர்த்தக்கால் ஊன்றுதல்

திருமணத்திற்கு முன் (பெரும்பாலும் ஒரு வாரத்திற்குள்) ஒரு நல்ல நாளில் மணமக்கள் இருவர் வீட்டிலும் இச்சிறப்பு நிகழ்ச்சி நடைபெறும். இதற்கு அவரவர் தரப்பில் மிக நெருங்கிய உறவினர் மட்டும் (பெரும்பாலும் வளவுக்குள் உள்ளோரும் ஆயா வீட்டாரும்) அழைக்கப் பெறுவர். ஒரு மூங்கிலில் மஞ்சள் தடவிப் பொட்டு வைத்து மாவிலைகள் கட்டியிருப்பர்.

அதுவே முகூர்த்தக்கால் ஆகும். அதற்குத் தேங்காய் உடைத்துக் கற்பூரம் காட்டுவார், வளவு வாசலில் திருமணக் கொட்டகை போட இருக்கும் கொட்டகைக்காரர். பிறகு அந்த முகூர்த்தக்கால் வளவு வாசலில் ஈசானிய மூலையாகிய வடகிழக்கு மூலையில் ஊன்றப்பெறும் (நிறுத்தி வைத்து, தூணோடு சேர்த்துக் கட்டப்பெறும்) இந்த முகூர்த்தக்கால் ஊன்றும் நிகழ்ச்சி நடந்த பின்னர். திருமணம் முடிந்து காய்ச்சி ஊற்றிக் கொள்ளும் வரை மணமக்கள் வீட்டினரும், அவர்தம் நெருங்கிய உறவினர்களும், எந்தவிதமான தீட்டு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளாமலிருப்பது மரபு.

கலியாணம் சொல்லுதல்

முகூர்த்தக்கால் ஊன்றும் நிகழ்ச்சி நடைபெறும் நாளில் கலியாணம் சொல்லுதலும் நிகழும். மாப்பிள்ளை வீட்டார் மாப்பிள்ளைக்கு ஆயா, அப்பத்தாள் வீடுகளிலும், பெண் வீட்டார் பெண்ணின் ஆயா, அப்பத்தாள் வீடுகளிலும் கலியாணம் சொல்லுவர். மணமக்களின் சகோதரிகட்கு முன்னரே திருமணம் நடந்திருந்தால், அவர்கள் வீடுகளிலும் கல்யாணம் சொல்லுவர்.

மணமக்களின் தந்தை, மூத்த சகோதரர் அல்லது யாரேனும் ஒரு சகோதரர் கலியாணம் சொல்லச் செல்வர். தேங்காய்ச் சட்டியை எடுத்துக் கொண்டு சென்று கலியாணம் சொல்லுபவர்களின் வளவு வீட்டில், தடுக்கில் அமர்ந்து இன்னநாளில் இன்னாருக்குக் கலியாணம் என்று சொல்லி அழைப்பார். உரிய வீட்டினர் அதை ஏற்றுக் கொண்டு, வெற்றிலை பாக்குடன் ரூபாய் வைத்துக் கொடுப்பர். அது பாக்குப் பணம் எனப்பெறும்.

மணமக்களின் பக்கத்து வீடுகட்கு, மணமக்கள் வீட்டைச் சேர்ந்த சிறுவர்கள், இடுப்பில் பட்டுக் கட்டிக் கொண்டு, சங்கு ஊதிக்கொண்டு சென்று கூடியாக்கும் நாளன்று கலியாணம் சொல்லுதல் மரபு. இப்போது பலருக்கு இம்மரபும், சடங்கும் தெரியாததாலும், திருமணம் திருமண மண்டபங்களில் நடைபெறுவதாலும் இந்நிகழ்ச்சி நடைபெறுவதில்லை. ஆனால், ஊர்க்கலியாணம் சொல்லுதல் என்ற இந்நிகழ்ச்சி நீண்ட வரலாற்றுப் பழமை உடையது. இவ்வாறு ஊர்க் கலியாணம் சொன்ன நிகழ்ச்சியைத் தான் மாநகர்க்கு ஈந்தார் மணம் எனச் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்.

கோவிலில் பாக்கு வைத்தல்

இரு வீட்டாரும் அவரவர்கள் நகரக்கோவிலில் 3 நாள் முன்பாகப் போய்ப் பாக்கு வைக்க வேண்டும். எடுத்துக்காட்டாக 10 ஆம் தேதி திருமணம் என்றால், 7 ஆம் தேதி காலை முதல் மாலைக்குள் பாக்கு வைக்க வேண்டும். மணமகன், மணமகள் இருவரின் கோவில் உட்பிரிவு, மணமக்கள் பெயர், தகப்பனார் பெயர், வீட்டு விலாசம், கலியாணம் நடைபெறும் இடம், நாள், நேரம் ஆகியவற்றைப் பதிவு செய்து, பாக்குக்காக ஒரு தொகையையும் கோவிலில் செலுத்த வேண்டும். உரியவர்களின் பங்காளிகளுள் ஒருவரே பாக்கு வைக்கச் செல்வது மரபு. இது நகரத்தார் சமூகத்தில் திருமணத்தைப் பதிவு செய்யும் முறையாகும்.

இம்முறையில் பதிவு செய்த திருமணத்தை அவரவர்களின் நகரக் கோவில் அங்கீகரிப்பதற்கு அடையாளமாக, திருமணத்திற்கு முதல் நாள், அந்தந்தக் கோவிலிலிருந்து, மணமக்கள் வீடுகட்கு இரண்டிரண்டு மாலைகள் வரும். அதனை, சங்கு ஊதி வாங்கி வைப்பார்கள். மாப்பிள்ளை வீட்டில் வாங்கி வைத்த மாலைகள் இரண்டில் ஒன்றை மாப்பிள்ளை திருமணத்தன்று அணிந்து கொள்வார். மற்றொன்றைத் திருப்பூட்டச் செல்லும் பொழுது கொண்டு செல்வர். மாப்பிள்ளை பெண்ணுக்கு முதன் முதலில் அந்த மாலையைத்தான் அணிவிப்பார். பெண் வீட்டில் வாங்கி வைத்த மாலைகளில் ஒன்றைத் திருமணத்தன்று பெண் பகவணம் செய்து கொள்ளும்போது அணிந்து கொள்வது மரபு. மற்றொரு மாலையை அரசாணிக்காலில் கட்டிவிடுவர். இப்போது அந்த மாலையை மாப்பிள்ளை அழைக்கச் செல்லும் போது எடுத்துச் சென்று, மாப்பிள்ளைக்கு அணிவிக்கின்றனர்.

கூடி ஆக்கி உண்ணுதல்

திருமணத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் உறவினர்கள், பங்காளிகள் அனைவரும் திருமண வீட்டிற்கு வந்து சேர்ந்து சாப்பிடுவது கூடியாக்கி உண்ணுதல் என வழங்கப்படுகிறது. சில வீடுகளில் அந்த நாளில் சாமிக்குப் படைப்பார்கள்.

மணை போடுதல்

கூடி ஆக்கி உண்ணும் நாளன்று மாலையில் மணை போடப்படும். வெளியூர்த் திருமணமாக இருந்தால் பெண் வீட்டில் மட்டுமே இச்சடங்கு

நிகழும். உள்ளூர்த் திருமணமாக இருந்தால் இரு வீடுகளிலும் இச்சடங்கு நிகழும்.

வளவுக்குள் திருமண வீட்டிற்கு எதிரே பத்தியில் மணை போடுவர். தெற்கு வட்டகையில் திருமண வீட்டின் உள்ளேயே மணை போடப்படுகிறது. சில ஊர்களில் மணை போடுதல் திருமணத்திற்கு முதல் நாள் மாலையில் நிகழ்கிறது.



திருமணத்தின் இன்றியமையாத சடங்குகளெல்லாம் இந்த மணை மீது தான் நடைபெறுகிறது. எனவே இந்த மணையைத் திருமண வீட்டில் திருமணம் நடைபெறும் இடத்தில் அமைப்பதாகிய மணைபோடுதல் என்பது மிக அடிப்படையான ஒரு சடங்காகும். இச்சடங்கில் பெரும் பங்கேற்பவர்கள் பங்காளி மற்றும் உறவினர் வீட்டுப் பெண்கள்தான்.

மணைபோடும் இடத்தில், பங்காளி மற்றும் உறவினர் வீட்டு பெண்கள் செங்கல் எடுத்து வைத்து, அதன் மீது குழைத்த மண்ணைப் பூசுவர். வந்திருக்கும் அனைவரும் அவ்வாறு செங்கல் வைத்து மண் பூசிய பிறகு அதன் மீது பளிங்கினால் அல்லது மரத்தினால் ஆன மணை வைக்கப்படும். பெண் வீட்டில் இரட்டை மணையும், உள்ளூர்த் திருமணமானால் மாப்பிள்ளை வீட்டில் ஒற்றை மணையும் வைப்பது மரபு.

மிஞ்சி போடுதல்

கூடி ஆக்கி உண்ணும் நாளன்று மாலையில் மாப்பிள்ளைக்கு, அவர் தாய்மாமன் காலில் மிஞ்சி அணிவிப்பது ஒரு சடங்காக நிகழ்கிறது.

நகரத்தார் கலியாணத்தில் தாய்மாமன் பங்கு குறிப்பிடத்தக்கது. மிஞ்சி போடுவதில் தொடங்கி, பெண்ணழைப்பு முடியும் வரை அனைத்துச் சடங்குகளிலும் இவர் இன்றியமையாத இடத்தைப் பெறுவார். தாய் மாமனோ, அவர் மகனோ மாமப்பட்டு அணிந்து கொண்டு இச்சடங்கு களைச் செய்வது மரபு.

முதற் சீர் வைத்தல்

கலியாணத்திற்கு முதல் நாள் காலையில் பெண் வீட்டில் இருந்து பெண்கள் மட்டும் மாப்பிள்ளை வீட்டிற்குச் சென்று வருவார்கள்.

பித்தளைக்குடம் 2, செம்பு 2, விளக்கு 1 ஆகியவற்றுடன் மஞ்சள், உப்பு, புளி, பஞ்சு, விபூதி, பச்சரிசி, பாக்கு ஆகிய ஏழு பொருட்களைக் கொண்டு செல்வர். சில ஊர்களில் இதனை உப்புப்புளி வைக்கச் செல்லுதல் எனக் குறிப்பிடுகின்றனர். வெளியூர்த் திருமணத்தில் இச்சடங்கு நிகழ்வதில்லை.

மறுசீர் வைத்தலும் கலியாண வேவும்

கலியாணத்திற்கு முதல் நாள் மாலையில் பெண் வீட்டிலிருந்து மறுசீர் வைக்க ஆண்களும் பெண்களும் செல்வார்கள். ஆண்கள் தேங்காய்ச் சட்டி, சரிகை வேட்டி, துண்டு, கழுத்துச் சங்கிலி, கைக்கடிகாரம், மோதிரம், எலுமிச்சம் பழம், பூச்செண்டு ஆகியவற்றைக் கொண்டு செல்வர். பெண்கள் வெள்ளி விளக்கு, குடம், செம்பு ஆகியவற்றை எடுத்துச் செல்வர். குடத்தில் தண்ணீர் நிரப்பிச் செல்வர். மாப்பிள்ளை வீட்டுக்குப் போனதும் மாப்பிள்ளைக்கு வேட்டி துண்டு அணிவித்து, நகைகளையும் அணிவிப்பர், பெண் வீட்டுப் பெரியவர்கள். அதற்குப் பின் கலியாண வேவு இறக்கப்படும்.



வெளியூர்த் திருமணமாக இருந்தால், திருமணத்தன்று காலையில் மாப்பிள்ளை அழைப்பின் போது மாப்பிள்ளைக்கு வேட்டி, துண்டு, நகைகள் அணிவிக்கப்பெறும். மாப்பிள்ளை பெண் வீட்டிற்கு அழைத்து வரப்பெற்ற பிறகு கலியாண வேவு இறக்கப்படும்.


தும்பு பிடித்தலும் கோலம் இடுதலும்

பங்காளி வீட்டுப் பெண்கள் திருமணம் நடைபெறும் வீட்டிற்குள் தும்பு பிடித்துக் கோலம் இடுவர். திருமண வீட்டின் உட்புறச் சுவரில் ஏட்டுக்கயிற்றால், கோல மாவைத் தொட்டு வீடுபோன்ற அமைப்புடன் ஒரு கோலமிடுவர். இதுவே தும்பு பிடித்தல் ஆகும். ஏட்டுக் கயிறே தும்பு ஆகும்.



திருமணம் நிகழ்ந்ததும், மணமக்கள் தனி இல்லத்தில் வேறு வைக்கப்பெற்று, குடும்பம் நடத்தினர் என்பது, சிலப்பதிகாரத் தினாலும், பெரியபுராணத்தில் காரைக்

காலம்மையார் வரலாற்றினாலும் தெரிய வரும் செய்தி. தனி வீட்டின் அடையாளக் குறியீடாகவே இத்தும்பு எனும் கோலம் அமைந்திருப்பதாகத் தோன்றுகிறது.



சங்கு ஊதித் தும்பு பிடித்த பின்னர், பங்காளி வீட்டுப் பெண்கள் வளவு வீட்டிற்குள்ளும், வளவு நடையிலும் மணையின் மீதும் கோலங்கள் இடுவர். இவை திருமணத்திற்கு முதல் நாள் மாலையில் நடைபெறும்.

அரசாணிக்கால் கட்டுதல்

திருமணத்திற்கு முதல்நாள் மாலை, பங்காளி வீட்டு ஆண்கள், அரசாணிக்கால் கட்டுவர். உள்ளூர்த் திருமணமாக இருந்தால் மாப்பிள்ளை வீடு, பெண் வீடு இரண்டிலும், அவரவர் பங்காளி வீட்டு ஆண்கள் அரசாணிக்கால் கட்டுவர். வெளியூர்த் திருமணமாக இருந்தால் பெண் வீட்டில் மட்டும் அரசாணிக்கால் கட்டுவர். திருமணம் நடைபெறுவதற்காகப் போடப் பெற்றிருக்கும் மணைக்கு முன்புறம் அரசாணிக்கால் கட்டுவது மரபு.



அரசாணி மேடை என ஒன்று உண்டு. அதனை மணைக்கு முன்னே வைத்து, அதிலுள்ள குழியில் பால் விட்டுப் பவளம் ஒன்றைப் போடுவர். அப்போது சங்கு ஊதப்படும். பின்னர் அந்தக் குழியிலிருந்து உத்தரம் அல்லது மேற்கூரையைத் தொடும் வண்ணம் ஒரு கழியை ஊன்றுவர். அதில் கிளுவை, பாலைக் குச்சிகளை இணைத்து, அந்தக் குச்சிகளோ, கழியோ தெரியாத அளவுக்கு மாவிலைகளையும், அரச இலைகளையும் சுற்றிக் கயிற்றால் கட்டுவார்கள்.

அரசன் ஆணைக்கால் என்பதே மருவி அரசாணிக்கால் என வழங்குகிறது. அரசன் நேரில் வர இயலாத நிலையில் அரசனின் ஆணையை முன்னிறுத்தித் திருமணம் நடத்துவதற்குரிய குறியீடே அரசாணைக்கால்.

தொடக்கத்தில் நகரத்தார் சந்தியாபுரி என்னும் நகரில் வாழ்ந்த போது, அதற்கு அருகிலேயே பவளத்தீவு இருந்தது. அங்கிருந்து, கொண்டு வந்த பவளங்களைக் கொண்டு, அரசாணிக்கால் எனும் தூணைப் பவளத்தாலேயே செய்து பவளத்திரள்கால் ஆகக் கட்டினர் என நம்பப்படுகிறது. அதன் ஒரு அடையாளமாகவே, இன்றைக்கு ஒற்றைப் பவளத்தை மட்டும் போட்டு அரசாணிக்கால் கட்டப்பெறுகிறது.

பகவணம் செய்யும்போது புரோகிதர்களால் அரசாணிக்காலுக்கு மரியாதை செய்யப்படும். திருமணம் முடிந்ததும் அரசாணிக்காலுக்குப் பொங்கலிட்டுப் படைப்பார்கள். பெண்ணழைப்பு முடிந்த பின்னரே அரசாணிக்கால் அவிழ்க்கப்பெறும்.

மாற்றுக்கட்டுதல்

மாத்துக்கட்டுவது என இன்று வழங்குகிறது. திருமணம் நிகழ்வதற்காகப் போடப்பெற்ற மணைக்கு மேல், கூரைக்குக் கீழே, மாற்றுச் சேலைகள் இரண்டு (கறுப்பு நிறம் இல்லாத பிற வண்ணச் சேலைகள்) சலவைத் தொழிலாளியினால் கட்டப்பெறுவது மரபு. இந்நாளில் பங்காளிகளே கட்டிவிடுகின்றனர்.

வீட்டின் முன்னே உள்ள முற்றத்தில் மரத்தடியில், தொடக்க காலத்தில் திருமணங்கள் நடைபெற்றன. அப்போது வெயில், பறவை எச்சம் முதலியவை மணமக்கள்மேலே விழாமல் இருப்பதற்காக இந்த மாற்று கட்டப்பெற்றது. நீல விதானத்து நித்திலப்பூம்பந்தரில் கோவலன் கண்ணகி திருமணம் நடைபெற்றது என்பார், இளங்கோவடிகள். முத்துக் களாலும், பூக்களாலும் அமைக்கப்பெற்ற மணமேடையின் மேற்கூரை (விதானம்) நீலநிறமான ஆடையால் அமைந்திருந்ததை இத்தொடர் குறிக்கிறது. அந்த நீலநிற ஆடைதான் மாற்று.

வீட்டிற்குள் வளவுப் பத்தியில் திருமணம் செய்யும்போதும் மாற்றுக் கட்டுவது, மரபின்தொடர்ச்சி என்பதோடு, மேற்கூரையில் உள்ள சிறு பூச்சிகள், தூசி முதலியவை மணமக்கள் மேல் விழாமல் காக்கும் நோக்கத்தையும் நிறைவேற்றுகிறது எனலாம்.

கழுத்துரு வாங்கப்போதல்

மாப்பிள்ளை வீட்டைச் சேர்ந்த பெரியவர்கள் உப்புக் கடகம், ஏட்டோலை, முளைப்பாரி முதலியவற்றை எடுத்துக்கொண்டு பெண்

வீட்டிற்குச் செல்வர். பெண் வீட்டார் திருமணம் நடைபெறும் வளவு வீட்டிற்குள், மாப்பிள்ளை வீட்டுப் பெரியவர்களிடம் கழுத்துரு உருப்படி களையும் (35), தாலிச் சங்கிலிகளையும் கொடுப்பார்கள். எல்லாவற்றையும் பட்டுத்துண்டில் வைத்து அத்துடன் விரலி மஞ்சள், வெற்றிலை பாக்கு, மல்லிகைப்பூ ஆகியவற்றையும் வட்டுவப் பையில் வைத்து மாப்பிள்ளை வீட்டுக்குக் கொண்டு வருவர். இது திருமணத்திற்கு முதல் நாள் காலையில் நடைபெறும்.

கழுத்துரு கோத்தல்

மாப்பிள்ளை வீட்டில், திருமணத்திற்கு முதல் நாள் மாலையில், மாப்பிள்ளை வீட்டுப் பங்காளிகள் (ஆண்கள்) கூடி, கழுத்துரு கோப்பது மரபு. 10 ஆம் நம்பர் வெள்ளை நூல்கண்டு வாங்கி, அதில் 21 பாகம் நூல் எடுத்துக் கொள்வர். அதனை மூன்றாக மடித்து ஒரு மடிப்புக்குள் இன்னொரு மடிப்பைப் பின்னலாகக் கொடுத்து வாங்கி, சங்கிலிப் பின்னல் போலப் பின்னி, நன்றாக இறுக்கமாகத் திரித்துக் கொள்வர்.

பிறகு பட்டணம் மஞ்சளை நீரில் நனைத்துக் கொண்டு, அதனை நூலில் நன்றாகத் தேய்த்து, மஞ்சள் நன்றாக ஏறும்படியும், நூலின் முறுக்கு விடாமல் இருக்கும்படியும் செய்வர். இப்படிச் செய்து, கிடைத்த 7 பாகம் நூலை, இரண்டாக மடித்து மேற்பாகத்தில் 16 உருப்படிகளையும், கீழ்ப்பாகத்தில் 15 உருப்படிகளையும், அவற்றுக்குரிய முறைப்படி கோப்பர்.

குச்சி, தும்பு, துவாளை, ஒற்றைத்தும்பு ஆகிய 4 உருப்படிகளைத் தவிர ஏனையவை 31ம் கோக்கப்பெறும் அவை வருமாறு : கடைமணிகள் – 4, உருக்கள் – 19, ஏத்தனம் – 4, லெட்சுமி ஏத்தனம் – 1, சரிமணி – 2, திருமாங்கல்யம் – 1, ஆக உருப்படி 31.

கழுத்துரு கோக்கும் முறை, எந்த உருப்படிகள் மேற்பாகத்தில் அமைய வேண்டும். எந்த உருப்படிகள் கீழ்ப்பாகத்தில் அமைய வேண்டும். எந்த வரிசை முறையில் அமைய வேண்டும் என்பது, இன்றைய நாளில் மிக வயதான பெரியவர்களுக்குக் கூடச் சரியாகத் தெரியவில்லை. எனவே, அச்சிட்ட படங்களை முன் மாதிரியாக வைத்துக் கொண்டே, கழுத்துரு கோக்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.



மேல்பாகம், கீழ்ப்பாகம் இரண்டிலும் உருப்படிகளை முறைப்படி கோத்தபின், இரண்டையும் இரு முனைகளிலும் தனித்தனியே, உருவிவராத வகையில் நன்றாக முடிச்சுப் போடுவார்கள். திருமணத்திற்கு மறுநாள், மணமகள் வீட்டுப் பெரியவர் ஒருவர் கழுத்துருவின் இடப்பக்கத்தில் இரண்டு கயிற்றிலும் சேர்த்து, குச்சி, தும்பு, துவாளையைக் கோத்து வைப்பார்.

ஒற்றைத் தும்பு, தனியே, பிள்ளைச்சரடு எனச் சொல்லப்படும் நூலில், பங்காளிகளால், முதல்நாள் மாலையே கோத்து வைக்கப் பெறும், இதற்கு 10 ஆம் நம்பர் நூலில் 7 பாகம் எடுத்து, மூன்றாக மடித்து, பின்னி, முறுக்கேற்றி மஞ்சள் ஏற்றி, ஒற்றைத் தும்பைக் கோப்பர்.



கழுத்துரு நகரத்தார் சமூகத்தில் மட்டும் காணப்பெறும் அணிகலன். கழுத்துத்திரு என்பதே கழுத்துரு என மருவியுள்ளது. கழுத்துரு அணிவித்தலைத் திருப்பூட்டுதல் என்றே நகரத்தார் வழங்குகின்றனர்.

தலைச் சீலையில் முடிதல்

உள்ளூர்த் திருமணமாக இருந்தால், திருமணத்திற்கு முதல்நாள், மறுசீர் வைக்கச் செல்லும்போது மாப்பிள்ளையை, மாப்பிள்ளை வீட்டு வளவில் போடப் பெற்றிருக்கும். ஒற்றை மணையில் அமரச் செய்வர். பெண்ணின் சகோதரர் அல்லது தந்தை ஒரு தொகையை மாப்பிள்ளையின் தலைப்பாகைமீது வைப்பார். இதை மாப்பிள்ளையின் மாமக்காரர் எடுத்து மணமகனின் தந்தையிடம் கொடுப்பார். இத்தொகை சீதனப் பணத்துடன் சேர்த்துக் கொள்ளப்பெறும் மாப்பிள்ளைக்குத் தலைச் செலவுக்குக் கொடுத்தல் (முதல் செலவுக்குக் கொடுத்தல்) என்பதே தலைச்சேலையில் முடிதல் என மருவி தலைச்சீலையில் முடிதல் ஆகிவிட்டது என்பர். வெளியூர்த் திருமணத்தில், இச்சடங்கு, திருமணத்தன்று காலையில், மாப்பிள்ளை அழைப்பிற்குப் பின்னர், திருப்பூட்டுவதற்கு முன்னர் நடைபெறும்.


மாம வேவு

மாப்பிள்ளையோ, பெண்ணோ தலைப்பிள்ளையாக இருந்தால், அவர்களது ஆயாள் வீட்டினர் மாம வேவு இறக்குவார்கள். தலைப் பிள்ளையின் ஆயாள் வீட்டினர் தம் பங்காளிகளுடன், மேளதாளத்தோடு, திருமண வீட்டிற்கு வேவு கொண்டு வருவர். தலைப்பிள்ளை வீட்டைச் சேர்ந்த பெண்கள் இறக்கிக் கொள்வர். சில பகுதிகளில் திருமணத்திற்கு முதல் நாள் மாலையில் மாமவேவு இறக்குதல் நடைபெறுகிறது. பொதுவாகத் திருமணத்தன்று காலையில் இச்சடங்கு நடைபெறும். முதல் நாள் மாலையில் மாம வேவு இறக்கப்பெற்றால் அதற்குச் சிறப்பு விருந்து ஏற்பாடு செய்யப்பெறும்.

முகூர்த்தம் வைத்தல் அல்லது கழுத்துருவுக்குப் பொன் கொடுத்தல்

திருமணம் தொடர்பான சடங்குகளின் வரிசை முறையில் திருமணம் பேசி முடித்துக் கொள்ளுதல் முதலாவது சடங்கு என்றால், கழுத்துருவுக்குப் பொன் கொடுத்தலாகிய முகூர்த்தம் வைத்தல்தான் இரண்டாவது சடங்காகும்.

திருமணம் உறுதி செய்யப்பெற்றவுடன், பேசி முடித்துக் கொள்ளுதல் வாயிலாக இருதரப்புப் பங்காளிகள் உறவினர்களுக்குத் திருமணம் அறிவிக்கப்பெறுகிறது. அதனை ஒட்டி ஒரு நல்ல நாளில் மாப்பிள்ளை வீட்டார் தேங்காய், பழம், பூ, வெற்றிலை, பாக்கு, கற்கண்டு, மஞ்சள் முதலயவற்றைத் தாம்பாளங்களிலும், பூ, சந்தனம், மஞ்சள், குங்குமம், விபூதி, எலுமிச்சம்பழம் ஆகிய மங்கலப் பொருள்களைச் சடங்குத் தட்டிலும் வைத்து, தேங்காய்ச் சட்டி, பவுன் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு பெண் வீட்டிற்குச் செல்வர். பெண் வீட்டில் அவர்களது பங்காளிகளும், நெருங்கிய உறவினர்களும் முன்னரே கூடியிருப்பர். மாப்பிள்ளை வீட்டார் கொண்டு வந்த பவுனை, திருமண வீட்டிற்குள் (வளவு வீடு) வைத்துச் சாமி கும்பிட்ட பின்னர், தங்கவேலை ஆசாரியிடம் கொடுத்துத் தட்டச் சொல்வர். இந்தப் பவுனைத் தாங்கள் வைத்திருக்கும் தங்கத்தோடு சேர்த்து, பெண்ணுக்குரிய கழுத்துருவின், திருமாங்கல்யப் பகுதி செய்யப்பெறும். பெண் வீட்டில், பவுன் கொண்டு வந்த மாப்பிள்ளை வீட்டாருக்குச் சிற்றுண்டி விருந்து நடைபெறும். இது முன்னாள் மரபு.



இப்போது நடைமுறை எளிமை கருதி, இந்நிகழ்ச்சி வெறும் சடங்கு நிகழ்ச்சியாகத் திருமணத்தன்று, காலையில் நடைபெறுகிறது. மாப்பிள்ளை வீட்டிலிருந்து மிக இன்றியமையாத ஆண்கள் ஐவர் அல்லது எழுவர் பெண் வீட்டிற்குப் பவுன் கொண்டு செல்கின்றனர். வெளியூர்த் திருமணமாக இருந்தால் மாப்பிள்ளை அழைப்பிற்கு முன்னரும், உள்ளூர்த் திருமணமாக இருந்தால், மாப்பிள்ளை திருப்பூட்ட வருவதற்கு முன்னரும் இச்சடங்கு நிகழ்கிறது. இப்போதும் ஆசாரி வருகிறார். பவுனைத் தட்டுகிறார். ஆனால் திருமாங்கல்யப் பகுதி உள்ளிட்ட கழுத்துரு முன்னரே செய்து முடிக்கப்பெற்று, திருமணத்திற்கு முதல்நாளே மாப்பிள்ளை வீட்டார் வந்து வாங்கிச் சென்றும் விடுகின்றனர். பெயரளவில் ஆசாரியால் தட்டப்பெற்ற பவுன் பெண் வீட்டாரால் வைத்துக் கொள்ளப்பெறுகிறது. ஆனாலும் பழைய மரபு கருதி இச்சடங்கு கழுத்துருவுக்குப் பொன் கொடுத்தல் என்றே வழங்குகிறது.

பூரம் கழித்தல்

மணமகளை மந்திரப் பூர்வமாக இல்லறத்திற்குரியவளாக ஆக்குதலே இச்சடங்கின் நோக்கம். திருமணத்தன்று அதிகாலையில், மணமகளை நீராடச் செய்து, ஒரு சரமாலை மட்டும் கழுத்தில் அணிவித்து, மணமேடைக்குப் பக்கத்தில் தடுக்கில் கிழக்கு முகமாக நிற்கச் செய்து பெண்ணின் அம்மான் பெண்டிர் பூரம் கழிப்பார். மணமகளின் உடலில் ஏழு இடங்களில் (தலை, தோள்பட்டைகள் இரண்டு, இடுப்பின் இரண்டு பக்கங்கள், இரண்டு பாதங்கள்) வேப்பிலையை வைத்து இரும்புச் சத்தகத்தினால் அதைத் தட்டி விடுவார். பிறகு புரோகிதர் விநாயகர் பூசை, வர்ணகும்பப் பூசை ஆகியவற்றைச் செய்து பூரம் கழிப்பார்.

ஒரு பெண் பூப்படைந்த உடன் நடைபெறும் சடங்குகழித்தல் என்ற நிகழ்ச்சி இதனோடு ஒப்புமையும் தொடர்பும் உள்ள நிகழ்ச்சி, சடங்கு கழிக்கும்போதும். பெண்ணின் உடலில் இதே ஏழு இடங்களில் வேப்பிலை வைத்துத் தட்டி விடப் பெறுதல் அதனை உறுதி செய்யும். ஒரு பெண் பூப்பெய்தியவுடன், அவளது கன்னித்தன்மை காப்பிடப்பெறும் சடங்கு, சடங்குகழித்தல் ஆகவும், திருமணத்தன்று அக்காப்பு நீக்கப்பெறுதல்

பூரம் கழித்தல் ஆகவும் இருக்கலாம் என்று தோன்றுகிறது. காப்பிடுதலும், காப்பு நீக்குதலும் சக்தி தெய்வத்தோடு தொடர்புபடுத்தப் பெறுவதால் இவ்விரு சடங்குகளிலும் வேப்பிலை இடம் பெறுகிறது என்று தோன்றுகிறது. இக்கருத்து இன்னும் ஆய்வுக்குரியது.

பகவணம் செய்தலும், காப்புக் கட்டுதலும்

திருமணத்தன்று காலையில் மாப்பிள்ளைக்குத் தனியாகவும், பெண்ணுக்குத் தனியாகவும் இச்சடங்கு நிகழும். பெண்ணுக்குப் பூரம் கழித்தவுடன், பெண்ணை மணையில் உட்காரச் சொல்லி, புரோகிதர் விநாயகர் பூசை செய்து, சங்கல்பம் செய்து வைப்பார். பின்னர் பெண்ணின் மாமக்காரரைக் காப்புக்கட்டச் சொல்வார். மாமக்காரர், முன்னரே இதற்காகத் தயாராக வைத்திருக்கும் சிகப்பு அல்லது மஞ்சள் துண்டை, பெண்ணின் இடது மணிக்கட்டில் காப்பாகக் கட்டுவார்.



உள்ளூர்த் திருமணமாக இருந்தால், மாப்பிள்ளை வீட்டில், காலையில், மாப்பிள்ளையை ஒற்றை மணையில் அமரச் செய்து புரோகிதர் விநாயகர் பூசை செய்து, சங்கல்பம் செய்து வைப்பார். மாப்பிள்ளையின் மாமக்காரர், மாப்பிள்ளையின் வலது மணிக்கட்டில் காப்புக் கட்டுவார். வெளியூர்த் திருமணமாக இருந்தால், மாப்பிள்ளை அழைப்பு முடிந்த பிறகு, திருப்பூட்டுவதற்கு முன்னர் இச்சடங்கு நிகழும். பெண் வீட்டிலேயே திருமணம் நிகழ இருக்கும் மணையிலேயே, மாப்பிள்ளையை அமரச் செய்து புரோகிதர் பூசை, சங்கல்பம் செய்ய, மாப்பிள்ளையின் மாமக்காரர் காப்புக் கட்டுவார்.

திருமணத்திற்கு வந்திருக்கும் கூட்டத்தினரின் கண்களுக்குள், பொல்லாத கண்களும் பல இருக்கக்கூடும். கல்லடி பட்டாலும், கண்ணடி படக் கூடாதன்றோ, அதனால்தான், விநாயகரை வேண்டி, இக்காப்பு, அணிவிக்கப் பெறுகிறது.


மாப்பிள்ளை கோவிலுக்குச் சென்று வருதல்

உள்ளூர்த் திருமணமாக இருந்தால், திருமணத்தன்று காலையில், பங்காளிகள், உறவினர் புடைசூழ மாப்பிள்ளை,

பிள்ளையார் கோவிலுக்குச் சென்று, அருச்சனை செய்து சாமி கும்பிட்டுத் திரும்புவது மரபு. வெளியூர்த் திருமணமாக இருந்தால், பெண்ணின் ஊரில், மாப்பிள்ளை அழைப்பிற்காக மாப்பிள்ளை தங்கியிருக்கும் இடத்தில் (நகரச் சிவன் கோவில் அல்லது நகரத்தார் மடம்) உள்ள பிள்ளையார் கோவிலில் இந்த அருச்சனை, வழிபாடுகள் நடைபெறும்.

மாப்பிள்ளை அழைத்தல்

வெளியூர்த் திருமணத்தில் மட்டும் நிகழ்வது இது. திருமணத்தன்று காலையில் தம் ஊரிலிருந்து புறப்படும் மாப்பிள்ளையும், அவர் சுற்றத்தாரும், பெண்ணின் ஊரில் ஒரு பொது இடத்தில் (பெரும்பாலும் நகரச் சிவன் கோவில் அல்லது நகரத்தார் மடம்) தங்கியிருப்பர். முன்னரே குறித்திருக்கும் நல்ல நேரத்தில் பெண் வீட்டார் மேளதாளத்துடன் அங்கே வந்து மாப்பிள்ளை வீட்டாரை அழைத்துச் செல்வர். உள்ளூர்த் திருமணத்தில் மறுசீர் வைக்கும்போது செய்வது போல, வெளியூர்த் திருமணத்தில் மாப்பிள்ளை அழைக்க வந்தவுடன், பெண் வீட்டுப் பெரியவர்கள் மாப்பிள்ளைக்குரிய அணிகளை அணிவிப்பர். மாப்பிள்ளை அழைப்புக்கு வாண வேடிக்கைகள் ஏற்பாடு செய்வது மரபு.



முன்னர் திருமணங்கள் மூன்று நாள் நிகழ்ச்சியாக நடைபெற்றன. அப்போது மாப்பிள்ளை அழைப்பு, திருமணத்திற்கு முதல் நாள் மாலையில் நிகழும், பெண் வீட்டிற்கு அருகாமையில் ஒரு வீட்டை மாப்பிள்ளை வீடு என எற்பாடு செய்திருப்பர். பொது இடத்திலிருந்து மேளதாளம், வாண வேடிக்கையோடு மாப்பிள்ளையை அழைத்துச் சென்று அந்த வீட்டில் விட்டுவிடுவர். மாப்பிள்ளை வீட்டார் அனைவரும் அன்றிரவு அங்கே தங்குவர். திருமணத்தன்று காலையில் திருப்பூட்டச் செல்வர். இவையெல்லாம் 50 ஆண்டுகள் முன்னர் வரை இருந்து, இப்போது மறைந்துவிட்ட நடைமுறை.

திருப்பூட்டச் செல்லுதல்

இப்போது நிகழும் வெளியூர்த் திருமணங்களில் மாப்பிள்ளை அழைத்தலே திருப்பூட்டச் செல்வதாகவும் அமைந்து விடுகிறது. மூன்று நாள் திருமணமாக நடைபெற்றபோது வெளியூர்த் திருமணங்களிலும்

நடைபெற்ற திருப்பூட்டச் செல்லுதல் எனும் நடைமுறை இப்போது உள்ளூர்த் திருமணத்தில் மட்டும் இடம் பெறுகிறது.

திருமணத்தன்று காலையில், திருப்பூட்டுவதற்கு எனக் குறித்த நல்ல நேரத்தில் பெண் வீட்டில் இருக்கும் வண்ணம், அந்த நல்ல நேரத்திற்கு முன்னதாகவே, மாப்பிள்ளையும் அவர்தம் சுற்றத்தாரும் மேளதாளத்தோடு மாப்பிள்ளை வீட்டிலிருந்து புறப்பட்டுப் பெண் வீட்டிற்குச் செல்வர்.

மாப்பிள்ளை வீட்டு ஆண்களில் பெரியவர்கள் விளக்குச் சட்டி, சிலேட்டு விளக்கு 2, வெற்றிலை பாக்கு, கோட்டை நெல், வட்டுவப்பை ஆகியவற்றை எடுத்துச் செல்வர். பெண்கள் ஒரு தாம்பாளத்தில் பெண்ணுக்குரிய முகூர்த்தப் புடவை, சட்டை, கழுத்துரு, தாலிச் சங்கிலிகள், கோவில் மாலை, விபூதி, குங்குமம், சந்தனம், மஞ்சள் ஆகியவற்றை வைத்து எடுத்துச்செல்வர். இந்தத் தாம்பாளத்திற்குத் திருப்பூட்டும் தாம்பாளம் என்று பெயர். பெண் வீட்டிற்குள் சென்றதும், இந்தத் திருப்பூட்டும் தாம்பாளத்தைப் பெண்ணின் தாயார் பெற்றுக் கொள்வார்கள்.



மாப்பிள்ளை கோவிலுக்குச் செல்லுதல், மாப்பிள்ளை அழைப்பு, திருப்பூட்டச் செல்லுதல் ஆகிய நேரங்களில் மாப்பிள்ளை குதிரையேறிச் செல்வது 50 ஆண்டுகட்கு முன்னர் வரை இருந்த நடைமுறை. நகரத்தாருக்கும் குதிரையேற்றத்திற்கும் உள்ள தொடர்பு குறித்துக் கார்த்திகைப் புதுமை பற்றி எழுதும்போது விளக்கம் தரப் பெற்றுள்ளது. அண்மைக்காலமாக மீண்டும் பல திருமணங்களில் மாப்பிள்ளை குதிரையேறி வருதல் நிகழ்கிறது.

பெண் எடுக்கிக் காட்டுதல்

மூன்று நாள் திருமணம் நிகழ்ந்தபோது, திருமணத்திற்கு முதல்நாள் மாலை வெளியூர்த் திருமணங்களில் மாப்பிள்ளை அழைப்பு நடைபெறும். பொது இடத்திலிருந்து, ஏற்பாடு செய்யப் பெற்ற மாப்பிள்ளை

வீட்டிற்கு ஊர்வலமாகச் செல்லும்போது பெண் வீடு வழியாகச் செல்லும் வண்ணம் ஊர்வலப் பாதையை அமைத்துக் கொள்வர். மாப்பிள்ளை ஏறிவரும் குதிரை பெண் வீட்டிற்கு முன்நிற்கும். அப்போது பெண்ணின் அத்தை, பெண்ணை வீட்டு முகப்பிற்கு அழைத்து வந்து மாப்பிள்ளைக்குக் காண்பிப்பார். இது முன்னாள் நடைமுறை.

இப்போது உள்ளூர்த் திருமணமாயினும், வெளியூர்த் திருமணமாயினும், திருமணத்தன்று காலையில் திருப்பூட்டச் செல்லும் போது (மாப்பிள்ளை அழைப்பின்போது) மாப்பிள்ளை பெண் வீட்டிற்கு வந்ததும் உள்ளே அழைத்துச்செல்லப் பெறாமல் சிறிது நிற்கச் செய்து, பெண்ணை அவர் அத்தை அழைத்து வந்து காண்பித்து விட்டு உள்ளே அழைத்துப் போவார். அதன்பின் மாப்பிள்ளை உள்ளே அழைத்துச் செல்லப்படுவார்.

முன்னர் (நீண்ட காலத்திற்கு முன்னர்) பாலிய விவாகங்கள் நடைமுறையில் இருந்தபோது, பெண்ணைத் தூக்கிக் (எடுக்கி) காண்பித்திருப்பர் போலும். எனவே, இச்சடங்கு இப்போதும் பெண் எடுக்கிக் காட்டுதல் என்றே வழங்குகிறது.

கழுத்துரு – ஆசி வாங்குதல்

திருப்பூட்டுவதற்கு முன், திருப்பூட்டும் தாம்பாளத்தில் கழுத்துரு, தாலிச் சங்கிலிகள், கோவில் மாலை, மஞ்சள், விபூதி, குங்குமம், சந்தனம் முதலியவற்றை வைத்து, பெண்ணின் மாமக்காரர், கூடியுள்ள ஆண்களிடமும் பின்னர் மாமக்காரர் மனைவி பெண்களிடமும் காண்பிப்பார். அப்போது கூடியுள்ளோர் தம் கைகளால் தாம்பாளத்தைத் தொட்டு ஆசி வழங்குவார்கள். சிலப்பதிகாரத்தில், கோவலன் – கண்ணகி திருமணத்தை விளக்கும்போது, இளங்கோவடிகள் அகலுள் மங்கல அணி எழுந்தது எனக் குறிப்பிடுவது இச்சடங்காக இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

திருப்பூட்டுதல்

மாப்பிள்ளை வீட்டார் கொண்டு வந்த திருப்பூட்டும் சேலை, சட்டை ஆகியவற்றை அணிந்து கொண்டு, மணப்பெண் மணையில் கிழக்கு முகமாக நிற்பாள். மணைக்கு எதிரே, தரையில் போடப்பெற்றிருக்கும் தடுக்கில், மேற்கு முகமாக மாப்பிள்ளை நிற்பார். பெரும்பாலும்

மாப்பிள்ளையை விடப்பெண் உயரம் குறைவாக இருப்பதே பழக்கம். அதனால் பெண்ணை மணையில் நிற்க வைத்து, மாப்பிள்ளையைத் தரையில் நிற்கவைத்துத்திருப்பூட்டும் மரபு ஏற்பட்டிருக்கும் போலும். மணப்பெண் கையில் தேங்காய், வெற்றிலை, பாக்கு, மஞ்சள், பச்சரிசி ஆகியவற்றைக் கொடுப்பர். பெண் அவற்றை இருகைகளாலும் ஏந்திப் பிடித்து, தேங்காயின் குடுமிப் பகுதி மணமகனை நோக்கி இருப்பது போல வைத்துக் கொள்வாள்.



முதலில் மணமகன் திருநீற்றை, தான் பூசிக்கொண்டு மணமகளுக்கும் பூசுவார். பிறகு கோவில் மாலையை மணமகளுக்கு அணிவிப்பார். பின்னர் கழுத்துருவை எடுத்து, திருமாங்கல்யம் உள்ள பகுதி மேல்பாகத்தில் வருமாறு மணமகளுக்கு அணிவித்து, கழுத்தின் பின்புறம், மூன்று முடிச்சுப் போடுவார். முதல் இரண்டு முடிச்சுக்களை மாப்பிளையும், மூன்றாம் முடிச்சை நாத்தனாரும் போடுவது வழக்கம். பிறகு மாப்பிள்ளை, பெண்ணுக்குத் தாலிச் சங்கிலிகளை அணிவிப்பார். அதன்பின், கழுத்துருத் திருமாங்கல்யம், மூன்று முடிச்சுக்கள், தாலிச் சங்கிலிகளின் திருமாங்கல்யங்கள் ஆகியவற்றில் கோவில் விபூதி, சந்தனம், குங்குமம் ஆகியவற்றை ஒவ்வொன்றாக மணமகன் வைத்துவிடுவார். மணமகள் கையிலிருக்கும் தேங்காய் முதலியவற்றைத் தாம்பாளத்தில் வைப்பாள். பிறகு மூன்று முறை மாப்பிள்ளையும் பெண்ணும் மாலை மாற்றிக் கொள்வர். முதலில் பெண்தான் மாப்பிள்ளைக்கு மாலையிட வேண்டும். மூன்றுமுறை மாலை மாற்றிக்கொண்ட பிறகு மாப்பிள்ளை பெண்ணுக்கும், பெண் மாப்பிள்ளைக்கும் மிட்டாய் போன்ற இனிப்பை ஊட்டும் பழக்கம் அண்மைக்காலத் திருமணங்களில் இடம் பெறும் ஒரு நிகழ்ச்சியாகும்.

அதன் பின்னர் மாப்பிள்ளையும், பெண்ணும் இரு மாமக்காரர்கள் அழைத்துச் செல்ல வளவு வாசலில் இருந்து முகப்பு வரை சென்று பெரியவர்களிடம் ஆசிபெற்றுத் திரும்புவர். அவ்வாறு செல்லும்போது பெண், மாப்பிள்ளைக்கு வலப்புறமாகச் செல்வது மரபு.

நகரத்தார் திருமணத்தில், திருமணத்தின் இன்றியமையாச் சடங்காகிய, திருப்பூட்டுதலில், புரோகிதருக்கு எந்தப் பங்கும் இல்லை. இரு வீட்டுப் பெரியவர்களே நின்று, வழிகாட்டி, இச்சடங்கினை நிகழ்த்துவர்.

இசை பிடிமானம் எழுதுதல்

நகரத்தார்களின் கலியாண வீடுகளில் எழுதப்பெறும் திருமண ஒப்பந்தத்திற்கு இசைபிடிமானம் என்பது பெயர். திருமணத்திற்கு இரு வீட்டாரும் இசைந்து உடன்பட்டதற்கு ஆதாரமாக (பிடிமானமாக) இந்த ஆவணம் அமைவதால் இதற்கு இசைபிடிமானம் என்ற பெயர் அமைந்தது. இசைவுக்குரிய பிடிமானமாகையால் இசைவுப் பிடிமானம் என வழங்கி, மருவி, இசைபிடிமானமாகியிருக்கலாம் என்பர். இசைகுடி மானம் என்பது இந்த ஆவணத்தின் பெயர் என்றும் கூறுவர். அப்படி இருந்தால், மானம் என்பதைப் பிரமாணம் என்பதன் திரிபாகக் கொள்ள வேண்டும். இசைந்த குடிக்குரிய பிரமாணம் என்பதே இசைகுடிமானம் என வழங்கப்பெற்றிருக்க வேண்டும்.

பெண் வீட்டிலும், மாப்பிள்ளை வீட்டிலும் தனித்தனியே திருமணத்திற்கு முதல் நாள் மாலையில், அவரவர் பங்காளிகளில் ஒருவரால், இந்த ஆவணம் எழுதித் தயாரித்து வைத்துக்கொள்ளப் பெறும். திருமணத்தன்று, திருப்பூட்டிமுடிந்ததும், கல்யாண வீடாக அமைந்த வளவு வீட்டிற்குள் பெண்ணின் தந்தை, மாப்பிள்ளையின் தந்தை இருவரும் சென்று, விளக்கின் முன்னே அமர்ந்து, இந்த ஆவணத்தின் இருபடிகளிலும் கையொப்பமிடுவர்.

மாப்பிள்ளை வீட்டுப் பத்திரத்தில் மாப்பிள்ளையின் தந்தை முதலிலும் பின்னர் பெண்ணின் தந்தையும் கையெழுத்திடுவர். பெண் வீட்டுப் பத்திரத்தில் முதலில் பெண்ணின் தந்தையும் பின்னர் மாப்பிள்ளையின் தந்தையும் கையெழுத்திடுவர்.

முன்னரெல்லாம், இசைபிடி மானத்தின் இருபடிகளையும் பெண் வீட்டிலேயே தான் வைத்திருப்பர். திருமணத்தை உறுதி செய்யும் எழுத்து வடிவான சாட்சியம் பெண்ணுக்குத் தான் இன்றியமையாத தேவை எனக் கருதிப் பெண் வீட்டில் வைத்திருந்தனர் போலும்.



இப்போது ஏனைய ஒப்பந்தங்கள் போலவே, இந்த இசைபிடிமானமும் கருதப் பெற்று, பெண் வீட்டுப் பத்திரம் மாப்பிள்ளை வீட்டாரிடமும், மாப்பிள்ளை வீட்டுப் பத்திரம் பெண் வீட்டாரிடமும் கொடுக்கப்பெறுகிறது.

இந்த இசைபிடிமானம் அறுபது ஆண்டுகள் முன்புவரை, பனையோலையில் மஞ்சள் தடவி எழுத்தாணியால் எழுதப் பெற்று வந்தது. பின்னர் ஏடெழுதும் பழக்கம் இல்லாதபோது வெள்ளைத் தாளில் பேனாவால் எழுதினர். இப்போது அச்சிட்டபடிவங்களாகக் கிடைக்கும் இசை பிடிமானத்தை வாங்கிவந்து ஆண்டு, மாதம், தேதி, மாப்பிள்ளை, பெண் வீட்டார் விவரங்களை அவற்றுக்கென விடப்பெற்றிருக்கும் இடங்களில் நிரப்புவது பழக்கமாகி விட்டது.

இந்த இசைபிடிமானத்தின் அமைப்புமுறை, மாதிரி இசைபிடிமானம் ஆகியவை விளக்கப்பெறுகின்றன. நகரத்தார்களின் பண்பாட்டை, மரபு முறையை, பழமை போற்றும் பான்மையை விளக்கும் அமைப்பு முறை உடையது இந்த ஆவணம். எனவே இதன் அமைப்பு முறை விரிவாக அறிந்து கொள்ளப்படவேண்டிய ஒன்று.

மாதிரி இசைபிடிமானம்

கீலக ஆண்டு ஆனித் திங்கள் 31ஆம் நாள் (14.07.1968) கல்வாச நாட்டில் இளையாத்தங்குடியான குலசேகரபுரத்தில் பெருமருதூருடையான் காரைக்குடி இராமனாதன் செட்டி கருப்பாத்தானோ கேரளசிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில் மாத்தூரான வீர பாண்டிய புரத்தில் அரும்பாக் கூருடையான் உ.சிறுவயல் சிதம்பரஞ்செட்டி வெங்கடாசலரோ, அவர் மகன் முத்தையாவிற்கு இவர் மகள் பாகம் பிரியாள் என்ற மீனாளைப் பாணிக்கிரகணம் பண்ணிக் கொண்டமைக்கு அவர் பூஷணம் பூட்டும் பொன் ஒன்பது, ஆறு கல்லெடை: பொன் பதின்முக்கழஞ்சு: இவர் சீதனம் கொடுக்கும் பொன் இம்மாறு இவ்வெடை பொன் ஆறு கழஞ்சு, வெண்கலம் தராப்பலம் ஆறுபத்தொன்று வெள்ளாட்டிக்குப் பணம் முப்பது. சீராட்டும் சக்கரம் ஆறுபத்தொன்று. இவ்வகைப்படி செய்வோம். அவர் நன்கொடை கொடுக்கும் பொன் ஐம்பது. மோதிரம் விராகனெடை மூன்று. இவர் உகந்துடைமையாய்க் கொடுக்கும் பொன் வளையி ஏழு கழஞ்சு. இவ்வகைப்படி செய்வோம். இந்நாள் இவரிடும் பொன் இவர் சொற்படி தெரிசனை பதின்முக்கழஞ்சு இவ்வகைப்படி செய்வோம்.

இந்த இசைபிடிமானம் எழுதினேன் கல்வாச நாட்டில் இளையாத்தங்குடியான குலசேகரபுரத்தில் பெருமருதூருடையான்

காரைக்குடி சோமசுந்தரஞ்செட்டி இராமசாமி

கையெழுத்து

மாப்பிள்ளையின் தந்தை கையெழுத்து....

பெண்ணின் தந்தை கையெழுத்து...

இசைபிடிமானத்தின் அமைப்பு முறை

முதலில் கலியாண நாள் தமிழ் முறைப்படி ஆண்டு, மாதம், தேதி குறிக்கப்பெறும், அடைப்புக்குறிக்குள் ஆங்கில முறையில் தேதி, மாதம், ஆண்டு குறிக்கப்பெறும்.

பின்னர் ஒப்பந்தம் எழுதிக்கொள்ளும் மணமக்களின் தந்தையர் பெயர், கோவில், பிரிவு, ஊர் ஆகியவற்றோடு, எழுதப்பெறும், கோவிற் பிரிவுகளைக் குறிப்பிடும் போது வளநாடு, நாடு, ஊர், புரம், உடையார் என்ற வகுப்பு முறை வரிசையில் எழுதப்படுகிறது. ஒன்பது கோவில், அவற்றின் உட்பிரிவுகள் ஆகியவற்றின் வகுப்பு முறை வரிசைகள் வருமாறு

1. இளையாத்தங்குடி

கல்வாச நாட்டில் இளையாத்தங்குடியான குலசேகரபுரத்தில் 1.ஒக்கூருடையார், 2.அரும்பாற்கிளையரான பட்டினசாமியார், 3.பெருமருதூருடையார், 4.கழனிவாசக்குடியார், 5.கிங்கிணிக் கூருடையார், 6.பேரசெந்தூருடையார், 7.சிறு சேத்தூருடையார்

2. மாத்தூர்

கேரளசிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில் மாத்தூரான வீர பாண்டியபுரத்தில் 1.உறையூருடையார், 2.அரும்பாக்கூருடையார், 3.மணலூருடையார், 4.மண்ணூருடையார், 5.கண்ணூருடையார், 5.கருப்பூருடையார், 7.குளத்தூருடையார்.

3. வைரவன் கோவில்

கேரளசிங்க வளநாடாகிய ஏழகப்பெருந்திருவான வீரபாண்டியபுரத்தில் 1.சிறுகுளத்தூருடையார். அ.பெரிய வகுப்பு, ஆ. தெய்யனார் (தெய்வ நாயகர) வகுப்பு, இ.பிள்ளையார் வகுப்பு, 2.கழனி வாசலுடையார், 3. மருதேந்திரபுரமுடையார்.

4. நேமங் கோவில்

கேரளசிங்க வளநாட்டில் நேமமாகிய குலசேகரபுரத்தில் தேனாறுபாயும் இளநலமுடையார்.

5. இலுப்பைக்குடி

கேரளசிங்கவளநாடாகிய பிரம்பூர் நாட்டில் இலுப்பைக் குடியான புகலிடம் கொடுத்த பட்டணத்தில் சூடாமணிபுரமுடையார்.

6. சூரக்குடி

கேரளசிங்கவளநாட்டில் சூரக்குடியான தேசிக நாராயணபுரத்தில் புகழ் வேண்டிய பாக்க முடையார்.

7. வேலங்குடி

கேளரசிங்கவளநாடாகிய பாலையூர் நாட்டில் வேலங்குடியான தேசிக நாராயணபுரத்தில் கழனிநல்லூருடையார்.

8. இரணிக்கோவில்

கல்வாசநாட்டில் இளையாத்தங்குடியான குலசேகரபுரத்தில் இரணியூர் மருதங்குடியான இராஜநாராயணபுரத்தில் இரணியூர்த் திருவேட் பூருடையார்.

9. பிள்ளையார்பட்டி

கல்வாசநாட்டில் இளையாத்தங்குடியான குலசேகரபுரத்தில் மருதங்குடியான இராஜநாராயணபுரத்தில் பிள்ளையார்பட்டியான திருவேட்பூருடையார்.

மணமக்களின் தந்தையர் பெயர் குறிப்பிடும்போது, மேலே கண்ட வகுப்புமுறை வரிசையில் அவருக்குரியதை எழுதி, அதன் தொடர்ச்சியாக, 75 ஊர்களுள், எந்த ஊரினை அவர்கள் குடும்பம் சேர்ந்ததோ அந்த ஊரை எழுத வேண்டும். அதன் பின்னர் மணமக்களின் ஐயா பெயரோடு, தந்தை பெயர் வரும். இராமனாதன் செட்டி கருப்பாத்தான் என்றால் இராமனாதன் செட்டியார் மகன் கருப்பஞ்செட்டி என்பதைக் குறிக்கும்.

அடுத்ததாக இசைபிடிமானத்தொடரில், அவர் மகன் முத்தையாவிற்கு இவர் மகள் பாகம்பிரியாள் என்ற மீனாளைப் பாணிக்கிரகணம் பண்ணிக் கொண்டமைக்கு என வருகிறது. இங்கு பாணிக்கிரகணம் என்பது கை தொட்டுக் கொடுக்கும் திருமணம்

என்பதைக் குறிக்கும். மணமக்கள் இருவரின் வலக்கைககளையும் இணைத்துப் பட்டுத் துணியால் முடிந்து தீ வலம் வரச் செய்வது மணவறைச் சடங்குகளில் ஒன்று.

அடுத்து இத்திருமணத்திற்கு மணமக்களின் தந்தையர் கொடுக்கும் பொருள்களின் பட்டியல் வருகிறது. இப்பட்டியலில் மேலே கொடுத்திருக்கும் மாதிரி இசைபிடிமானத்தில் அவர் எனக் குறிக்கப்பெறுவது மாப்பிள்ளையின் தந்தையை இவர் எனக் குறிக்கப்பெறுவது பெண்ணின் தந்தையை. இப்பட்டியலில் இவ்வொப்பந்தம் எழுதத் தொடங்கிய காலத்தில் கொடுக்கப்பட்டவையே தொடர்ந்து இடம் பெறுகின்றனவே தவிர இப்போது நடைமுறையில் கொடுப்பவை எழுதப்பெறுவதில்லை.

நகரத்தார்களின் பண்பாடு, வரலாறு, மரபுமுறைகளை விளக்கும் ஆவணம் இசைபிடிமானம். பூவந்திச் சோழன் காலத்தில் நகரத்தார் பெண்களெல்லாம் இறந்து, இளைஞர் மட்டும் மிஞ்சியபோது, மன்னன் ஏற்பாட்டினை ஏற்ற, நகரத்தார் இளைஞர்கள் வெள்ளாளப் பெண்களை மணந்தனர் என்பது நகரத்தார் வரலாற்றில் இடம்பெறும் ஒரு குறிப்பு. இசை பிடிமானத்தில் வெள்ளாட்டிக்குப் பணம் முப்பது எனக் காணப்பெறும் ஒரு தொடர் இவ்வரலாற்றுக்குறிப்பை ஒட்டியதாக இருக்கலாம் என்பர் ஆய்வறிஞர்.


இன்று கொடுக்கும் சீதனம், பொன் அளவு ஆகியவை மாறினாலும் பழைய அளவைகளை இட்டு, அதே சொற்றொடர்களுடன் இசைபிடிமானம் எழுதப்படுவது, நகரத்தார் பழமையையும், மரபையும் போற்றும் இயல்பினர் என்பதை உறுதிப்படுத்துகிறது.

திருப்பூட்டிய சடங்கு

இசைபிடிமானம் எழுதிக் கொண்டவுடன் செய்யப்பெறும் சடங்கு இது. இதனை மணப்பெண்ணின் நாத்தனார், மாமியார் ஆகியோர் செய்து கொள்வர். நாத்தனார் இல்லாத குடும்பத்தில் மாமியார் மட்டும் சடங்கு செய்து கொள்வதுண்டு. நாத்தனார் முறை உடைய பெண்ணைச் சடங்கு செய்து கொள்ளச் சொல்வதும் உண்டு.

இச்சடங்கு செய்வதற்காகவே சடங்குத்தட்டு என்பது நகரத்தார் குடும்பங்கள் அனைத்திலும் இருக்கும். வட்ட வடிவத்தட்டில் 7 கிண்ணங்கள் கொண்டதாக இத்தட்டு இருக்கும். வெள்ளியில் அல்லது

எவர் சில்வரில் இருக்கும். கிண்ணங்களில் வெற்றிலை, பாக்கு, மஞ்சள், திருநீறு, பச்சரிசி, உப்பு, புளி, பஞ்சு ஆகியவற்றோடு சிறிய பிள்ளையார் ஒன்றும் இருக்கும்.



மணப்பெண்ணை, மணையின் வலப்புற ஓரத்தில் கிழக்குமுகமாக நிற்கச் செய்து, பெண்ணுக்கு நேர் எதிரே சடங்கு செய்பவர்கள் நின்று கொண்டு சடங்குகளைச் செய்வர். சடங்கு செய்பவர். முதலில் சடங்குத் தட்டில் உள்ள திருநீற்றைத் தன் வலது கையினால் எடுத்து, தானும் நெற்றியில் பூசிக்கொண்டு பெண்ணுக்கும் நெற்றியில் பூசுவார். பிறகு, சடங்குத் தட்டில் உள்ள ஏழு கிண்ணங்களுள், ஒவ்வொன்றையும் மூன்று மூன்று முறை தொட்டு, திருநீற்றைத் தானும் கழுத்தில் பூசிக்கொண்டு, பெண்ணுக்கும் கழுத்தில் பூசுவார். இது இருபத்தொரு முறை நிகழும்.

பிறகு மணமகள் கையில் ஒரு வெற்றிலையைக் கொடுப்பர். சடங்கு செய்பவர் தன் இடது கையில் நிறை நாழியைப் (படியில் நெல்லும், அதன் மேல் கத்தரிக்காயும் இருக்கும்) பிடித்துக் கொள்வார். வலது கையில் நீர் நிறைந்த கெண்டிச் செம்பை எடுத்து, மணமகள் கையில் உள்ள வெற்றிலையில் சிறிது நீரை ஊற்றுவார். மணமகள் அந்த நீரைப் பாதங்களில் வடித்துவிட்டு இரு கைகளினாலும் வெற்றிலையை நெற்றியில் வைத்து வணங்குவாள். இச்சடங்கு மூன்று முறை நிகழும்.



இது போல, நிறை நாழிக்குப் பதிலாக, சிலேட்டு விளக்கு, பிள்ளைக் குழவி முதலியவற்றைத் தனித்தனியே இடக்கையில் வைத்துக் கொண்டு, மூன்று மூன்று முறை நீர் ஊற்றிச் சடங்கு செய்வர். சடங்கு முடிந்ததும் சிலேட்டு விளக்கை நேராகத் திருமண வீடாகத் திகழும் வளவு வீட்டிற்குள் கொண்டு போய் வைப்பர். மற்ற பொருள்களை மணமகளின் பின்புறமாகச் சுற்றி, இடவலமாகக் கொடுத்து, பின் வீட்டிற்குள் வைப்பர்.

மணவறைச் சடங்கு

அடுத்து நிகழ்வது மணவறைச் சடங்கு. இதனைப் புரோகிதர் நடத்தி வைப்பார். நகரத்தார் திருமணத்தில், பூரம் கழித்தல், பகவணம் செய்தல், மணவறைச் சடங்கு இந்த மூன்றில் மட்டுமே புரோகிதருக்கு இடம் உண்டு. திருப்பூட்டும் போது அவர் பங்களிப்பு எதுவும் இல்லை.

மணவறைச்சடங்கில் மணமக்கள் இருவரையும் மணையில் கிழக்கு முகமாக அமரச் செய்வர். மாப்பிள்ளையின் வலப்புறம் பெண் அமர்தல் மரபு. எதிரே புரோகிதர் அமர்ந்து விநாயகர் பூசை, வர்ணகும்ப பூசை, அக்னி வளர்த்து நவக்கிரக ஓமம், ஆயுள் ஓமம் முதலியவற்றை நடத்துவார். பின்னர் மாப்பிள்ளை பெண் இருவரின் வலக்கைகளையும் இணைத்துத் துணியால் கட்டி, இருவரையும் தீ வலம் வரச்செய்வார். இதனைத்தான் இளங்கோவடிகள்,

மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலம் வருவது

எனக் கண்ணகி திருமணக் காட்சியாக வருணிக்கிறார்.





பின்னர் மீண்டும் மணமக்களை மணையில் அமரச் செய்து அரிமணம் இடுதல், பூமணம் இடுதல் ஆகியவற்றைச் செய்யச் சொல்வார் புரோகிதர். மணைக்கு முன்னே, அரச இலைகள் கட்டப்பெற்ற, முளைப் பாலிகைக் கிண்ணங்கள் ஐந்தில், முளைவிட்ட நெல் முதலிய தானியங்கள் வைக்கப்பெற்றிருக்கும். பங்காளிகள், தாயபிள்ளைகள் வீட்டைச் சேர்ந்த பெரியவர்கள் (ஆண்கள்) இந்தத் தானியங்களைக் கொஞ்சம் கொஞ்சம் கையால் எடுத்து மணமக்கள் மீது போட்டு வாழ்த்துவது அரிமணம் இடுதல் எனப்படும். இச்சடங்கு பகவணத்தின் போது மணமகனுக்கும், மணமகளுக்கும் தனித்தனியாகவும் நடைபெறும்.



மலர்களை எடுத்துப் பசும்பாலில் நனைத்து, மணமக்கள் உடலில் மணிக்கட்டு, முழங்கை, தோள்பட்டை ஆகிய மூன்று இடங்களிலும் தொட்டு வாழ்த்துதல் பூமணம் இடுதல் ஆகும். ஒவ்வொருவரும் இதனை மூன்று முறை செய்வர். இச்சடங்கும் பகவணத்தின் போதும் இடம் பெறும்.

சாப்பாடு போடுதல்

திருப்பூட்டிய சடங்கு, மணவறைச் சடங்கு ஆகியவை முடிந்த பிறகு மணமகள் தன் கையால் மணமகனுக்குச் சாப்பாடு பரிமாறுவாள். அவர் உண்டு முடிந்ததும் அதே இலையில் பெண்ணை உணவருந்தச் செய்வர். நேற்றுவரை இருவராக இருந்த நாம், இன்று முதல் ஒருவராகி விட்டோம் என அவர்களை உணரவைக்க, அவர்களுக்குள் வேற்றுமை நீங்கி, ஒற்றுமை ஏற்படச் செய்வதற்காக நம் முன்னோர் இதனைத் திருமணச் சடங்குகளுள் ஒன்றாக்கியுளர்.

கும்பிட்டுக் கட்டிக் கொள்ளுதல்

வளவு வாசலில் மணமக்கள் கிழக்கு முகமாக நிற்பர். மணமகனுக்கு வலப்புறம் மணமகள் நிற்பது மரபு, உறவினர், பங்காளிகள், நண்பர்கள் வரிசையாக வருவர். மணமக்கள் அவர்களை வணங்கி ஆசி பெற்றுக் கொள்வர். அப்போது உறவினர்களும், நண்பர்களும் மணமக்களுக்குப் பரிசளிப்பர்.

பணம் எழுதுதல்

மணவறைச் சடங்கு முடிந்ததும், மணமகன் வீட்டுப் பங்காளிகள் ஓரிடத்திலும், மணமகள் தந்தை வீட்டுப் பங்காளிகள் ஓரிடத்திலும் அமர்ந்து பணம் எழுதுவர். பணம் எழுதுதலும், அதற்குரிய பதிவேடாக ஆவணமாக, அமையும் பணத்திருப்பும், இசைபிடிமானம் போலவே, ஆழ்ந்த பொருள் சிறப்புடையது.

பணத்திருப்பு

நகரத்தார் வீடுகளில் நடைபெற்ற புதுமை, கார்த்திகைப் புதுமை, திருவாதிரை, திருமணம், மணிவிழா, புதுமனை புகுவிழா போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட பங்காளிகளும், தாய பிள்ளைகளும், தங்கள் வருகையைப் பதிவு செய்யும் வண்ணம் ஒரு தொகையை அடையாளமாக வழங்கினர். அப்போது அவர்கள் பெயர்களும், பெயர்களுக்கெதிரே அவரவர் வழங்கிய தொகையும், ஏடுகளில் எழுத்தாணியால் எழுதப்பெற்றன. இதனைப் பணம் எழுதுதல் என்றனர். இந்த ஆவணம் பணத்திருப்பு எனப்பெற்றது.



இப்போது புதுமை முதலிய சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறுவதில்லை. திருமணம், மணிவிழா, புதுமனை புகுவிழா ஆகியவற்றில் இப்போதும் பணம் எழுதப்பெறுகிறது. ஆனால், இதற்கென அச்சகங்களில் தயாரித்து விற்கப்படும் சிறு நோட்டுப் புத்தகங்களில் பேனாவினால் எழுதப்பெறுகிறது. அப்புத்தகங்களின் அட்டையில் மொய்ப்பண ஏடு என அச்சிடப் பெற்றுள்ளது. ஆயினும், மரபுச்சிறப்பு உணர்ந்த நகரத்தார் பெருமக்கள் இதனை இன்றும் பணத்திருப்பு என்றே குறிப்பிடுகின்றனர்.

ஒரு பணம் என்பது முன்னர் புழக்கத்தில் இருந்த இரண்டு அணாவை (12 காசுகள்)க் குறிக்கும். பெரும்பாலும், பங்காளிகள் தம் வருகைக்கு அடையாளமாக, ஒரு பணம் எழுதுவதே நீண்ட நெடுங்காலமாக வழக்கமாக இருந்தமையால், இச்செயல் பணம் எழுதுதல் எனப்பெயர் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு எழுதப்பெற்ற பணத்தின் இருப்பைக் காட்டும் பதிவேடு பணத்து இருப்பு எனப்பொருள் தரும் பணத்திருப்பு ஆகியிருத்தல் வேண்டும்.

திருமண வீட்டில் மணவறைச் சடங்குகள் முடிந்தபின், பெண் வீட்டுப் பங்காளிகள் ஓரிடத்திலும், மாப்பிள்ளை வீட்டுப் பங்காளிகள் மற்றோரிடத்திலும் உட்கார்ந்து தனித்தனியே பணம் எழுதுகின்றனர். அவர்களுக்கு நடுவே ஒரு முக்காலி மீது ஒரு வெள்ளி அல்லது எவர்சில்வர்ச் சட்டியில் சிறிது பால் ஊற்றி வைப்பர். அதில் வெற்றிலை, பூ ஆகியவற்றைப் போடுவர். சங்கு ஊதுவர். முதன்முதலில் மாப்பிள்ளை அல்லது பெண்ணின் தந்தை வழி ஐயா பெயர் படிக்கப் பெறும்.

அவர்களுக்குரிய பணம் இவ்வளவு எனச் சொல்லி அத்தொகையைப் பாலினுள் போடுவர். பிறகு பங்காளிகள் அனைவர் பெயரும், முதல்நாளே எழுதி வைக்கப் பெற்ற வரிசை முறையில் படிக்கப்பெறும். அவற்றுள் வந்திருப்போர் சார்பாகத் தொகைகள் வழங்கப் பெற்றுப் பதிவு செய்யப் பெறும்.

பங்காளிகள் பட்டியல் முடிந்ததும், இருதாள்களை விட்டுவிட்டுத் தாயபிள்ளைகள் பணம் எழுதத் தொடங்குவர். அதில் முதலாவதாக மாப்பிள்ளை அல்லது பெண்ணின் ஆயா வீட்டு ஐயா பெயர் எழுதப் பெறும். அப்போது சங்கு ஊதுவர். அவர்கள் மாப்பிள்ளை அல்லது பெண்ணின் தாயாரிடம் முன் கூட்டியே பேசி முடிவு செய்து வைத்திருக்கும் தொகையை (1001 பணம், 501 பணம் என ஒரு தொகை) மாமப்பணம் என அறிவித்து வழங்குவர். அது பதிவு செய்யப்பெறும்.

பின்னர் தாய பிள்ளைகளில் வந்திருப்போர் அனைவரும் தாங்கள் விரும்பும் தொகைகளைப் பணம் எழுதுவர். இறுதியில் பணம் இருப்புக் கட்டி, சரிபார்த்து, அத்தொகையை ஒரு சிவப்புப் பட்டுத் துணியில் முடிவர். பிறகு ஒரு தாம்பாளத்தில் அப்பணமுடிப்பு, எலுமிச்சம் பழம், வெற்றிலை பாக்கு, பூ ஆகியவற்றை வைத்துப் பங்காளிகளில் பெரியவர். மாப்பிள்ளை அல்லது பெண்ணின் தந்தையிடம் கொடுப்பார். அவர் அதனை வாங்கி, திருமண வீடாகிய வளவு வீட்டிற்குள் வைத்து, சாமி கும்பிட்டபின் பணத்தை எடுத்துக் கொள்வார்.

இது ஒரு சடங்குபோல நிகழ்ந்தாலும், இச்சடங்கின் ஆவணமாகிய பணத்திருப்பு நகரத்தார் சமுதாயத்தின் பல சிறப்புக்களை உள்ளடக்கியதாகும். அவற்றை வரிசையாகப் பார்க்கலாம்.

வருகைப் பதிவு

பிற சமுதாயங்களில் இருக்கும் மொய் எழுதுதல் என்பது போல, திருமண வீட்டாரின் பொருள் வரவுக்குரிய பழக்கமாக இது நகரத்தார் சமுதாயத்தில் இல்லை. மாறாக இது ஒரு வருகைப் பதிவு போலவே பயன்படுகிறது. 9 அல்லது 10 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பட்டினத்தார், பதினோராம் திருமுறையில் இடம் பெற்றுள்ள, கோவில் நான் மணிமாலையைப் பாடியுள்ளார். இந்நூலின் நான்காம் பாடலில், சிவபெருமான் திருமணத்திற்குச் சென்ற பட்டினத்தார், தம் வருகையைப் பதிவு செய்து கொள்ளுமாறு ஒரு வேண்டுகோளைக் கீழ் வருமாறு முன்வைக்கிறார்.

உரிமையிற் பாடித் திருமணப் பந்தருள்
அமரர்முன் புகுந்து அறுகு சாத்திநின்
தமர்பெயர் எழுதிய வரிநெடும் புத்தகத்து
என்னையும் எழுத வேண்டுவன்

என்பதே அவ்வேண்டுகோள். இங்கே பட்டினத்தார் குறிப்பிடும் தமர் தான் வருகை தந்த பங்காளிகளும், தாய பிள்ளைகளும், அவர் பெயர் எழுதிய வரிநெடும் புத்தகம் தான் பணத்திருப்பு.

மக்கள் தொகைக் கணக்கு

இப்பணத்திருப்பு எழுதும் முறை இன்னும் பல சிறப்புக்களை உடையது. திருமணத்திற்கு முதல் நாள் மாலையில் பங்காளி வீட்டு ஆண்மக்கள் அரசாணிக்கால் கட்டுதல், மாப்பிள்ளை திருமணமாயின் கழுத்துரு கோத்தல், இசைபிடிமானம் எழுதுதல் ஆகியவற்றோடு பணத் திருப்பில் பங்காளி வீட்டுப் பட்டியலையும் எழுதித் தயார் செய்து விடுவர். தாய பிள்ளைகளைப் பொறுத்தவரை, பணம் எழுதும் நேரத்தில், யார் யார் கொண்டு வந்து பணம் கொடுத்து எழுதச் சொல்கிறார்களோ அவர்கள் பெயர்கள் அந்த வரிசையில் எழுதப் பெறும்.

ஆனால் பங்காளிகள் பட்டியல் முதல் நாள் மாலையே எழுதப் பெறும். அதற்கு முன்னதாகத் திருமணம் நிகழ்ந்த பங்காளி வீட்டுப் பணத்திருப்பை வாங்கி வந்து, அதனை முன் மாதிரியாக வைத்துக் கொண்டு, புள்ளிகள் யாரும் விட்டுப்போகாமல், பங்காளிகள் பட்டியலை எழுதுவர். எனவே, இப்பணத்திருப்பு, குறிப்பிட்ட பங்காளி வகையினரின் மக்கள் தொகைக் கணக்காகவும் பதிவாகிறது. அண்மைக் காலமாக, பணத்திருப்பின் இன்றியமையாமை தெரியாத சிலர், வேலைக்குச் சோம்பல் பட்டுக் கொண்டு, "அனைவர் பெயரும் அடங்கிய பட்டியல் எழுத வேண்டாமே. நாளை, வருவோர் பெயர்களை மட்டும் எழுதிக்கொண்டு பணம் எழுதிக்கொண்டால் போதுமே" எனக் கூறுகின்றனர். இது நகரத்தார் பண்பாட்டையும், அதன் ஆழமான பொருள் சார்ந்த பின்னணியையும் அறியாதவர் செய்ய முற்படும் தவறு. இதற்கு நம் சமூகத்தினர் இடம் அளிக்காமல், பழைய மரபிற்கேற்ப, பங்காளிகள் பட்டியலைத் தயார் செய்தல் வேண்டும். அப்போதுதான் பணத்திருப்பு குறித்த பங்காளிகளின் மக்கள் தொகைக் கணக்காக அமையும். மறுநாள், அம்முழுப் பட்டியலில், வந்தோர் பெயருக்கு நேரே மட்டும்

தொகை வரவு வைத்து, ஏனையோர் பெயரைச் சும்மா விட்டுவிட்டால், அது வருகைப் பதிவாகவும் ஆகிவிடுகிறது.

மரபு

பணத்திருப்பில் பெயர் எழுதும் முறை பழந்தமிழ் மரபைப் பின்பற்றும் முறையாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. சங்க காலத் தமிழில் உதியன் சேரன் என்ற தொடர் உதியன் மகன் சேரன் எனப் பொருள் தரும். அது போல நகரத்தார் பணத்திருப்பில் கருப்பஞ்செட்டி முத்தய்யா என எழுதப் பெறும் தொடர் கருப்பஞ் செட்டியார் மகன் முத்தய்யா எனப் பொருள்தரும். இப்போது சிலர் கரு. முத்தய்யா என்றே பணத்திருப்பில் எழுதுகின்றனர். இது மரபிலிருந்து பிறழ்வதாகும். பணத்திருப்பின் மரபுச் சிறப்பை உணர்ந்தோர், அதில் பெயர் எழுதும் பாணியில் பழைய மரபையே பின்பற்றுவது அந்த ஆவணம் மரபு போற்றும் பெருமையுடையது என்ற உண்மையைக் காக்க உதவும்.

சமத்துவம்

நகரத்தாரின் சமத்துவ உணர்வையும் சமத்துவப் போக்கையும் இப்பணத்திருப்பு இருவகைகளில் உணர்த்துகிறது. முதலாவதாக எழுதப் பெறும் தொகையின் அளவு இச்சமத்துவப் போக்கை எடுத்துக் காட்டுகிறது. பணத்திருப்பை மொய்ப்பண ஏடு எனச் சொல்லக்கூடாது என்பதற்கு இது ஒரு சிறந்த காரணம். மொய் எழுதும் பிற சமூகங்களில் அவரவர் தத்தம் விருப்பம், தகுதி இவற்றுக்கேற்ப, கூடுதல் குறைவாக மொய் எழுதுவர். ஆனால் பணம் எழுதும் நகரத்தார் சமூகத்தில், பங்காளிகள் அனைவரும் ஒரு குறிப்பிட்ட தொகையையே (அதுவும் அடையாளம் கருதி எழுதப்பெறும் சிறு தொகையையே) பணம் எழுதுவர். இது நகரத்தார் சமூகத்தின் சமத்துவப் போக்கை உணர்த்துகிறது.

அதுபோலவே, பணத்திருப்பில் பெயர் எழுதும் முறையும், சமத்துவ உணர்வை எடுத்துக்காட்டுவதாக அமைகிறது மிகப்பெரிய செல்வர், மிகப் பெரிய பதவியில் இருப்போர், மிகப்பெரிய செல்வாக்குடையவர் என யாராக இருந்தாலும் பணத்திருப்பில் அவர் தந்தை பெயரும், அவர் பெயரும் என ஒரே மாதிரியாகவே எழுதப்பெறும். எடுத்துக்காட்டாக,

செட்டிநாட்டரசர் பெயர், அண்ணாமலை செட்டி முத்தையா என்றும்,

வள்ளல் அழகப்பர் பெயர், இராமனாதன் செட்டி அழகப்பன் என்றும்,

துணைவேந்தர் வ.சுப.மா.பெயர், சுப்பிரமணியன் செட்டி மாணிக்கம் என்றும் தான் எழுதப்பெறும் பதவி, பட்டம் இவற்றை எழுதிப் பங்காளிகளுள் யாரையும் வேறுபடுத்திக் காட்டாத சமத்துவ உணர்வின் வெளிப்பாடன்றோ இது.

குடி வழி

பங்காளி பட்டியல் எழுதப் பெறும் வரிசைமுறை அந்தவகைப் பங்காளிகளின் குடிவழியைப் பின்வரும் தலைமுறையினருக்கு உணர்த்தும் வண்ணம் அமைவது இப்பணத்திருப்பின் மற்றொரு சிறப்பு. பட்டியலில், திருமண வீட்டார் வளவுக்குள் உள்ள புள்ளிகள் பெயர் முதலில் எழுதப் பெறும், அந்தப் பங்காளிவகையில் வாரிசு முறைப்படி எந்தெந்த ஐயாக்கள் வீடு அடுத்தடுத்து வருமோ அந்த வரிசையில் தான் பட்டியல் எழுதப்பெறும்.

ஒரு பொதுக்குடும்பத்தின் பட்டியல் எழுதப் பெறும் போது முதலில் மூத்தவர் பெயர், அதனையடுத்து அவர் மக்களில் மூத்தவர் பெயர், அதற்கடுத்தது அவர் மகன், அதாவது முதலில் எழுதியவரின் பேரன் திருமணமான புள்ளியாக இருந்தால் அவன் பெயர். அதற்குப் பின்னர் முதலில் எழுதியவரின் இரண்டாவது மகன் இருந்தால் அவர் பெயரும், அவர் மகன் இருந்தால் அவர் பெயரும் எழுதப்பெறும். இவற்றுக் கெல்லாம் பின்னர்தான் முதன்முதலில் எழுதப்பெற்றவரின் தம்பி இருந்தால் அவர் பெயர் வரும். எனவே, பணத்திருப்பு, குறித்த பங்காளிகளின் வாரிசு முறைப்படியான குடிவழியைப் பின்னோருக்கு உணர்த்தும் ஆவணமும் ஆகும்.

சமுதாயக் கட்டுக்கோப்பு

பணத்திருப்பில் பங்காளி பட்டியலில் ஒருவர் பெயர் இடம் பெற வேண்டுமானால் அவர் புள்ளி ஆக வேண்டும். அதாவது அவருக்குத் திருமணம் ஆகியிருக்க வேண்டும். அவ்வாறு, புள்ளி ஆகப் பட்டியலில் இடம் பெற்றபின், செட்டியாரோ ஆச்சியோ ஒருவர் காலமாகி ஒருவர் இருந்தாலும் அவர்கள் பெயர், பட்டியலில் தொடரும். இருவரும் காலமாகி விட்டால் அவர்கள் பெயர், அதற்குப் பின் எழுதப் பெறும் பணத்திருப்புகளில் இடம் பெறாது.

நகரத்தார் இளைஞன் ஒருவன் வேறு சாதிப் பெண்ணைக் கலப்புத் திருமணம் செய்து கொண்டால், அவன் பெயர், பங்காளிகள் பட்டியலில் பணத்திருப்பில் இடம் பெறாது. அவன் குடும்பத்தோடு திருமணத்திற்கு அழைக்கப்பெற்றாலும், திருமணத்தில் கலந்து கொண்டாலும், பணம் எழுத முடியாது.

இவ்வாறாக, பணத்திருப்பு என்பது, மக்கள் தொகைக் கணக்கு, வருகைப் பதிவு: மரபு பேணுதல்: சமஉரிமையைப் பறை சாற்றுதல்: குடிவழியை அறிவித்தல்: சமூகக் கட்டுக்கோப்பைப் பாதுகாத்தல் ஆகிய பணிகளைச் செய்யும் பன்முகச் சிறப்புடைய ஆவணம் என்பதை இளையதலைமுறையினர் அறிந்து, தொடர்ந்து பின்பற்றுதல் நலம் தரும்.

மஞ்சள் நீராடுதல்

மணமகள் வீட்டில் வளவு வாசலில் மணமக்கள் நாற்காலியில் அமர்ந்திருக்க, தண்டல்காரன், இருவருக்கும் எண்ணெய், சீயக்காய், மஞ்சள் கொடுத்து நீராடச் செய்வது வழக்கம். ஐம்பத்தொன்பதாம் ஆண்டு நிறைவு விழா, மணிவிழா, பிறையாயிரம் கண்ட பெருவிழா போன்றவற்றில் தம்பதியர் வளவு வாசலில், கிழக்கு நோக்கி நாற்காலியில் வீற்றிருக்க, வேள்வி செய்து, ஆற்றல் ஊட்டப்பெற்ற, நன்னீரால் உறவினர், பங்காளிகள் அவர்களை நீராட்டும் நிகழ்ச்சியின் முன்னோட்டம் போல இம்மஞ்சள் நீராடுதல் முற்காலத் திருமணங்களில் அமைந்திருந்தது.

ஆனால் இப்போது சடங்குகளைக் குறைத்து, நிகழ்வுகளை விரைவுபடுத்தும் நோக்கில் கைவிடப்பெற்ற சடங்குகளில் இதுவும் ஒன்று. ஆயினும் முழுவதும் விட்டுவிடாமல், வளவு வாசலில் கிழக்குமுகமாக நாற்காலியில் தம்பதியரை அமர்த்தி, இருவரின் ஆடை நுனிகளை மட்டும் மஞ்சள் நீரில் நனைப்பதாக இப்போது இச்சடங்கு நிகழ்கிறது.



இச்சடங்கு நிகழும்போது மாப்பிள்ளையின் தந்தை, பெண்ணின் தந்தை இருவரும் ஒருவர் ஆடை நுனியை மற்றவர் மஞ்சள் நீரால் நனைப்பர். அவ்வாறே மாப்பிள்ளையின் தாயாரும்,

பெண்ணின் தாயாரும் ஒருவர் ஆடை நுனியை மற்றவர் மஞ்சள் நீரால் நனைப்பர். இவை, முன்னையச் சடங்காகிய மஞ்சள் நீராடுதலில் எஞ்சி நிற்கும் எச்சங்கள் எனலாம்.

காப்புக்கழற்றிக் கால்மோதிரம் இடுதல்



மணமகனின் தாயார் அல்லது சகோதரி, மணமகளின் வலது கையில் காப்பு அணிவித்து, அவளது இரண்டு கால்களிலும் மிஞ்சி அணிவிப்பார்கள். வீட்டிற்குப் புதிதாக வந்திருக்கும் மருமகளிடம், மாமியார், குடும்ப அணிகலன்களையும் குடும்பப் பொறுப்பினையும் வழங்குவதற்குரிய அடையாளமே இச்சடங்கு. இது நிகழ்ந்த பின்னர், பகவணத்தின்போது மணமக்கள் கையில் கட்டிய காப்பு அவிழ்க்கப் பெறும்.

பிள்ளை எடுக்கிக் கொடுத்தல்

பெண் வீட்டில் மாப்பிள்ளை அமர்ந்திருக்க அவர் அருகில் இரு வீட்டுப் பெரியவர்களும் ஒவ்வொருவராய் வந்து அமர்வர். பெண் தன் கையில் செந்நிறப் பட்டுத்துணியில் வைத்திருக்கும். வெள்ளியால் ஆன, பிள்ளைக் குழவியை, அந்தப் பெயரிவரிடம் கொடுத்து, அவரை வணங்கித் திரும்பப் பெற்றுக் கொள்வாள்.



பிள்ளை பிறந்த வீட்டில் பேறு கேட்க வருபவர்களிடம், பிள்ளையைக் கொடுத்து, வாங்கிக் கொள்வது நடைமுறை வழக்கம். அதற்குரிய முன்னோட்டமாக இச்சடங்கு திருமணத்தன்று நிகழ்கிறது.

பெண் சொல்லிக் கொள்ளுதல்



பெண் வீட்டுப் பெரியவர்களிடம், பெண், வெற்றிலை பாக்குத் தாம்பாளத்தைக் கையில் வைத்துக் கொண்டு, சொல்லிக் கொண்டு விடைபெறுவது இச்சடங்கு.

பெண்ணழைப்பும் சடங்கும்

உள்ளூர்த் திருமணாக இருந்தால், பெண் வீட்டிலிருந்து, நல்ல நேரத்தில் மணமக்களை மேளதாளத்துடன், மாப்பிள்ளை வீட்டிற்கு இரு வீட்டு உறவினர், பங்காளிகள் சூழ அழைத்துச் செல்வர்.

வெளியூர்த் திருமணமாக இருப்பின் மணமக்களை, மாப்பிள்ளையின் ஊரில் அவர்கள் பங்காளி அல்லது உறவினர் ஒருவர் வீட்டில், அல்லது ஒரு பொது இடத்தில் இருக்கச் செய்து, குறித்த நல்ல நேரத்தில் மேளதாளத்துடன் அழைத்துச் செல்வர்.

பெண்ணழைப்பு நிகழ்ந்தவுடன் மாப்பிள்ளை வீட்டில், பெண்ணுக்கு மாமியார், நாத்தனார் ஆகியோர், திருப்பூட்டிய சடங்கு செய்ததைப் போலவே பெண்ணழைத்த சடங்கினையும் செய்வார்கள்.

குலம் வாழும் பிள்ளை எடுத்தல்

மாப்பிள்ளை வீட்டில், மாப்பிள்ளையின் பெற்றோருக்குரிய வளவு வீட்டுக்கு எதிரே, வளவுப் பத்தியில் இச்சடங்கு நிகழும். அங்கே ஒரு குடத்தில் தண்ணீர் வைத்து, அத்தண்ணீருக்குள் குலம் வாழும் பிள்ளையைப் (வெள்ளி, அல்லது சில்வரில் செய்யப்பெற்ற, சிறு, குழந்தைச் சிலை) போட்டு வைப்பர்.



பெண்ணழைப்பு முடிந்ததும், மாப்பிள்ளையும், பெண்ணும் அக்குடத்தைச் சுற்றி வந்து, இருவரும் குடத்தினுள் தத்தம் வலக்கையை விடுவர். யார் பிள்ளையை எடுக்கிறார்கள்: பார்க்கலாம் என்பது போன்ற ஒரு சின்னப் போட்டி விளையாட்டாக இது நடைபெறும்.



ஆனாலும் மரபு தெரிந்த, பெரியவர்கள், மாப்பிள்ளையிடம் தனியே, குலம் வாழும் பிள்ளையைப் பெண்ணே எடுக்கட்டும், நீ போட்டி போட்டு எடுத்துவிடாதே விட்டுக் கொடுத்துவிடு எனச் சொல்லுவர்.

குலம் வாழும் பிள்ளையை, வீட்டுக்குத் திருமகள் போல வந்திருக்கும் மருமகள் எடுப்பதுதான் குடும்பத்திற்கு மங்கலம் பெருக வைக்கும் என்பது ஒரு நம்பிக்கை. இதுவரை தனித்து வாழ்ந்த, இளைஞன், இனி மனைவிக்காக விட்டுக் கொடுத்து வாழக் கற்றுக்கொள்ள இது ஒரு தொடக்கமாக அமையட்டும் என்பது மற்றொரு நோக்கம்.

சீராட்டுக் கொடுத்தலும் பாக்குச் சுருளும்

மணமகளுக்கு அவள் தகப்பனாரும் சகோதரர்களும் பாக்குச் சுருளில் வைத்துத் தருகிற பணம்தான் சீராட்டு. கணக்குப் பார்த்துப் பணம் கொடுக்கும் போது பெண்வீட்டார் ஒரு தொகையினைச் சீராட்டுக்காகக் கொடுக்க அது சீதனத்துடன் சேர்த்துக் கொள்ளப்பெறும்.

பாக்குச் சுருள் எழுதும் முறை வருமாறு :

.... வருடம் ....மாதம் ....தேதி.......... மகள் .... கலியாணத்தில் பாக்குச் சுருள் வைத்த விவரம்

1. ....செட்டி மகன் .... செட்டி .... தொகை

2. ....செட்டி மகன் .... செட்டி .... தொகை

பெண்ணின் தகப்பனார், சகோதரர்கள் அனைவர் பெயரும் பாக்குச் சுருளில் இடம்பெறும். தொகை கூட்டப்பெற்று, மொத்தத் தொகை சீராட்டு எனச் சீதன உண்டியலில் குறிப்பிடப்பெறும்.

பால்வேவும் பொங்கல் வேவும்

பெண்ணழைப்பு முடிந்ததும் மாப்பிள்ளை வீட்டில் இந்த வேவுகள் இறக்கப்பெறும். பால்வேவு இறக்கப் பெறும்போது, வேவுக் கடகத்தில வழக்கமான வேவுப் பொருள்களோடு, பெண் வீட்டிலிருந்து எடுத்து வரப்பெற்ற பால் செம்பும் இடம் பெற்றிருக்கும்.

தும்பு கட்டுதலும் நீர்ச்சோறு இடுதலும்

மாப்பிள்ளை வீட்டில், மாப்பிள்ளையின் பெற்றோருக்குரிய வளவு வீட்டின் எதிரே, வளவுப் பத்தியில் இச்சடங்கு நிகழும். உள்ளூர்த் திருமணமாக இருந்தால், இந்த இடத்தில் ஒற்றை மணை போட்டிருப்பார்கள். அந்த மணையின் மேல் பெண்ணைக் கிழக்கு நோக்கி நிற்க வைப்பர். வெளியூர்த் திருமணமாக இருந்தால், சும்மா பத்தியிலேயே நிற்கவைப்பர்.

திருமணத்திற்கு முதல்நாள் மாலை கழுத்துரு கோக்கும் போது, பங்காளிகள் பிள்ளைச்சரட்டில் கோத்து வைத்திருக்கும் ஒற்றைத் தும்பை, மாப்பிள்ளையின் தாயார், சகோதரி அல்லது அத்தை பெண்ணின் கழுத்தில் கட்டுவார்கள். அதன் பின்னர் பெண்ணின் தாய் வீட்டிலிருந்து கொண்டு வந்த நீர்ச்சோறு, பணியாரம், வள்ளிக்கிழங்கு ஆகியவற்றைப் பெண்ணுக்குப் பரிமாறுவார்கள்.

பால் பழம் சாப்பிட உறவினர் வீடு சென்று வருதல்

மணமக்களை உறவினர்கள் தத்தம் வீடுகட்கு அழைத்துச் சென்று பாலும் பழமும் சாப்பிடச் சொல்லி ரூபாய் கொடுப்பது இச்சடங்கு.

மாப்பிள்ளை பெண் தரப்பு உறவினர்களையும், பெண், மாப்பிள்ளை தரப்பு உறவினர்களையும் அறிமுகப்படுத்திக் கொள்வதற்காக என உருவாக்கப்பெற்ற சடங்கு இது. ஆறுநாள் திருமணம், மூன்று நாள் திருமணம் என நடைபெற்ற போது, ஒரு நாள் முழுவதும், ஒவ்வொரு உறவினர் வீடாக, அனைத்து வீடுகட்கும் மணமக்கள் சென்று வர வாய்ப்பு இருந்தது. ஆனால் இப்போது ஒரு நாள் கலியாணமாக, விரைவாக நடைபெறும் சூழலில், மாப்பிள்ளை வீட்டில் மாப்பிள்ளை பெற்றோருக்குரிய வளவு வீட்டிற்குள் மணமக்களை அழைத்து, உறவினர்கள் பால், பழம் கொடுத்து, பணம் கொடுப்பதாக இச்சடங்கு இப்போது சுருங்கி நிற்கிறது.

கணக்குப் பார்த்தல்

பெண்ணழைப்பு, வேவு முதலியவை முடிந்ததும், இருவீட்டுப் பங்காளிகளும்அமர்ந்து, சீதனப் பணத்தைப் பெண்ணின் தந்தை மாப்பிள்ளையிடம் கொடுப்பது கணக்குப் பார்த்தல் என வழங்குகிறது.

சீதனப் பணத்தை வெற்றிலை, பாக்கு, மஞ்சள், பூ ஆகிய மங்கலப் பொருள்களோடு ஒரு தாம்பளத்தில் வைத்து, அத்தாம்பளத்தைப் பெண்

வீட்டுப் பெரியவர்கள் ஒவ்வொருவராகக் கொடுக்க, மாப்பிள்ளை வணங்கிப் பெற்றுக் கொள்வார். பின்னர் மாப்பிள்ளை அத்தாம்பாளத்தைத் தம் வீட்டுப் பெரியவர்கள் ஒவ்வொருவரிடமாகக் கொடுத்து, வணங்கிப் பெற்றுக் கொள்வார். இறுதியாக மாப்பிள்ளையின் தம்பி அல்லது உறவுச் சிறுவன் ஒருவன் மாப்பிள்ளையை வணங்கி அத் தாம்பாளத்தைப் பெற்றுக் கொள்வான். பின்னர் அத்தாம்பாளத்தை மாப்பிள்ளை வீட்டு வளவில், மாப்பிள்ளை பெற்றோருக்குரிய வளவு வீட்டிற்குள் வைத்து, மாப்பிள்ளை வணங்கிய பின் ரொக்கம் எடுத்து வைக்கப்பெறும்.

சீதன உண்டியல்

முற்காலத் திருமணங்களில் சீதனம் ரொக்கமாகக் கொடுக்கப் பெறுவதில்லை. சீதன உண்டியல் எழுதப்பெற்று, அந்த உண்டியல் தாம்பளத்தில் வைத்துக் கொடுக்கப்பெறும். இப்போது ரொக்கம் கொடுக்கும் பழக்கம் வந்த பிறகும்,பதிவுகளுக்காக, சீதன உண்டியல் எழுதி, அதில் அன்றே செல் வைத்து வாங்கிக் கொள்ளுவதும் பழக்கமாக இருக்கிறது.

சீதன உண்டியல் மாதிரி

உ

சிவமயம்

.... வருடம் .... மாதம் .... தேதிக்கு, ... குமாரர் .... மேற்படியார் மனைவி .... ஆக இருபேர்கள் வரவு .... குமாரர் .... பற்று நாளது தேதியில் தங்கள் கலியாணத்தின் போது சீதனமாகக் கொடுத்தது ரூ.......................... தலைச்சீலையில் முடிந்தது ரூ......... பாக்குச் சுருளில் வைத்தது ரூ..................... உரிச்செம்பில் வைத்தது ரூ................ ஆக ரூ..................... இந்த ரூபாய்.....................க்கும் வருடம் ஒன்றுக்கு ரூ.100க்கு வட்டி ரூபாய் .... வீதம் தருவதாக ஒப்புக் கொண்டு வரவு வைத்துக் கொண்டேன்.

(வருவாய்த்துறை அஞ்சல் தலையின் மீது பெண்ணின் தந்தை கையொப்பமிட வேண்டும்).

சீதன உண்டியல் பின்புறம் செல் எழுதும் முறை

உ

சிவமயம்

.... வருடம் ....மாதம் ....தேதிக்கு, இந்த உண்டியலில் கண்டபடி ரூபாய்.................... (ரூபாய்.................. ....) நாளது தேதியில் ரொக்கமாகப் பெற்றுக் கொண்டோம்.

மாப்பிள்ளை கையெழுத்து

பெண் கையெழுத்து

தகப்பனார் பெயரின் முதல் எழுத்தை முன் எழுத்தாகக் கொண்டிருந்த பெண், அதற்குப் பதிலாகத் தன் கணவன் பெயரின் முதல் எழுத்தை முன் எழுத்தாகப் பயன்படுத்திக் கையெழுத்திடுவாள்.

திருமணம் என்ற குடும்பச் சிறப்பு நிகழ்ச்சி, நகரத்தார் சமூகத்தில், நீண்ட காலமாக, ஒரே மாதிரி, மரபு பிறழாமல், நடந்து வருகிறது. சிலப்பதி காரத்தில் இளங்கோவடிகள் காட்டும் கோவலன் திருமண நிகழ்ச்சி நமக்குக் கிடைக்கும் முதல் வராற்றுச் சான்று.

அரசாணிக்கால், நீலவிதானம் (மாற்றுக்கட்டுதல்), கழுத்துரு ஆசி வாங்குதல் (அகலுள் மங்கல அணி எழுந்தது) தீ வலம் வருதல் முதலிய நிகழ்ச்சிகள் அங்கே நிகழ்ந்தது போலவே இன்றும் நிகழக் காண்கிறோம். தொடர்ந்து அடுத்த தலைமுறை இளைஞர்களும் இச்சடங்குகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். புரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கோடு இச்சடங்குகள் இங்கே பதிவு செய்யப்பெற்றன. அவற்றோடு கீழ்வரும் செய்திகளையும் சொன்னால்தான் இக்கட்டுரை முழுமைபெறும். எனவே, அவற்றைக் காண்போம்.

கொழுமேளம் : கலியாணத்திற்கு முதல் நாள், நல்ல நேரத்தில் மேளகாரர் வருவார். நகரத்தார் வீட்டுச் சிறுமி ஒருத்தி சங்கு ஊத, மேளகாரர் சிறிதுநேரம் மேளம் வாசிப்பார் அதற்குக் கொழுமேளம் என்று பெயர்.

பூ எறிதல் : பெண் எடுக்கிக் காட்டுதல் என்ற சடங்கு நிகழும் நேரத்தில் நடக்கும் ஒரு சடங்கு இது. பெண், வீட்டிற்குள் நுழைவதற்கு முன் மாப்பிள்ளை பெண் வீட்டுக்கு எதிரே நிற்கும்போது, பெண்ணைப்

பெண்ணின் அத்தை அழைத்துச் சென்றதும் இச்சடங்கு நிகழும். மாப்பிள்ளையின் முகத்திற்கு அருகே ஒருவர் தடுக்கைப் பிடித்துக் கொள்ள, பெண்ணின் தம்பி அல்லது தம்பி முறை உள்ள ஒரு சிறுவன் சில உதிரிப் பூக்களை அத்தடுக்கின் மீது எறிவதே இச்சடங்கு.

ஆலத்தி எடுத்தல் : நகரத்தார் கலியாணத்தில் ஆலத்தி எடுத்தல், சிலேட்டு விளக்கு வைத்தல் ஆகியவை அத்தைமார் செய்யும் முக்கியச் சடங்காகும். வடித்த சாதத்தில் குங்குமத்தையும், சுண்ணாம்பையும் சேர்த்துத் திரியை வைத்து ஆலத்தி பிடிப்பார்கள். ஆலத்தியைச் சதுர வடிவத்தில் 4 திரிகள் வைத்தும், கூம்பு வடிவத்தில் ஒரு திரி வைத்தும் பிடிப்பார்கள்.

பெண் வீட்டில் : (5 ஆலத்தி பிடிப்பார்கள்) மாப்பிள்ளை திருப்பூட்ட வரும் போது பெண்ணுக்கு அப்பத்தாள் அல்லது அத்தை மாப்பிள்ளையை வீட்டு வளவில், கோலத்துக்கு முன்னே நிறுத்திச் சிலேட்டு விளக்கு வைத்து ஆலத்தி எடுத்து விபூதி பூசுவார்கள். பெண் அழைத்துப் போகும்போது மாப்பிள்ளையையும், பெண்ணையும் நிற்கவைத்து, ஆலத்தி எடுத்து அனுப்பி வைப்பர்.

மாப்பிள்ளை வீட்டில் : (7 ஆலத்தி பிடிப்பார்கள்) காலையில் மாப்பிள்ளை கோவிலுக்குப் போகும் போதும், திரும்ப வரும்போதும், மாப்பிள்ளை திருப்பூட்டப் புறப்படும் பொழுதும், பெண்ணழைத்துக் கொண்டு வரும்பொழுதும் மாப்பிள்ளையின் அப்பத்தாள் அல்லது அத்தை ஆலத்தி எடுத்து விபூதி பூசுவர்.

முளைப்பாலிகை : இதைக் கலியாணத்திற்கு 3 நாட்கள் முன்பே தயார் செய்ய வேண்டும். மணமகன் வீட்டில் இது தயார் செய்யப்பெறும். முளைக்கும் திறனுள்ளநெல் படி அரையும் உளுந்து, துவரை, பாசிப்பயறு, மொச்சை, பருத்தி, கேப்பை ஆகிய தானியங்களில் ஒவ்வொன்றிலும் ஒருழக்கு வீதமும் ஒரு தவலையில் போட்டு ஊருணித் தண்ணீர் ஊற்றி வைப்பர். பிறகு அந்தத் தண்ணீரை வடித்து விட்டு வேறு தண்ணீர் ஊற்றி வைப்பர்.

திருமணத்திற்கு முதல்நாள் ஒரு பாத்திரத்தில் சிகப்புத் துணியை வைத்து அதில் இந்தத் தானியங்களை வைத்து இறுகக் கட்டிவைப்பர். இப்படிச் செய்யும்போது அவை முளை விட்டிருக்கும் இதனை மணமகள் வீட்டிற்குக் கொடுத்தனுப்புவர்.

திருமணம் நிகழும் மணைக்கு முன், அரசாணிக்காலை அடுத்து வைக்கப்பெற்றிருக்கும் முளைப்பாலிகைக் கிண்ணங்கள் ஐந்திலும் இவை நிரந்து வைக்கப்பெறும். அரிமணம் இடுவதற்கு இத்தானியங் களையே பயன்படுத்துவர்.

திருமணம் செய்து கொள்ளும் மணமக்கள் முளைவிட்டுச் சந்ததி பெருகி, வளத்தோடு வாழ வேண்டும் என்பதே இவ்வாறு முளைப்பாலிகை வளர்ப்பதன் நோக்கம். பெண் அழைப்பு முடிந்ததும், அரசாணிக்கால் அவிழ்க்கப்பெற்ற பிறகு, முளைத் திரவியத்தை, ஊருணிக் கரையில் உள்ள அரசமரத்தடியில் கொண்டுபோய்ச் சேர்ப்பது மரபு.

கோட்டை கட்டுதல் : ஒரு மரக்கால் நெல்லை உள்ளே வைத்து வைக்கோல் பிரியால் பந்து போல் கட்டுவர். இதுவும் மாப்பிள்ளை வீட்டிலேயே தயார் செய்யப்பெறும். திருப்பூட்டப்போகும் போது இதனை எடுத்துச் செல்வர். பெண் வீட்டு வளவில், திருமண வீட்டில் நடுவில் இதனை வைப்பர். மாப்பிள்ளை அரசாணிக்கால் முதலியவற்றை வலம்வந்த உடன் இந்தக்கோட்டையைத் தாண்டிச் சாமி வீட்டிற்குள் செல்வது மரபு. திருமணச் சடங்குகள் முடிந்தபின், கோட்டை நெல்லை, ஐயனார் கோவிலில் கொண்டுபோய்க் கொடுப்பது மரபு.

வேண்டிய பொருள்கள் : கலியாணத்திற்காக, மாப்பிள்ளை வீடு, பெண்வீடு இரண்டிலும் முன் கூட்டியே எடுத்துவைக்க வேண்டிய சாமான்களின் பட்டியலோடு இக்கட்டுரையை நிறைவு செய்யலாம்.

விரலி மஞ்சள், நிலைவிளக்கு, சரவிளக்கு, அரசாணிமேடை, அரசாணி அடுப்பு, அரசாணிக்கால் கட்ட மூங்கில் கழி, பாலைக்குச்சி, கிளுவைக்கம்பு, பவளம், நூல், மாவிலை, அரச இலை, மணவறை மேல் (மாற்று) கட்டும் சேலை, முளைப்பாலிகைக் கிண்ணங்கள் (5) சிலேட்டு விளக்கு, பெரிய தாம்பாளம் (திருப்பூட்டும் தட்டு) முக்காலி 2, சருவச்சட்டி 2, செம்பு, கெண்டிச் செம்பு, சடங்குத்தட்டு (7 கிண்ணங்களுடன்) படி, சிறிய பளிங்கு அல்லது வெள்ளிக் குழவி (பட்டுடன்) கத்திரிக்காய், நவதானியம், குலம்வாழும் பிள்ளை, தவலைகள், வட்டுவப்பை, வெள்ளைக்கம்பளி, பாக்குச்சுருள், வேவுக்கடகாம், பச்சரிசி, 10 ஆம் நம்பர் நூல் கண்டு, மாமப்பட்டு, சங்கு, ஆலத்தித் தாம்பாளம், விபூதித்தட்டு, இசைபிடிமானம் (புத்தகம்), பணத்திருப்பு (புத்தகம்), தடுக்கு – 3, மணவறை விரிப்பு, பால் செம்பு, பால் வேவுக்கு நெல் கடகாம், மாப்பிள்ளை வீட்டில் மணை, மாதாவி (பட்டு அங்கி), தலைப்பாகை.

காய்ச்சி ஊற்றுதல்

திருமணம் முடிந்தவுடன், திருமணம் நிகழ்ந்த மணமக்களில், மாப்பிள்ளையின் ஆயாள் வீட்டினர் மாப்பிள்ளையின் தாய் வீட்டிற்கும், பெண்ணின் ஆயாள் வீட்டினர் பெண்ணின் தாய் வீட்டிற்கும் காய்ச்சி ஊற்றுவர்.

ஒரு நகரத்தார் குடும்பத்தில் சிறப்பான நிகழ்ச்சி ஒன்று நடந்து முடிந்தால், அக்குடும்பத்தலைவியாகிய ஆச்சியின் பிறந்த வீட்டினர் அக்குடும்பத்தினருக்கு ஒரு விருந்து கொடுப்பர். அதற்குக் காய்ச்சி ஊற்றுதல் என்பது பெயர்.

நடந்து முடிந்த நிகழ்ச்சி இன்பமானதாகவும் இருக்கலாம்: துன்பமானதாகவும் இருக்கலாம். துன்ப நிகழ்ச்சி என்பது சாவு ஒன்று தான். சாவு நிகழ்ந்தவுடன் உறவினர், பங்காளிகளுக்கெல்லாம் இழவு சொல்லும் நிகழ்ச்சிகளின் இறுதிச் சடங்காகச் சவண்டி நடைபெற்றவுடன், காய்ச்சி ஊற்றுதல் நிகழும். தங்கள் வீட்டில் பிறந்த பெண், சாகக் கொடுத்த துன்பத்தில் இருக்கும்போது, அவளுக்கு ஆறுதல் சொல்வதும், 'உன் வாழ்வில் எங்களுக்குத் தொடர்ந்து அக்கறை இருக்கிறது' என அப்பெண்ணுக்கு உணர்த்துவதும் இந்நிகழ்ச்சியின் நோக்கம்.

இன்ப நிகழ்ச்சி என்பது முற்காலத்தில், புதுமை, கார்த்திகைப் புதுமை அல்லது சூப்பிடி, திருவாதிரை, பெண் சமைவது, திருமணம், மணிவிழா அல்லது சாந்தி, எழுபது அல்லது பீமரதசாந்தி, ஆயிரம் பிறைகாணும் விழா அல்லது சதாபிசேகம், புதுமனை புகுவிழா என்பவையாக அமைந்தன. இப்போது புதுமை, சூப்பிடி, திருவாதிரை என்பவை நடைபெறவில்லை.

எனவே, இன்றைய நிலையில் ஒரு குடும்பத்தில் ஒரு பெண் சமைந்தால், அதற்குரிய சடங்கு கழிப்பது எனும் நிகழ்ச்சி முடிந்தவுடன், சமைந்த பெண்ணின் ஆயா வீட்டினர் காய்ச்சி ஊற்றுவர்.

திருமணம் நடந்து முடிந்ததும், மணமகன், மணமகள் இருவர் ஆயா வீட்டினரும் தனித்தனியாகக் காய்ச்சி ஊற்றுவர். மணமகன் ஆயா வீடு காய்ச்சி ஊற்றுவது அவன் தாயார் குடும்பத்துக்கும், மணமகள் ஆயா வீடு காய்ச்சி ஊற்றுவது அவள் தாயார் குடும்பத்துக்கும் என அமையும்.

மணி விழா, பீமரதசாந்தி, ஆயிரம் பிறை கண்ட விழா, புது மனை புகுவிழா என்பன நிகழ்ந்தால் விழா நாயகியின் தாய் வீட்டினர் காய்ச்சி ஊற்றுவர்.

காவடி எடுப்பதற்கும் காய்ச்சி ஊற்றும் பழக்கம் நடைமுறையில் உள்ளது. காவடி எடுக்கும் நகரத்தார் திருமணம் ஆனவராக இருந்தால், அவர் மாமியார் வீடு காய்ச்சி ஊற்றுவர், திருமணம் ஆகாதவராக இருந்தால், அவர் ஆயா வீட்டினர் காய்ச்சி ஊற்றுவர்.

இன்ப நிகழ்ச்சியின் இறுதியில் காய்ச்சி ஊற்றுவது நல்ல நிகழ்ச்சியைச் சிறப்பாக நடத்தி முடித்த, தங்கள் வீட்டில் பிறந்த பெண்ணைப் பாராட்டும் நோக்கமுடைய நிகழ்ச்சியாகும்.

ஓர் ஆச்சியின் தாய், தந்தையர் உயிரோடு இல்லையெனின், உடன் பிறந்த ஆண்மக்கள் காய்ச்சி ஊற்றுவர். உடன் பிறந்தோரும் இல்லையெனின் உடன் பிறந்த ஆண்மக்களின் பிள்ளைகள் (ஆண் மக்கள்) காய்ச்சி ஊற்றுவர். ஆகக் காய்ச்சி ஊற்றும் சடங்கு நகரத்தார் இல்லங்களில் மிகக் கட்டாயம் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாக அமைகிறது.

இன்ப நிகழ்ச்சி நடந்து முடிந்த பின், காய்ச்சி ஊற்றும் சடங்கு முடியும் வரை, அக்குடும்பத்தினர், அமங்கல நிகழ்ச்சிகள் எதற்கும் செல்லமாட்டார்கள். அது போலவே, துன்ப நிகழ்ச்சிக்குப் பின், காய்ச்சி ஊற்றும் சடங்கு முடியும் வரை, அக்குடும்பத்தினர் பிற நிகழ்ச்சிகள் எதற்கும் செல்ல மாட்டார்கள்.

பழந்தேங்காய் கொடுத்தல்

திருமணத்திற்குப் பின், மாப்பிள்ளையின் ஊரில், அல்லது பெண்ணின் ஊரில் கோவிலில் செவ்வாய் எனப்படும் தேர்த்திருவிழா நிகழும் போது, பெண்ணின் தாய் வீட்டினர். பிள்ளையின் தாய் வீட்டினர்க்குப் பழமும், தேங்காயும் கொடுத்து, விருந்து நிகழ்த்திச் சிறப்பிப்பர். இது பழந்தேங்காய் கொடுத்தல் என வழங்குகிறது.

பெண் பிறந்த வீட்டினர், தம் ஊர்த் திருவிழாவிற்குச் சம்பந்தி வீட்டினரை அழைப்பர். வீட்டில் விருந்து வைத்து, சம்பந்தி வீட்டினருக்கு தேங்காய், வாழைப்பழம், வெற்றிலை பாக்கு, முறைச்சிட்டையில் குறிப்பிட்டிருந்தால் அந்தத் தொகை ஆகியவற்றை வைத்துக் கொடுப்பது வழக்கம்.

மாப்பிள்ளையின் ஊரில் திருவிழா நடைபெறும் போது, மாப்பிள்ளை வீட்டினர், பெண்ணின் தாய் வீட்டினரை விருந்துக்கழைத்து மகிழ்வர். ஆனால் அங்கும், பெண்ணைப் பெற்றவர்கள்தான் மாப்பிள்ளை வீட்டினருக்குப் பழந்தேங்காய் கொண்டு போய்க் கொடுப்பது வழக்கம். நகரத்தார் இனத்தில் ஆண்பிள்ளை பெற்றவர் வாங்கிக் கொள்வதும், பெண்பிள்ளை பெற்றவர் கொடுப்பதுமே வழிவழி வழக்கமாய்த் தொடர்கிறது.

திருமணத்தின்போது ஒரு ஆண்டு முறை அல்லது மூன்று ஆண்டுகள் முறை எனப் பேசி, சிட்டை எழுதிக் கொள்வதற்கேற்ப, ஒரு ஆண்டு அல்லது மூன்று ஆண்டுகள் பழந்தேங்காய் கொடுப்பது வழக்கம். பெரும்பாலும், இப்போதெல்லாம் திருமணமான முதலாண்டு மட்டுமே பழந்தேங்காய் கொடுக்கின்றனர்.

பொதுவாக அம்மன் கோவில் திருவிழா, சிவன் கோவில் திருவிழா அல்லது பக்கத்து ஊர்க்கோவில் திருவிழா ஆகியவற்றின் போது பழந்தேங்காய் கொடுப்பது வழக்கம்.

காரைக்குடியில் கொப்புடையம்மன் கோவில் திருவிழா, தேவ கோட்டையில் பெருமாள் கோவில் திருவிழா மற்றும் கண்டதேவித் தேர்த் திருவிழா, விராமதியில் கீரணிப்பட்டித் திருவிழா ஆகியவற்றிற்குப் பழந்தேங்காய் கொடுப்பர் (இவை எடுத்துக்காட்டுக்கள்)

உள்ளூரிலேயே மாப்பிள்ளை வீடு இருந்தால், வீட்டிற்குத் தேங்காய், பழம் கொடுத்தனுப்புவர். வெளியூர்ச் சம்பந்தியாரைத் திருவிழா நடைபெறும் கோவிலுக்கு அழைத்துச் சென்று அங்குள்ள தண்ணீர்ப் பந்தலில் பழந்தேங்காய் கொடுப்பார்கள். தங்கள் வீட்டிற்கு விருந்துண்ண வரும்போது, அங்கேயே கொடுப்பதும் உண்டு.

திருமணத்தின் மூலம் ஏற்பட்ட புது உறவை நெருக்கப்படுத்திக் கொள்வதும், திருவிழாவில் புதிய உறவினர்களோடு கூடிக் களிப்பதும், உறவை வளர்த்துக் கொள்வதுமே பழந்தேங்காய் கொடுப்பதன் நோக்கம்.

முதலாண்டு தீபாவளிக்கு வருதல்

திருமணம் நிகழ்ந்த பின், வரும் முதலாண்டு தீபாவளிக்கு (தலை தீபாவளி) மணமக்களை, பெண்ணின் தாய் வீட்டினர் அழைத்து, அவர்களுக்குப் புத்தாடை முதலியன கொடுத்து விருந்து வைத்துச்

சிறப்பிப்பர். இது, பிற சமூகத்தினர், குறிப்பாக அந்தணர் தொடர்பால் ஏற்பட்ட புதிய நிகழ்ச்சியாகவே தோன்றுகிறது.

பொங்கற் பானை கொடுத்தல்

திருமணம் நிகழ்ந்த பின், வரும் முதற் பொங்கலிலிருந்து, ஆண்டு தோறும் பொங்கலை முன்னிட்டுத் தாய் வீட்டிலிருந்து பெண்ணுக்கு அளிக்கப்பெறும் சிறப்புச் சீர் பொங்கற் பானை ஆகும். பொங்கற் பானை கொடுப்பது நகரத்தார் சமூகத்தில் தொன்று தொட்டு வரும் தமிழ் மரபு தழுவிய சிறப்பு நிகழ்ச்சி ஆகும்.

திருமணம் ஆன முதலாண்டு தைப்பொங்கலுக்குச் சில நாட்களுக்கு முன்பு, பொங்கற் பானை, பொங்கல் வைக்கப் புத்தரிசி, கரும்பு, வெல்லம், மஞ்சள் கொத்து, காய்கறி இவற்றோடு ஒரு தொகையையும் வைத்து. இவற்றைப் பெண்ணின் தந்தையும், சகோதரனும் பெண்ணின் மாமியார் வீட்டுக்கு எடுத்துச் சென்று கொடுப்பர். அவர்களுக்கு அங்கே விருந்து நடைபெறும்.

அடுத்த இரண்டு ஆண்டுகட்கும் இதுபோலப் பொருள்கள் வாங்கியோ, இல்லையேல் அவற்றுக்கும் சேர்த்து ஒரு தொகையையோ, பெண்ணின் மாமியார் வீட்டிற்குக் கொண்டு போய்க் கொடுப்பர்.

இவ்வாறு முதல் மூன்றாண்டுகள் முடிந்த பின்னர், ஆண்டு தோறும் பொங்கற் பானை நேரடியாகப் பெண்ணிடம் கொடுக்கப் பெறும். தொடர்ந்து பொருட்கள் வாங்கிக் கொடுக்கும் குடும்பங்களும் உள்ளன. ஆனால், எல்லாக் குடும்பங்களிலும், உறுதியாகப் பொங்கற் பானைக்கு என ஒரு தொகை கொடுக்கப்பெறும். பெண் வீடு உள்ளூரிலோ, அருகில் உள்ள ஊரிலோ இருந்தால் நேரில் சென்று பொங்கற் பானை (பொருள்கள் அல்லது தொகை) கொடுப்பர். தொலைவில் உள்ள ஊரில் இருந்தால், பொங்கற் பானைக்கு என ஒரு தொகையை அஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பர். பொங்கற்பானை நேரில் கொடுக்கும் போது, பெண் வீட்டார், பாக்குக்கு ரூபாய் கொடுப்பது பழக்கம். (ஒரு ரூபாய், அல்லது இரண்டு ரூபாய் அல்லது ஐந்து ரூபாய்).

மகள் காலத்திற்குப் பிறகும், மாப்பிள்ளை உயிரோடு இருக்கும் வரை பொங்கற் பானைத் தொகை அவருக்கு அனுப்பி வைக்கப் பெறும். பெண்ணின் தந்தையார் காலத்திற்குப்பிறகு அவள் உடன் பிறந்த ஆண்

மக்கள்: அவர்களுக்குப் பின் அவர்தம் ஆண்மக்கள் எனத்தாய் வீட்டு வழி முறையினர் இந்தப்பொங்கற் பானை என்ற முறையினை மகள், மாப்பிள்ளை என்ற இருவரில் யாரேனும் ஒருவராவது உயிரோடு இருக்கும் வரை தவறாது கொடுத்து வருவது நகரத்தார் இனப் பழக்கமாகும்.

நகரத்தார் இனத்தைப் பொறுத்தவரை, ஒரு பெண்ணுக்குரிய தாய் வீட்டுச் சீர் வரிசைகளில், இன்றியமையாததும், இறுதி வரை தொடர்ந்து வருவதுமாகிய சீர்வரிசை பொங்கற் பானை ஆகும்.

வேறு வைத்தல்

திருமணம் நிகழ்ந்து ஓராண்டு முடிந்தவுடன், அல்லது சிறிது காலம் சென்றபின், புதுமணமக்களைத் தனிக்குடும்பமாக அமைப்பதற்காக ஒரு சிறப்பு நிகழ்ச்சி நடைபெறும். வேறு வைத்தல் என வழங்கப்பெற்ற இச்சிறப்பு நிகழ்ச்சி முன்பெல்லாம் நெருங்கிய உறவினர்கள், பங்காளிகள் அழைக்கப்பெற்று ஒரு விழாவாக நிகழ்ந்தது.

இப்போது திருமணத்திற்கு முன்னரே மகன், வெளியூரில் வேலை பார்த்துக் கொண்டிருப்பதும், திருமணம் முந்தவுடனேயே, தன் மனைவியை அந்த ஊருக்கு அழைத்துச் சென்று தனிக்குடும்பமாக வாழ்வதும் இயல்பான நடைமுறையாகிவிட்டதால், வேறு வைத்தல் என்ற தனி விழாவிற்குத் தேவை இல்லாமல் போய்விட்டது.

ஆயினும் 50 ஆண்டுகள் முன்பு வரை நடைமுறையில் இருந்த இந்தச் சிறப்பு நிகழ்ச்சி பற்றி நம் சமூக இளைய தலைமுறையினருக்கு உணர்த்துவதற்காகச் சிறிது விரிவாகவே இச்சிறப்பு நிகழ்ச்சியைக் காண்போம்.

திருமணத்தின்பொழுது ஒரு ஆண்டு முறை, மூன்று ஆண்டுகள் முறை என்று பேசிக்கொள்வார்கள். ஆகவே, ஓராண்டுக்குப்பின் அல்லது மூன்றாண்டுகளுக்குப்பின் இச்சிறப்பு நிகழ்ச்சி நடைபெறும். பொது வீட்டிற்குள்ளேயே, திருமணம் ஆன, மகனையும் மருமகளையும் தனியொரு குடும்பமாக வைத்து, தனி அடுப்பில் சமைத்துச் சாப்பிடச் செய்வதே வேறு வைத்தல் ஆகும்.

மகன் குடும்பத்திற்குத் தாயார் பித்தளைக் குடம், சட்டி, செம்பு, விளக்கு, தடுக்கு, அரிசி, மளிகைப் பொருட்கள் ஆகியவற்றைக்

கொடுப்பார். தனியே ஒரு பொங்கல் வைத்து, வேவு இறக்கி வேறு வைப்பர். மகனின் மாமியார் வீட்டிலிருந்து அரிசி, பருப்புக்காகப் பணம் கொடுப்பர்.

மருமகளுக்குச் சமையல் செலவுகளுக்காக, ஆண்டொன்றுக்கு ஒரு தொகையையும், குறிப்பிட்ட அளவு நெல்லையும், மாமனார், மாமியார் வழங்குவர், இதற்கு வருடத்துப் போகம் அல்லது பொதி போடுதல் என்பது பெயர்.

ஆண் மகனுக்குக் குடும்பத் தலைவன் என்ற பொறுப்பு வர வேண்டும், அவன் குடும்பத்தை அவனே நடத்திச் செல்ல வேண்டும், அதற்காகப் பொருள் ஈட்ட வேண்டும் என்ற ஆர்வம் அவனுக்கு வரவேண்டும் என்ற நல்ல நோக்கங்களோடு நகரத்தார் சமூகம் செய்த ஒரு பண்பாட்டுச் சிறப்புடைய செயலே வேறு வைத்தல்.

அண்மைக் காலத்தில், சமுதாயச் சூழல் காரணமாக, மேலே குறிப்பிட்ட நோக்கங்கள் இயல்பாகிவிட்டன. அதனால் இச்சிறப்பு நிகழ்ச்சி இப்போது தேவையற்றதாகிவிட்டது. ஆனால் இதன் தொடக்கம் எப்போது என்றால், ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே இப்பழக்கம் இருந்திருக்கிறது. இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் மனையறம் படுத்த காதை என்ற பகுதியில் மாசாத்துவானும் அவர் மனைவியும், கோவலன், கண்ணகியை வேறு வைத்த சிறப்பு நிகழ்ச்சியைப் பாடுகிறார். இதன் மூலம் நம் பண்பாட்டுப் பழமையைப் புரிந்து கொள்ளலாம்.

திருமண நாள்

ஆங்கில நாகரீகத்தின் தாக்கம் ஏற்படுத்திய விளைவுகளில் ஒன்று, திருமண நாளை ஆண்டு தோறும் கொண்டாடுவது என்பதாகும். நகரத்தார் சமூகத்தினரும் இப்போது தத்தம் திருமண நாளை நினைவு கூர்ந்து, கொண்டாடி வருகின்றனர். ஆயினும், வெளியாரை அழைத்து, விருந்து வைத்து, விழாவாகக் கொண்டாடுவதில்லை.

ஆண்டு நிறைவு விழாக்கள்

ஐம்பத்தொன்பது நிறைவு நாள்

தாயின் வயிற்றில் கருவாக உருவானதிலிருந்து திருமணம் ஆகி வேறு வைப்பது வரை, ஒருவரது வாழ்வில், நகரத்தார் சமூகத்தில் சிறப்பு நிகழ்ச்சிகள் தொடர்கின்றன. ஆனால் திருமணத்திற்குப்பின், அவருக்குப் பிள்ளை உருவாகிறது. பின்னர், சிறப்பு நிகழ்ச்சிகள் அப்பிள்ளையை மையம் கொண்டனவாக மறுபடி மருந்து குடித்தலில் தொடங்கி நிகழுகின்றன.

இச்சூழலில், வேறு வைக்கப்பெற்ற திருமண மக்கள் வாழ்வில் அவர்களை மையம் கொண்டதாக நிகழும் அடுத்த சிறப்பு நிகழ்ச்சி ஐம்பத் தொன்பதாம் ஆண்டு நிறைவுநாள்தான். மணமக்களில் ஆணுக்கு ஐம்பத்தொன்பது ஆண்டுகள் நிறைந்து, அறுபதாவது ஆண்டு தொடங்கும் நாளில் இச்சிறப்பு நிகழ்ச்சியைக் கொண்டாடுவது வழக்கம். அதுவும், அவரது 60 ஆவது, ஆங்கில ஆண்டு முறையிலான பிறந்த நாளில், கொண்டாடுவது இல்லை. மாறாகத் தமிழ் ஆண்டு முறையில் அவர் பிறந்த மாதத்தில், பிறந்த விண்மீன் வரும் நாளில் கொண்டாடப் பெறும்.

ஐம்பத்தொன்பதாம் ஆண்டு நிறைவுநாள், அறுபதாம் ஆண்டு நிறைவுநாள், எழுபதாம் ஆண்டு நிறைவுநாள், எண்பதாம் ஆண்டு நிறைவுநாள், நூற்றாண்டுவிழா ஆகியவற்றைக் கொண்டாடும் முறையும், அவற்றுக்குரிய சடங்குகளும், அந்தணர் சமூகத்தோடு, நகரத்தார் சமூகத்திற்கு ஏற்பட்ட பண்பாட்டுத் தொடர்பு, கலப்பு இவற்றால் நடைமுறைக்கு வந்தவை. எனவே இவ்விழாக்களுக்கெல்லாம் வடமொழிப் பெயர்களே பொதுவாக வழக்கில் வழங்குகின்றன. ஐம்பத் தொன்பதாம் ஆண்டு நிறைவுநாளை உக்கிர ரத சாந்தி என்றும், பரிகார சாந்தி என்றும் குறிப்பிடுவர்.

முற்காலத்தில் அறுபதாண்டு நிறைந்து, அறுபதாம் ஆண்டு நிறைவு நாளாகிய சாந்தியைக் கொண்டாடுபவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருந்தது. அதனால் ஐம்பத்தொன்பதாம் ஆண்டு நிறைவுற்றவுடனேயே, அறுபதாம் ஆண்டுத் தொடக்கத்தை, பரிகார சாந்தியாக ஆயுள் ஓமம் முதலியன செய்து கொண்டாடினர்.

மார்க்கண்டேயனுக்கு ஆயுள் நீட்டிப்பு அருளிய இடம் திருக்கடவூர். (இப்போது இவ்வூர் திருக்கடையூர் என வழங்கப்பெறுகிறது). ஆதலால் பெரும்பாலானோர் திருக்கடவூர் சென்று, அமிர்தகடேசுவரர் ஆலயத்தில், ஐம்பத்தொன்பது நிறைவைப் பரிகார சாந்தியாகச் செய்து கொள்வது வழக்கமாக உள்ளது. பிள்ளையார்பட்டியில், அல்லது அவரவர் நகரக்கோவிலில் செய்து கொள்ளும் பழக்கம் அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ளது. ஆயினும், பெரும்பாலும், யாரும் தம் வீட்டிலேயே, இப்பரிகாரச் சாந்தியைச் செய்துகொள்வது இல்லை.

ஐம்பத்தொன்பது, அறுபது, எழுபது, எண்பது, நூறு ஆகிய ஆண்டு நிறைவு விழாக்களுக்குரிய சடங்குமுறைகள் ஏறத்தாழ ஒரே மாதிரியானவை. சிறுசிறு வேறுபாடுகளே காணப்பெறும். எனவே, இவை அனைத்தையும் பொதுவாகப் பார்த்த பின்னர், அறுபதாண்டு நிறைவு விழாச் சடங்குகளை, விரிவாகப் பார்ப்போம்.

ஐம்பத்தொன்பது ஆண்டு நிறைவு நாளில் ஆயுள் ஓமம், நவக்கிரக ஓமம், சாந்தி ஓமம் முதலியனவும், செப பாராயணங்களும் நிகழும். 16 குடங்கள் வைத்து ஓமம் செய்து, மந்திர வலுவூட்டப்பெற்ற நீரால், விழா நாயக நாயகியரை, உற்றாரும் உறவினரும் மங்கல நீராட்டுவர். இந்தப் பரிகாரச் சாந்தியில் மங்கல நாண் பூட்டும் சடங்கு நிகழ்வதில்லை.

ஐம்பத்தொன்பது செய்து கொள்ளும் நாயகரின், மனைவி பிறந்த வீட்டார் பட்டுக்கொண்டு வருவார்கள். அறுபது நிறைவு விழாவில் தாலி, சங்கிலி ஆகியவற்றோடு பட்டுக்கொண்டு வருவர். ஐம்பத்தொன்பதில் அவை இல்லாமல் பட்டுக்கொண்டு வருவார்கள்.

மங்கல நீராட்டு முடிந்ததும் விழாத் தம்பதியர் தம்மை விட மூத்தோரிடம் ஆசி பெறுவர். தம்மை வணங்கும் இளையோருக்கு வாழ்த்து நல்கித் திருநீறு வழங்குவர்.

மணிவிழா

ஐம்பத்தொன்பதாம் ஆண்டு நிறைவைப் பரிகார சாந்தியாகக் கொண்டாடியவர். தம் அறுபதாண்டு நிறைவு நாளை மணி விழாவாகக் கொண்டாடுவார். இதற்குச் சாந்திக்கலியாணம், சஷ்டியப்த பூர்த்தி, அறுபதாங்கலியாணம், அறுபதுக்கறுபது போன்றவை வழக்கில் வழங்கி வரும் வேறு பெயர்கள் ஆகும்.

கோள் நிலைகள், விண்மீன்களின் நிலைகள் இவற்றை நோக்கும் போது, ஒரு மனிதர் பிறந்த நாளில் அமைந்த ஆண்டு, விண்மீன், கோள்நிலை யாவும், அவரது அறுபத்தொன்றாம் ஆண்டுத் தொடக்க நாளிலும் அவ்வண்ணமே அமைந்திருக்கும். அதனால்தான், மற்ற பிறந்த நாட்களுக்கு இல்லாத சிறப்பு அறுபத்தொன்றாவது பிறந்த நாளுக்கு வருகிறது. இதனை விழாவாகக் கொண்டாடுகின்றனர்.

தெய்வ நம்பிக்கையுடன் பெரியோர் வகுத்த சிஷ்டாசாரம் எனும் வழிமுறையைப் பின்பற்றிச் சஷ்டியப்த பூர்த்தி சாந்திக் கலியாணம் என்னும் அறுபதாண்டு நிறைவு மணிவிழாக் கொண்டாடப் பெறுகிறது. ஆகம முறை, வைதிக முறை என்னும் இரு முறைகளில் ஏதேனும் ஒரு முறையில் இவ்விழா கொண்டாடப்பெறுகிறது. அண்மைக்காலமாகத் திருநெறிய தமிழ் முறையிலும் இவ்விழாவைக் கொண்டாடுகின்றனர். இம்முறைகளுக்குரிய, தனித்தனியான, விரிவான, சடங்கு முறைகளைப் பின்னர் பார்ப்போம்.

நகரத்தார் மணிவிழாவில் முதல் நாள் மாலையில் உறவினருக்கு வேட்டி, சேலை வழங்குவது: மணிவிழா நாளன்று காலையில் மணி விழா நாயகியின் பிறந்த வீட்டிலிருந்து பட்டுச் சேலை, வேட்டி, தாலி, மாலை ஆகியவற்றோடு பட்டுக் கொண்டுவருதல் ஆகியவை குறிப்பிடத்தக்க சமூகச் சிறப்பு நிகழ்ச்சிகள் ஆகும். மகன், மகள் ஆகியோரும் இந்நாளில் பட்டுக்கொண்டு வருகின்றனர்.

நகரத்தார், தத்தமது செல்வ வளத்திற்கேற்ப மணிவிழாவினைச் சிறப்பாகப் பெரிய அளவிலோ, சிறிய அளவிலோ செய்து கொள்கின்றனர்.

எழுபதாண்டு நிறைவு விழா

மணிவிழாக் கண்டவரின் எழுபதாவது ஆண்டு நிறைவு நாளைப் பீமரத சாந்தி என்ற பெயரோடு கொண்டாடுகின்றனர். இதனைப் பெரும் விழாவாகக் கொண்டாடுவோரும் உளர். கொண்டாடாதவர்களும் உள்ளனர். இவ்விழா ஏறத்தாழ மணிவிழா போன்ற சடங்கு முறைகளோடு நடைபெறும்.

பிறையாயிரம் கண்ட பெருவிழா :

பீமரத சாந்தி செய்து கொண்டவருக்கு 81 ஆண்டுகள் நிறைந்து சில மாதங்களில், அவர் 1008 மூன்றாம் பிறைகளைக் கண்டு, கடந்து வருவார். அபோது நடத்தப்பெறும் இவ்விழா சதாபிஷேகம் என வழங்குகிறது. இதுவும் ஏறத்தாழ மணிவிழாவைப் போன்ற சடங்கு முறைகளுடனேயே நடைபெறும்.

நூற்றாண்டு விழா

அண்மைக்காலமாக நூறாண்டு நிறைந்து, நூற்றியோராவது ஆண்டு தொடங்கும் நாளை மகாபிஷேகம் என்ற பெயரில் கொண்டாடும் பழக்கம் நகரத்தாரிடையே தோன்றியுள்ளது. இப்போது மருத்துவ வளர்ச்சியால், ஆயுள் நீட்டிப்பு இயல்பாகிவிட்டது. நகரத்தாரில் சிலர் இவ்விழாக் கொண்டாடியதை அண்மைக் காலத்தில் காண்கிறோம். இதுவும் மணிவிழாச் சடங்கு முறைகளோடு தான் நடைபெறும். அடுத்து மணிவிழாச் சடங்கு முறைகளை விரிவாகக் காண்போம்.


மணி விழாச் சடங்குகள்

சாந்திக் கலியாணம் என்று வழங்கப்படும் மணி விழா ஆகம முறை, வைதிக முறை இவற்றில் ஏதேனும் ஒரு முறையில் செய்து கொள்ளப்படுகிறது. அண்மைக்காலமாகத் திருநெறிய தமிழ் முறையிலும் செய்து கொள்கின்றனர். ஒவ்வொரு முறைக்கும் உரிய சடங்கு முறைகளைத் தனித்தனியே காண்போம்.

ஆகம முறை

ஆகம முறை, சிவாசாரியாராகிய குருக்கள் முன்னின்று நடத்தி வைக்கும் சாந்தியாகும். இம்முறையில் மூன்று வேதிகைகள், மூன்று ஓம குண்டங்கள், அமைக்கப்பட்டு 28 குடங்கள் (கலசம்) அல்லது 54 குடங்கள் வைக்கப்பட்டுச் சாந்தி நடைபெறும்.

சிவன், விஷ்ணு ஆகிய இரு பெரும் கடவுளையும்நேர்ந்து கொண்டு காலகாலனாகிய அமிருத மிருத்யுஞ்சேசுவரனையும், அமிருத கடேசுவரியையும் வழிபட்டு ஓமங்கள் செய்வர். ஆகம முறையில் முதல்நாள், மறுநாள் (சாந்தியன்று) ஆகிய இருநாட்களும் ஓமப்பூரணாகுதி நடைபெறும்.



மூன்று வேதிகைகள் அமைத்து, மூன்றிலும் மொத்தம் 28 (அல்லது 54) குடங்களில் திருமஞ்சன தீர்த்தம் நிரப்பி, முறைப்படி வேதிகைகளில் அலங்காரம் செய்து, தானியங்கள் பரப்பி கும்பஸ்தாபனம் செய்யப்பெறும். கங்கை முதலான புண்ணிய நதிகளின் தீர்த்தமும், திருமஞ்சன திரவியங்களும் கலந்து திருமஞ்சன தீர்த்தம் தயாரிக்கப்பெறும். மூன்று வேதிகைகளும், வளவு வாசலில் தெற்கு வடக்கில், வரிசையாக, கிழக்கு நோக்கியதாக அமைக்கப்பெற வேண்டும். அவற்றுள்,

1 தெற்குப் பக்க வேதிகை : நவக்கிரகங்களுக்கு 9 குடங்கள், இராசி தேவதைக்கு 1 குடம், காலாதி தேவதைக்கு 1 குடம் என 11 குடங்கள் அமைக்க வேண்டும்.

2 - நடு வேதிகை (பிரதான வேதிகை) : அமிருத மிருத்தியுஞ் சேசுவரருக்கு 1 குடம், அமிருதகடேசுவரிக்கு 1 குடம், மார்க்கண்டேயருக்கு 1 குடம், கணபதிக்கு 1 குடம், அட்டதிக்குப் பாலகருக்கு 8 குடங்கள், துர்க்கைக்கு 1 குடம், நந்திக்கு 1 குடம், பைரவருக்கு 1 குடம் என 15 குடங்கள் அமைக்க வேண்டும்.

3 - வடக்குப் பக்க வேதிகை : பிரபவ முதல் அட்சய வரை உள்ள அறுபது ஆண்டுகளான சஷ்டிதேவிக்கு 1 குடம், அசுவதி முதல் ரேவதி வரையுள்ள 27 நட்சத்திரங்களுக்கும் 1 குடம் ஆக 2 குடங்கள் அமைக்கலாம். அப்போது மொத்தம் (11 + 15 + 2 = 28) 28 குடங்கள் ஆகும்.

அல்லது சஷ்டி தேவிக்கு 1 குடமும், 27 நட்சத்திரங்களுக்கு 27 குடமும் என இந்த வேதிகையில் மட்டும் 28 குடங்கள் அமைக்கலாம். அப்போது மொத்தம் (11+ 15 + 28 = 54) 54 குடங்கள் ஆகும்.



இவ்வாறு வேதிகைகள் அமைத்துக் கும்ப ஸ்தாபனம் செய்த பிறகு, முதல் நாள் மாலை, சாந்தியன்று காலை இரு

நேரங்களிலும், தெய்வங் களுக்குரிய ஓமங்களும், பாராயணங்களும் நடைபெறும். தோத்திரங்கள், நால்வேதம், திருமுறைகள் ஓதப்பெறும், ஆகம முறைச் சாந்தியில் இடம்பெறும் சடங்குகளின் நடைமுறை வரிசை வருமாறு:

முதல் நாள் காலை

ஸ்நான சங்கல்பம், தம்பதிஸ்நானம்

விநாயகர் வழிபாடு (அருகே உள்ள அல்லது விழா நாயகர் குடும்பத்தார் வழக்கமாகக் கும்பிடும் கோவிலில்), மகாசங்கல்பம், அனுக்ஞை, கணபதி ஓமம், நவகிரக ஓமம், நாந்தி சோபனம்.

முதல் நாள் மாலை

இலட்சுமி பூசை, ஆசார்ய வர்ணம், யாகபூசை தொடக்கம், பூர்ணாகுதி, சோடசோபசார தீபாராதனை.

சாந்தியன்று காலை

யாகபூசை தொடக்கம்: மகா பூர்ணாகுதி, சோடசோபசார தீபாரதனை: யாகபூசை நிறைவு.



இவற்றுக்குப்பிறகு மந்திரங்களால் வலுவூட்டப் பெற்ற திருமஞ்சனத் தீர்த்தக் குடங்களில் உள்ள தீர்த்தத்தை எடுத்து, மணிவிழாத் தம்பதியருக்கு, சிவாசாரியார், உறவினர்கள் நண்பர்களெல்லாம் வரிசையாக மங்கல நீராட்டுவர். பின்னர் அந்தணத் தம்பதியருக்கு (ஒரு கணவனும் மனைவியும்) மணி விழாத் தம்பதியர் பூசை செய்து, அவர்களுக்கு ஆடை, திருமாங்கல்யம் வழங்குவர். அந்தணர் தம் துணைவிக்கு அத்திரு மாங்கலியத்தை அணிவித்த பின், மணி விழாத் தம்பதியர் தெட்சணையும், தாம்பூலமும் கொடுத்து, அவர்களை வணங்கி ஆசி பெற்று, விபூதி, குங்குமமும் பெற்றுக் கொள்வர். பின்னர் அவர்களை வழியனுப்பி வைத்துத் திரும்புவர்.

பிறகு மணி விழா நாயகர், நாயகிக்கு மங்கல நாண் அணிவிப்பார் மணி விழாத் தம்பதியர் தம்மை விட மூத்தோரிடம் ஆசி பெறுவர்: தம்மை விட இளையோருக்கு ஆசி வழங்குவர். சாந்திக் கலியாணத்தின் நிறைவு நிகழ்ச்சியாக, மணி விழாத் தம்பதியர், தம் சுற்றம் சூழ, உள்ளூர்ச் சிவன் கோவிலுக்குச் சென்று, சாமிக்கும் அம்பாளுக்கும் அருச்சனை செய்து வழிபட்டுத் திரும்புவர். வைதிகமுறைச் சாந்தியின் சடங்கு முறைகளை அடுத்துப் பார்க்கலாம்.

வைதிகமுறைச் சாந்தி என்பது பஞ்சாங்கக்காரர் முன்னின்று நடத்துவதாகும். பெரும்பாலான நகரத்தார்கள் இம்முறைப்படியே சாந்தி செய்து கொள்கின்றனர். ஆரிய நாகரிகம் நகரத்தாரிடையே கோவலன் கண்ணகி காலத்திலிருந்து ஊடுருவி, ஆழமாக வேர்விட்டு, வளர்ந்திருப்பதன் வெளிப்பாடே இது.

வைதிகமுறைச் சாந்தியில், வளவில், நடுவாசலில், கிழக்கு முகமாக ஒரே மணை அமைத்து, அதில் 64 கலசம் அல்லது 16 கலசம் வைப்பர். (பெரும்பாலும் 64 தான் வைப்பர).

சாந்திக்கு முதல் நாள் காலை மணிவிழாத் தம்பதியர் சங்கல்பம் செய்து, அனுக்ஞை செய்து, நீராடி, மகாகணபதியை வழிபாடு செய்து, அருச்சனை செய்வர். பிறகு, நாந்திசோபனத்திற்கு 9 அந்தணர்களை வரித்து, தீபலட்சுமி பூசை செய்வர்.

அன்று மாலை அனுக்ஞை, புண்ணியாகவாசனம் தீபலட்சுமி பூசை செய்து, கோ தானம், தச தானம், வைஷ்ணவ சிரார்த்தம், கிரகப்ரீதி முதலியவற்றைச் செய்வர். பிறகு, கோவிலிலிருந்து குருக்கள் மற்றும் அந்தணரை அழைத்து வந்து ஆசாரிய வர்ணம் செய்து, ஆசார்யர் மற்றும் செபம் செய்யும் அந்தணர்கட்கு வேட்டி, துண்டு கொடுப்பர்.

பிறகு சஷ்டியப்த பூர்த்தி சாந்திக் கலசம் 64க்கும், தனியாக ஆயுள் தேவதையை எழுந்தருளச் செய்த கலசம் ஒன்றுக்கும், வழிபாடு செய்து அருச்சனை செய்வர். மணி விழா நாயகர் மற்றும் குடும்பத்தினர் நட்சத்திரங்களைக் கேட்டுச் சங்கல்பம் செய்தபின், செபப் பிராமணர்கள் பின்வரும் பாராயணங்களைச் செய்வர்.

கணேச பஞ்சரத்னம், விஷ்ணு சகஸ்ரநாமம், இந்திராட்சி சிவகசவம், லெட்சுமி அட்டோத்திரம், லெட்சுமி அட்டகம், மார்க்கண்டேய

தோத்திரம். பாராயணங்கள் முடிந்தபின் ஆச்சாரியர் தீபாராதனை காண்பித்து, திராவிட வேதம் என்று கூறுவார். திருமுறைப் பாடல்கள் பாடப்பெறும். அதன் பின்னர் ஆசாரியர் தீபாராதனை செய்து, அனைவருக்கும் பிரசாதம் வழங்குவார்.

மணிவிழாவன்று காலையில், மணிவிழாத் தம்பதியர் நீராடி, மணையில் அமர்வர். முதல்நாள் மாலை செய்த பாராயணங்களோடு, ஆதித்ய ஹிருதயம், நவகிரக செபம் முதலியவற்றையும் சேர்த்து அந்தணர்கள் பாராயணம் செய்வர்.

பிறகு மணிவிழா நாயகர் மற்றும் குடும்பத்தாரின் நட்சத்திரங்களைக் கேட்டு, செபப் பிராமணர் ஐந்துபேர் அமர்ந்து, ஆயுள் ஓமம் செய்து பூர்ணாகுதி செய்வர். பின்னர் செபப் பிராணமர் பதின்மர் அமர்ந்து சாந்தி ஓமமும், நவக்கிரக ஓமமும் செய்து பூர்ணாகுதிகள் செய்வர். வைதிக முறைச் சாந்தியில் இந்த மூன்று ஓமங்கள் இன்றியமையாதவை.

பூர்ணாகுதித் தீபாராதனை முடிந்ததும் மணிவிழாத் தம்பதியர் குடும்பத்துடன் கலசங்களையும், ஓம குண்டங்களையும் மும்முறை வலம் வந்து வழிபடுவர். நாயகர் தம் துணைவியாருடன் பிரதான கலசமாகிய சுவாமி, அம்பாளுக்கு அர்ச்சனைகள் செய்வார்.

பின்னர் பஞ்சதானம் எனும் துர்த்தானங்கள் ஐந்தும் (உப்பு, பருத்தி, அயதண்டம், கருத்த கம்பளி, அயபாத்திரம்) வழங்குவர், பிறகு யாத்ரா தானம்செய்வர்.

பிறகு மணிவிழாவின் இன்றியமையாச் சிறப்பு நிகழ்ச்சியாகிய நீராட்டு விழா நடைபெறும். மணி விழாத் தம்பதியரை வளவு வாசலில், ஒரே நீளநாற்காலியில, கிழக்குமுகமாக அமரச்செய்து, இருவர் கையிலும் தேங்காய் கொடுப்பர். புண்ணியாகவாசனம் செய்த நீரையும், பிரதான கலசநீரையும் முதலில் ஆசாரியர் தம்பதிகளுக்கு அபிடேகம் செய்வார். பிறகு ணி விழா நாயகரை விட வயதில் மூத்தோர், தம்பதியராக வந்து அபிடேகம் செய்வர். பின்னர் விழாவுக்கு வந்திருக்கும் அனைவரும் வரிசையாக வந்து அபிடேகம் செய்து, வணங்கி, வாழ்த்துவர். நிறைவாக மணி விழாத் தம்பதியரின் மக்கள் (முதலில் பெண் பிள்ளைகள், பிறகு ஆண் பிள்ளைகள், ஆண் பிள்ளைகளில் இளைய மகன் தொடங்க,

வரிசையாக வந்து மூத்த மகன் நிறைவு செய்ய வேண்டும்) தம்பதியராக வந்து, மணிவிழாத் தம்பதியரை வலம் வந்தபின், அபிடேகம் செய்வர்.

பிறகு மணிவிழா நாயகியின் தாய் வீட்டார் கொண்டு வந்த பட்டுச் சேலை முதலியவற்றை மணிவிழா நாயகியும், வேட்டி, துண்டை நாயகரும் அணிந்து வருவர். மணையில் கிழக்கு முகமாக அமர்வர். தானங்கள் எல்லாம் (நெய் நிழல் தானம், தசதானம், நவக்கிரக தானம், ஷட்தானம், மகாதானம் ஆகியவை) செய்வர்.

பின்னர் தம்பதிபூசை செய்வர். அந்தணத் தம்பதியரை மணையில் கிழக்கு முகமாக உட்காரவைத்து, அவர்கட்குப் பூசை செய்து, பின் மணி விழா நாயகர் திருமாங்கல்யத்தை எடுத்துக்கொடுக்க, அந்த அந்தணர் தம் மனைவிக்கு அதனை அணிவிப்பார். அத்தம்பதியருக்குத் தட்சணை, தாம்பூலம் கொடுப்பர். அவர்களிடம் ஆசி, அட்சதை, விபூதி, குங்குமம் பெற்றபின் மணிவிழாத் தம்பதியர் அந்தணத் தம்பதியரை வாசல்வரை அழைத்துச் சென்று விடை கொடுப்பர்.

அதன்பிறகு மீண்டும் மணிவிழாத் தம்பதியர் மணையில் கிழக்கு முகமாக அமர்வர். விக்னேசுவர பூசை, திருமாங்கல்ய பூசை நடைபெறும். பின்னர் திருமாங்கல்யமும், மாலைகளும் ஒரு தாம்பாளத்தில் வைக்கப்பெற்று, கூடியுள்ள பெரியோரின் ஆசி பெறுவதற்காக எடுத்துச் செல்லப்பெறும். (அகலுள் மங்கல நாண் எழுந்தது) மங்கல நாண் பெரியோர் ஆசி பெற்று வந்ததும், குடும்பப் பெரியவர் எடுத்துக் கொடுக்க, மணிவிழா நாயகர், நாயகிக்குத் திருப்பூட்டுவார், பிறகு மாலை மாற்றிக் கொள்வர்.

பின்னர், மணி விழா நாயகரை விட மூத்தவர்கள் மணையில் அமர்ந்திருக்க, மணி விழாத் தம்பதியர் அவர்களை வணங்கி ஆசி பெறுவர். பிறகு மணிவிழாத் தம்பதியர் மணையில் அமர்ந்து, தம்மைவிட வயதில் இளையவர்களுக்கு ஆசி வழங்குவர்.

சாந்தியின் நிறைவு நிகழ்ச்சியாக, மணிவிழாத் தம்பதியர், உற்றார் உறவினருடன், மேளதாளத்துடன், நகரச் சிவன் கோவிலுக்குச் சென்று சிவனுக்கும், அம்பாளுக்கும் அருச்சனை செய்து வழிபட்டுத் திரும்புவர்.

திருநெறிய தமிழ்முறை மணிவிழா நடைமுறைகளை அடுத்து விரிவாகக் காண்போம்.

பொதுவாக நகரத்தார்கள் சைவமும், தமிழும் போற்றும் மரபினர். ஆயினும், அவர்கள் ஆன்மிக ஈடுபாடு காரணமாக அந்தணர் செல்வாக்கிற்கும், சடங்கு முறைகட்கும், வடமொழிப் பயன்பாட்டிற்கும் இடம் கொடுத்துவிட்டனர் என்பது வரலாற்று உண்மை. கோவலன் காலத்திற்கு முன்னரே இக்கலப்பு நிகழ்ந்துவிட்டது. அதனால்தான் கண்ணகி திருமணத்தில் மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட மணமக்கள் தீ வலம் செய்த காட்சியை இளங்கோவடிகள் விளக்குகிறார்.

ஆயினும், நகரத்தார் மரபு போற்றும் பழக்கம் காரணமாக, அந்தணர் சடங்குகளின் கலப்பு தனித்து நிற்கிறது. திருமணத்தின் இன்றியமையாச் சிறப்பு நிகழ்ச்சியாகிய திருப்பூட்டுதல் நிகழும் போது அந்தணரோ, வடமொழி மந்திரங்களோ பங்கேற்பதில்லை. எனவே, நகரத்தார் திருமணம் தமிழ் முறையிலேயே நடைபெறுகிறது என்று கூறலாம். அந்தணரும், வடமொழி மந்திரங்களும் இடம்பெறும் பகவணம், பூரம் கழித்தல், மணவறை முதலியவை துணைச் சடங்குகள்தாம்.

ஆனால் 59 (உக்கிரரத சாந்தி), மணிவிழா (சாந்தி 70 (பீமரத சாந்தி), 80 (சதாபிஷேகம்), 100 (மகாபிஷேகம்) முதலியவற்றில் குடங்களில் நிறைந்துள்ள நீரை, தம்பதிகளை நீராட்டுவதற்குரிய புனித நீராக்கும் முறையில் செய்யப்பெறும் வேள்வியே முதன்மைச் சடங்கு. அது வைதிக முறையாயினும், ஆகம முறையாயினும் அந்தணரும், வடமொழி மந்திரமும் இடம் பெறும் வண்ணமே நிகழ்கிறது.

இந்நிலையில் சைவமும், தமிழும் போற்ற நினைக்கும் நகரத்தார் சிலர் அண்மைக் காலமாகத் திருநெறிய தமிழ் முறையில் தங்கள் மணி விழாவைக் கொண்டாடி வருகின்றனர். சிவபூசை எடுத்துக் கொண்டு. திருமணம் முதலிய வாழ்க்கைச் சிறப்பு நிகழ்ச்சியைத் திருமுறை வழிநடத்தும் பயிற்சியினை மேற்கொண்டுள்ள பெருமக்கள் இம்முறையில் மணிவிழாவை நடத்தி வைக்கின்றனர். அவர்கள் திருமுறைப் பாடல்களை மட்டும் ஓதியே வேள்வி செய்கின்றனர்.

இம்முறை மணி விழாவிலும் வளவு வாசலில் வேள்விக்குரிய ஓம குண்டம் அமைக்கப்பெறுகிறது. அதற்கு மேற்கே நீர்க்குடங்கள் வைக்கப் பெறுகின்றன. மொத்தம் 24 குடங்கள், இறைவன், இறைவிக்கு இரு

குடங்கள் மையமாக வைக்கப்பெறுகின்றன. அவற்றைச் சுற்றி அட்ட வீரட்டத்தலங்களுக்கு 8 குடங்கள் வைக்கப்பெறுகின்றன. இவை நீள்வட்ட வடிவில் அமையும். கிழக்கு நோக்கி அமையும் இந்நீள் வட்டத்தின் வலப்புறம் புனித நீர்க்குடம் வைக்கப்பெறும். நீள் வட்டத்தின் இடப்புறம், நீள்வட்டத்திற்குக் கிழக்கே, நவகோள்களுக்குரிய 9 குடங்கள் வைக்கப் பெறும். அதற்கும் கிழக்கே, நான்கு குடங்கள் (இயமன், சித்திரர், குப்தர், மார்க்கண்டேயர் என்ற வரிசையில் தெற்கிலிருந்து வடக்கு) வைக்கப் பெறும்.

மணி விழாவிற்கு முதல் நாள் மாலையே, விழாவை நடத்தி வைக்கும் ஆசிரியர் வந்துவிடுவார். மணி விழாத் தம்பதியரைக் குடங்களுக்கும், வேள்விக் குண்டத்திற்கும் இடையே தெற்கு நோக்கி அமர வைத்து, ஆசிரியர் அவர்களுக்கு எதிரே வடக்கு நோக்கி அமர்ந்து வேள்வி தொடங்குவார்.

வேள்வி, திருவிளக்கு வழிபாடு, புனித நீர் வழிபாடு, ஆனைந்து வழிபாடு, பிள்ளையார் வழிபாடு, நிறைகுடங்கள் வழிபாடு, அட்டவீரட்ட வழிபாடு, மார்க்கண்டேயர் வழிபாடு, இயமன் வழிபாடு, சித்திரர், குப்தர் வழிபாடு, நவகோள் வழிபாடு என்ற வரிசையில் நடைபெறும். இவ்வழிபாடுகளின் தொடக்கத்திலிருந்து, நிறைவு வரை வேள்வித் தீ வளர்க்கப்பெறும் வழிபாட்டின் நிறைவு நிகழ்ச்சியாக நிறையவி (பூரணாகுதி) அளிக்கப்பெறும்.

முதல்நாள் மாலை வழிபாட்டு நிறைவுக்குப் பின், மணிவிழாத் தம்பதியர் மணையில் கிழக்கு முகமாக அமர்ந்து, தம் உறவினர்கட்கு, வேட்டி, சேலை வழங்குவது நகரத்தார் மணி விழாவில் சிறப்பு நிகழ்ச்சி ஆகும்.

மணி விழாவன்று காலையிலும், வேள்வியும், வழிபாடும் நிகழும். நிறைவில் நிறையவி அளித்தல். இறைவன், இறைவியைக் குறிக்கும் 2 குடங்கள் தவிர ஏனைய குடங்களில் உள்ள நீரால், வைதீகமுறை, ஆகமமுறைச் சாந்திகளில் நிகழ்வது போலவே, தம்பதியருக்கு மங்கல நீராட்டு நிகழ்த்தப்பெறும்.

மங்கல நீராட்டுக்குப்பின் தம்பதியர் புத்தாடை அணிந்து வந்து இறைவன், இறைவி நிறைகுடங்களுக்கு முன்னர் அமர வேண்டும்.

விழாத்தலைவர் இறைவனுக்கு வேட்டி, துண்டு அணிவிப்பார். வைதீகமுறை, ஆகம முறைச்சாந்திகளில் நிகழும் தம்பதி பூசைக்குப் பதிலாக, இவ்வழிபாட்டின் நிறைவாக, தம்பதியர், இறைவியைக் குறிக்கும் நிறை குடத்திற்குத் திருமாங்கல்யம் அணிவிப்பர்.

இவ்வழிபாட்டிற்குப் பின்னர், வழக்கம் போல மணி விழாத் தம்பதியர், மணையில் கிழக்குமுகமாக அமர்வர். திருமாங்கல்யம் அணிவிக்கும் நிகழ்ச்சி நடைபெறும். பின்னர் தம்பதியர் தம்மை விட மூத்தவர்களிடம் ஆசி பெறுவர். தங்களைவிட வயதில் இளையோருக்கு ஆசி வழங்குவர்.

பின்னர் சுற்றம் சூழ, மேள தாளத்துடன், நகரச் சிவன்கோவில் சென்று, அருச்சனை செய்து, சாமி கும்பிட்டுத் திரும்புவர்.

வேள்வி, வழிபாடு இவற்றில் பயன்படுத்தப்பெற்ற அரிசி, பருப்பு முதலிய பொருள்கள், இறைவன், இறைவி திருக்குடங்களுக்கு அணிவிக்கப்பெற்ற ஆடை, திருமாங்கல்யம் முதலிய எப்பொருளையும், விழா நடத்திவைத்த ஆசிரியர் குழுவினர் எடுத்துச் செல்லமாட்டார்கள். (வைதிக, ஆகமமுறைச் சாந்திகளில் இவற்றை, விழா நடத்தி வைத்த அந்தணர்கள் எடுத்துச் சென்று விடுவது மரபு). மணி விழாத் தம்பதியர் மேற்படி பொருட்களை ஏழை, எளியோருக்கோ, ஆலயங்களுக்கோ வழங்கி மகிழ்வது திருநெறிய தமிழ்முறை மணி விழாவின் மற்றுமொரு சிறப்பு.

ஈமச் சடங்கு

இழவு கூட்டுதல்

ஓர் உயிர், தாய் வயிற்றில் கருவாக உருப்பெற்ற ஐந்தாவது மாதம் (அது தலைப்பிள்ளையாக இருந்தால்) அந்த உயிர் தொடர்பான சிறப்பு நிகழ்ச்சிகள் தொடங்கி விடுகின்றன. அவ்வுயிர் பருவமடைந்து திருமணம் செய்து கொண்டு, மணி விழா, முத்துவிழா, பவள விழா என விழாக்கள் கண்டு சிறக்கும் போது நடைபெறும் குடும்பச் சிறப்பு நிகழ்ச்சிகளை இதுவரை தொகுத்துப் பார்த்தோம்.

ஓர் உயிர் வாழ்ந்து சிறக்கும் போது குடும்பச் சிறப்பு நிகழ்ச்சிகள் நடப்பது போல, அவ்வுயிர் இறக்கும் போதும் சமூகம் பங்கு கொள்ளும் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறுவது மரபு. அவற்றை இறுதிச் சடங்குகள், ஈமச் சடங்குகள் என்று குறிப்பிடுவர். நகரத்தார் சமூகப் பேச்சு வழக்கில் இந்த இறுதிச் சடங்குகளுக்கு இழவு கூட்டுதல் என்று பெயர்.

நகரத்தார் சமூகத்தில் ஒருவர் இறந்து விட்டால் அது தொடர்பான ஈமச் சடங்குகள் முன்னரெல்லாம் பதினாறு நாட்கள் நடைபெறும். பதினாறாவது நாள் சவண்டி என்னும் சடங்கோடு ஈமச் சடங்குகள் நிறைவெய்தும், இந்தச் சடங்குகள் நடைபெறும் நாட்களிலெல்லாம் வெளியூர்களிலும், உள்ளூரிலும் இருந்து உறவினர்களும், நண்பர்களும் இறந்தவர் வீட்டிற்கு வந்து கொண்டே இருப்பர்.

சாவு நிகழ்ந்தது குறித்து விசாரித்து விட்டு இறந்தவர் குடும்பத்தாருக்கு இரங்கல் தெரிவித்துத் திரும்புவர். அவ்வாறு வருவோர்க்கெல்லாம், இறந்தவர் வீட்டில் அவர்கள் வரும் நேரத்திற்கேற்பச் சிற்றுண்டியோ, சாப்பாடோ வழங்கப்பெறும்.

இவ்வாறு ஒருவர் இறந்தது முதல் சவண்டி முடியும் வரையான ஈமச் சடங்குகளை இழவு கூட்டுதல் என்பர். இறந்தது குறித்து விசாரிக்க வருபவர்கள், இரங்கல் தெரிவித்துப் பேசிக்கொண்டிருத்தல் இழவு கேட்டல் எனப்படும். வந்தவரோடு இறந்தவர் குடும்பத்தினர் பேசிக் கொண்டிருப்பது இழவு சொல்லுதல் எனப்படும்.

பசுத் தானம் கொடுத்தல்

ஒருவர் இறந்தவுடன் முதலில் செய்யப்படும் சடங்கு பசுத் தானம் கொடுத்தல். புரோகிதர் ஒருவர் அழைத்து வரப்படுவார். தெரிந்த

வீட்டிலிருந்து ஒரு பசுமாடு கொண்டு வரப்படும். அதை அந்தப் புரோகிதருக்குத் தானம் கொடுப்பதற்குரிய மந்திரங்கள் புரோகிதரால் சொல்லப்படும். இறந்தவர் மகன் அவற்றைத் திரும்பச் சொல்வார். பின்னர் பசு உரியவரால் ஓட்டிச் செல்லப்படப் புரோகிதருக்கு ஒரு குறிப்பிட்ட தொகை வழங்கப்படும்.

முற்காலத்தில் வீடுதோறும் பசு மாடுகள் வளர்க்கப்பட்ட சூழ்நிலையில் உண்மையிலேயே பசுத் தானம் கொடுக்கப்பட்டிருக்கலாம். இடைக்காலத்தில் பெயருக்கு ஒரு பசு மாடு கொண்டு வரப்பட்டு, புரோகிதருக்குப் பணம் வழங்கப்பட்டது. அண்மைக்காலமாக அந்த வாய்ப்பும் அருகிப் போய்விட்டது. பசு கொண்டு வரப்படாமலே மந்திரம் சொல்லிப் பணம் கொடுப்பது மட்டும் சடங்காக நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இது ஆரிய நாகரிகக் கலப்பால் தோன்றிய சடங்காகவே இருக்க வேண்டும்.

வாய் கை கட்டுதல்

பிறகு இறந்தவர் உடலில் கைக்கட்டை விரல்கள் இரண்டையும் இணைத்துக் கட்டி, கால் கட்டை விரல்கள் இரண்டையும் இணைத்துக் கட்டி வாயை மூடிக் கட்டி, மூக்குத் துளைகளில் பஞ்சு வைத்து அடைப்பர். இதற்கு வாய் கை கட்டுதல் எனப்பெயர்.

வாய் கை கட்டிய பிறகு, வழக்கமாக அந்த வீட்டில் இறந்தவர் உடல் கிடத்தப்படும் இடத்தில் இந்த உடலையும் கிடத்துவர். பெரும்பாலான நகரத்தார் வீடுகளில் வளவுக்கும இரண்டாம் கட்டுக்கும் இடையே உள்ள ஹால் வீட்டில் அல்லது வளவுப் பட்டாலையில் இவ்வாறு உடல் கிடத்தப்படும். உடல் தெற்கு வடக்காக, தெற்கே தலை இருக்கும் வண்ணம் கிடத்தப்படும். உடலின் தலைமாட்டில் குத்து விளக்கு ஏற்றி வைக்கப்பட்டு ஒரு தேங்காய் உடைத்து வைக்கப்படும்.

பின்னர் உறவினர்கட்கும், பங்காளிகட்கும் சொல்லி அனுப்புவர். வெளியூரில் உள்ள உறவினர்கட்கும் பங்காளிகட்கும் தகவல் கொடுப்பர். தகனம் நடைபெறும் வரை சாப்பாடு போடுவதில்லை என ஒரு மரபு வைத்திருப்பதால் அதுவரை வேளை தோறும் சிற்றுண்டி மட்டுமே வழங்கப் பெறும்.

வரவேண்டிய முக்கியமான உறவினர்கள், பங்காளிகள் எல்லாம் வந்தவுடன் தகனத்திற்கு ஆவன செய்யத் தொடங்குவர்.

குளிப்பாட்டுதல்

முதலில் இறந்தவர் உடல் குளிப்பாட்டப் பெறும். வளவு வாசலில், நாற்காலிகள் போட்டு அதில் தெற்கு வடக்காக உடல் கிடத்தப் பெறும். நெருங்கிய உறவினரெல்லாம் வந்து எண்ணெய் தொட்டு, உடலில் தலையில் எண்ணெயை வைத்துச் செல்வர். அதற்குப் பின்னர் குளிப்பாட்டுவர். இறந்தவர் ஆணாயின் பங்காளி வீட்டு ஆண்களும், பெண்ணாயின் பங்காளி வீட்டுப் பெண்களும் குளிப்பாட்டுவர். குளிப்பாட்டிய உடலைத் துடைத்தபின் புதிய ஆடை (பெரும்பாலும் ஒற்றை ஆடை – வேட்டிமட்டும் அல்லது சேலை மட்டும்) யால் உடல் மூடப்பெறும்.

பந்தல் போடுதல்

குளிப்பாட்டப்பெற்ற உடலை, வீட்டின் வளைவு வாசலில், கிடத்தி உறவினர்கள், பங்காளிகளெல்லாம், அந்த உடலைச் சுற்றி வந்து மரியாதை செலுத்துவர், அவ்வாறு உடல் கிடத்தப்பெறும்போது, வானத்தை நோக்கிய திறந்த வாசலில் கிடத்தக்கூடாது என்பதனால், ஒரு சிறிய பந்தல் போட்டு அதற்கு உள்ளே உடலைக் கிடத்துவது நகரத்தார் சமூக மரபு.

நான்கு கம்புகள், அவற்றின் மேற்புறத்தில் கவட்டை போன்ற அமைப்பு, அக்கவட்டைகளை இணைக்கும் வண்ணம் 4 குச்சிகளும், அவற்றின் குறுக்கே (மூலை மட்டம் போல) 2 குச்சிகளும் வைத்து, அதன்மேல் ஒரு வெள்ளைத் துணியைக் கட்டுவர். கம்புகள், குச்சிகள், கம்புகளை வளவு வாசலில் ஊன்றி நிறுத்தக் களிமண் உருண்டைகள் இவற்றையெல்லாம், நகரத்தார் வீடுகளில், இழவுச் சடங்கில், வழக்கமாகப் பங்கேற்கும் குறவர் கொண்டு வருவார்.

இவ்வாறு இழவு வீட்டில் அமைக்கப்படுவதைப் பந்தல் எனக் குறிப்பிடுவதால், நகரத்தார் சமூகத்தினர், தம்பேச்சு வழக்கில் திருமணம், சாந்தி போன்ற நல்ல நிகழ்ச்சிகளுக்கு வளவு வாசலில் போடப்படுவதைக் கொட்டகை என்று தான் குறிப்பிடுவர்.

வளவு வாசலில் வைக்கப் பெற்றிருக்கும் 4 களிமண் உருண்டைகளில், இறந்தவரின் பங்காளி வீட்டு ஆண்கள் நால்வர்,

நான்கு கம்புகளை ஊன்றுவர். இணைப்புக்குச்சிகளைக் கட்டுவர். பிறகு பந்தல் சாய்ந்து விடாமல் இருக்கும் பொருட்டு நான்கு கம்புகளையும் கயிறுகளால் இழுத்து வளவுத் தூண்களில் கட்டுவர். இவ்வாறு பங்காளிகள் பந்தல் போடுவர்.

பச்சை குத்துதல்

பந்தல் போடப்பெற்ற பின், அதற்கு அருகே உரலைக் கொண்டு வந்து போடுவர். அதில் சிறிது பச்சை நெல்லைப்போட்டு இறந்தவரின் மூத்த மகள் அதனைக் குத்தி அரிசியாக்குவார். மூத்த மகள் ஊரில் இல்லாவிட்டால் ஊரில் இருக்கும் மகள் அல்லது பேத்தி பச்சை குத்துவார். இறந்தவருக்குப் பெண் பிள்ளைகளே இல்லையென்றால் மருமகள் பச்சை குத்துதலும் உண்டு. இவ்வாறு பச்சை குத்தித் திரட்டப் பெற்ற அரிசி சுடுகாட்டிற்குக் கொண்டு செல்லப் பெறும். வாய்க்கரிசி போடும் பொழுது அது பயன் படுத்தப்பெறும்.

பட்டம் சுற்றுதல்

பச்சை குத்தி முடிந்ததும், இறந்தவரது குளிப்பாட்டப்பெற்ற உடல், பந்தலின் உள்ளே விரிக்கப்பெற்ற பாயில் கொண்டு வந்து கிடத்தப் பெறும். இறந்தவரின் உடல் வீட்டிலிருந்து சுடுகாட்டிற்குக் கொண்டு செல்லப் பயன்படும் சிவரதம் என்ற வண்டியில், உடலைக் கிடத்த ஒரு இரும்புப் படுக்கை உண்டு, குளிப்பாட்டப்பெற்றதும், உடலை இந்த ஸ்ட்ரெச்சரில் பங்காளி வீட்டு ஆண்கள் கிடத்த, வண்டி தள்ளுபவர், உடலை ஸ்ட்ரச்ச ரோடு பிணைத்துக் கட்டுவார். அந்த ஸ்ட்ரெச்சரை அப்படியே பங்காளி வீட்டு ஆண்கள் தூக்கி வந்து, பந்தலின் உள்ளே விரிக்கப்பெற்ற பாயில் வைப்பர். அவ்வாறு வைக்கும் போதும் இறந்தவரின் தலை தெற்குப் புறம் இருக்கும் வண்ணம், தெற்கு வடக்காக வைப்பதே மரபு.

இவ்வாறு உடல் கிடத்தப்பெற்ற பந்தலை உறவினர்களும், பங்காளிகளும் சுற்றி வந்து மரியாதை செய்வது பட்டம் சுற்றுதல் எனப்படும். இறந்தவர் ஆணாக இருப்பின், பட்டம் சுற்றுதல் நிகழ்ச்சியில் முதலில் ஆண்கள் ஒரு குழுவாகவும், அடுத்து, பெண்கள் ஒரு குழுவாகவும் சுற்றுவர். ஒவ்வொரு குழுவும் பந்தலை மூன்று முறை சுற்றி வந்த பிறகு, அனைவரும் உட்கார்ந்து எழுந்து, உடலின் கால் மாட்டில் வைத்திருக்கும் விபூதித்தட்டிலிருந்து விபூதி எடுத்துப் பூசிக்கொண்டு செல்வர்.

இறந்தவர் பெண்ணாக இருந்தால், முதலில் பங்காளி வீட்டு ஆண்கள் ஒரு குழுவாகவும் பிறகு இறந்தவரது தாய் வீட்டுப் பங்காளிகளாகிய ஆண்கள் ஒரு குழுவாகவும், இறுதியில் பெண்கள் ஒரு குழுவாகவும் பட்டம் சுற்றுவர்.

கோடி போடுதல்

இறந்தவர் வாழ்வரசியாக இருந்தால் (இறந்த பெண்ணின் கணவர் உயிரோடு இருந்தால்) அவரது தாய் வீட்டினர் பட்டம் சுற்றும் போது, இறந்தவரின் உடன் பிறந்தவர், பட்டுச் சேலை ஒன்றைத் தம் வலத்தோளில் வைத்துக்கொண்டு சுற்றுவார். மூன்றாவது சுற்றின் இறுதியில் அச்சேலையை இறந்தவர் உடல்மீது, தலைமாட்டில் வைப்பார். இதற்குக் கோடி போடுதல் என்று பெயர்.

கட்டத்தலத்திற்குக் கொண்டு செல்லுதல்

சுடுகாட்டை நகரத்தார், தம் பேச்சு வழக்கில் கட்டத்தலம் எனக்குறிப்பிடுவது மரபு. பட்டம் சுற்றி முடிந்தபின், உடல் தகனத்திற்காகச் சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்லப்பெறும். முன்னரெல்லாம் பச்சை மூங்கில்களால் கட்டப்பெற்ற பாடையில் உடலைக் கிடத்திப் பங்காளி வீட்டு ஆண்கள் தோளில் தூக்கிச் சென்றனர்.

இப்போது பெரும்பாலான செட்டிநாட்டு ஊர்களில் நகரச் சிவன் கோவிலில் சிவரதம் என்ற பெயரில் ஓர் ஆள் இழுத்துச் செல்லத்தக்க வண்டி ஒன்றைச் செய்து வைத்துள்ளனர். அந்த வண்டியில் உள்ள ஸ்ட்ரெச்சரில் உடலைக்கிடத்தி, பிணைத்துக்கட்டிய நிலையில் தான், இப்போதெல்லாம் பந்தலிலே உடலைக் கிடத்துகின்றனர். எனவே பட்டம் சுற்றி முடிந்ததும், பங்காளி வீட்டு ஆண்கள் ஸ்ட்ரெச்சரைத் தூக்கிச் சென்று வண்டியில் வைப்பர்.

பங்காளிகள் ஸ்ட்ரெச்சரைத் தூக்கிச் செல்லும் போதும், வண்டியில் உடல் கொண்டு செல்லப்படும் போதும், கட்டத்தலத்தில் வண்டியிலிருந்து உடலைத் தூக்கிச் செல்லும் போதும், எப்பொழுதும் உடலின் கால்பகுதி முன்னே செல்லும் வண்ணமும், தலைப்பகுதி பின்னே வரும் வண்ணமும் கொண்டு செல்லப்படுவது தான் மரபு. மேலும், வீட்டில் ஓர் சாவு நிகழ்ந்ததிலிருந்து அந்த உடல் வீட்டை விட்டு வெளியே கொண்டு செல்லப் பெறும்வரை, வீட்டின் வளவு, முகப்பு, பட்டாலைகள் ஆகியவற்றில் எங்கே,

நிலைக் கண்ணாடி இருந்தாலும், அவற்றையெல்லாம் துணிகளால் மூடிவைப்பதும் நகரத்தார் சமூக மரபு.

பாய் சுற்றுதல்

உடல் வீட்டை விட்டு வெளியே கொண்டு செல்லப் பெற்ற பிறகு, பந்தலில் உடலைக் கிடத்துவதற்காக, விரிக்கப் பெற்றிருந்த பாயை, இறந்தவரின் இரண்டாவது மகள் வந்து சுற்றுவார். சூழலுக்கேற்ப, மருமகள், பேத்தி, மூத்த மகள் இவர்களுள் யாரேனும் ஒருவர் பாய் சுற்றுவர். இவ்வாறு சுற்றிய பாயைக் குறவரிடம் கொடுப்பர். அவர் அதனை வீதியில் கொண்டு போய்ப் போடுவார்.

வீதிவரை மனைவி

உடல் சுடுகாட்டுக்குக் கொண்டு செல்லப்படும் போது, உறவினர், பங்காளி வீட்டு ஆண்கள் உடன் செல்வர். பெண்கள், வீட்டின் முகப்பைத் தாண்டி வீதிவரை வந்து,உடல் கொண்டு செல்லப்படுவதைப் பார்த்தபின், வீட்டிற்குள் திரும்பிக் குளிப்பர். சில ஊர்களில், பெண்கள் அருகே உள்ள ஊருணிக்குச் சென்று குளித்துத் திரும்புவதும் உண்டு. ஆனால், பெண்கள் உடலோடு கட்டத்தலம் செல்லும் மரபு கிடையாது. இந்தப் பழக்கத்தைத்தான் சுவியரசர் கண்ணதாசன் வீதிவரை மனைவி என்று தம் பாடலில் எழுதியுள்ளார்.

கட்டத்தலத்தில்

கட்டத்தலத்திற்குச் சிவ ரதம் வந்ததும், இறந்தவரின் பங்காளிகள், உடலை ஸ்ட்ரெட்ச்சரோடு எடுத்துக்கொண்டு தகனம் செய்வதற்கு நகரத்தாருக்குரியதாக அமைந்திருக்கும் தகரக் கொட்டைக்குக் கொண்டு வருவர். அங்கே, அன்று அந்த உடல் தகனம் செய்யப்படுவதற்கெனத் தெற்கு வடக்காக ஒரு சிதை உருவாக்கப்பெற்றிருக்கும். பங்காளிகள் உடலைத் தூக்கிக் கொண்டு அச்சிதையை மும்முறை வலம் வருவர். பின்னர் ஸ்ட்ரெச்சரோடு உடலைச் சிதைக்குக் கிழக்குப்புறம் வைப்பர். ஸ்ட்ரெச்சரிலிருந்து கட்டுக்களை அவிழ்த்து, உடலை மட்டும் தூக்கி, சிதையில் தெற்கே தலை இருக்கும் வண்ணம் வைப்பர். வெட்டியான் உடலையெல்லாம் மூடி எருவைப்பூசி, இறந்த உடலின் முகம் மட்டும் தெரியும் வண்ணம் வைத்திருப்பார்.

கட்டத்தலத்திற்கு வந்திருக்கும் உறவினர், பங்காளிகள் அனைவரும் இறந்தவருக்கு வாய்க்கரிசி போடுவர். பச்சைகுத்தித் திரட்டிய அரிசியில் ஒரு பிடியும், காசும் சேர்த்து, இறந்தவரின் முகத்தில் போடுவது மரபு.

கொள்ளி வைக்கும் மகன் தலையை மொட்டை அடித்துக் கொள்வார். சில குடும்பங்களில் இறந்தவரின் மகன்கள் அனைவரும் மொட்டை அடித்துக் கொள்வதும் உண்டு. இதற்காகக் குடி நாவிதர் கட்டத்தலத்திற்கே வந்திருப்பார். மொட்டையடித்துக் கொண்டவர்கள், குளிப்பார்கள். கட்டத்தலத்தில் கிணறு அல்லது குழாய் வசதி இல்லை யென்றால், இதற்காகவே வீட்டிலிருந்து குடத்தில் நீர் கொண்டு செல்வர்.

இதற்குள் வாய்க்கரிசி போடுதல் முடிந்துவிடும். இறந்தவரின் மூத்த மகன் அல்லது அங்கே வந்திருக்கும் மகன் ஈர ஆடையுடன், நீர்க் குடத்தைத் தோளில் சுமந்து கொண்டு சிதையை மும்முறை சுற்றி வருவார். ஒவ்வொரு சுற்றின் முடிவிலும், பானையில், நாவிதர், ஒவ்வொரு ஓட்டை போடுவார். மூன்று சுற்று முடிந்ததும் இறந்தவரின் மகன் நீர்க்குடத்தைக் கீழே போட்டு உடைப்பார். உடைத்த பின் சிதைக்குத் தீ மூட்டிக் கொள்ளி வைப்பார்.

சிறு குழந்தைகள் (8 அல்லது 9 வயதுக்குள்)இறந்தால் எரியூட்டாமல் புதைப்பது நகரத்தார் மரபாகும். முன்னரெல்லாம் இதற்குரிய எல்லைக்கோடாகக் கார்த்திகைப் புதுமை அல்லது சூப்பிடியும், திருவாதிரையும் அமைந்திருந்தன. அதாவது சூப்பிடி செய்யாத ஆண் குழந்தையோ, திருவாதிரை செய்யாத பெண் குழந்தையோ இறந்தால் புதைப்பது, அச்சடங்குகள் செய்யப்பெற்ற பின் இறந்தால் எரியூட்டுவது என்பது அந்நாளைய வழக்கம். இச்சடங்குகள் முற்றிலுமாக நின்று போன நிலையில் வயது மட்டுமே இதற்குரிய வரம்பாகி விட்டது.

நற்கதிதானம்

தகனம் முடிந்து வீடு திரும்பும் வழியில் ஓர் ஊருணிக் கரையில், ஓர் அரசமரம் அல்லது ஆலமரத்தடியில் கொள்ளிவைத்தவர், புரோகிதருக்குத் தானம் கொடுப்பது வழக்கம். இறந்தவரின் ஆத்மா நற்கதியை அடைய வேண்டும் என்பதற்காக இத்தானம் வழங்கப்படு வதால் இதற்கு, நற்கதி தானம் என்பது பெயர்.

இழவு கூட்டுதல் தொடர்பான சடங்குகளில் பெரும்பாலனவை, நகரத்தாரால் ஊருக்கென நியமிக்கப்பெற்ற தண்டல்காரனால் நடத்தி வைக்கப்பெறும்.

அந்தரட்டையும் மோட்ச தீபமும்

இறந்தவர் புலால் உண்ணாதவராகவும், உபதேசம் கேட்டவராகவும் இருந்தால், இறந்த அன்று உடல் தகனம் செய்யப்படும் முன்னர், அந்தரட்டை எனும் சடங்கு செய்யப்படும். உபதேசம் செய்த மடத்தில் (இறந்தவர் ஆணாயின் பாதரக்குடி மடம் பெண்ணாயின் தூலாவூர் மடம்) இருந்து வரும்தேசிகர்தாம் அந்தரட்டை செய்து வைப்பார். இறந்தவர் நினைவாக அவ்வூர் நகரச் சிவன்கோவிலில் மோட்ச தீபம் போடுவதற்கு இறந்தவரின் குடும்பத்தார் ஏற்பாடு செய்வதும் உண்டு.

இவைதாம் நகரத்தார் மரபில், இறந்த அன்று, அல்லது இறந்த மறுநாள் நடைபெறும் சடங்குகளாகும். பின்னர், சவண்டிவரை ஒவ்வொரு நாள் ஒவ்வொரு சடங்காகப் பல சடங்குகள் நடைபெறும் காலச்சூழல் காரணமாக, சடங்குகள் நடைபெறும் நாட்கள் இப்போதெல்லாம் முன்பின்னாக மாற்றிக்கொள்ளப்பட்டுள்ளன. ஆயினும் பெரும்பாலான சடங்குகள் நடத்தப்பெறுகின்றன. அவற்றையும் விரிவாகக் காண்போம்.

பந்தல் பிடுங்குதல்

பெண் இறந்திருந்தாலோ, மனைவியை முன்னரே இழுந்த ஆண் இறந்திருந்தாலோ, இச்சடங்கு மிக எளிமையாக முடிந்து விடும். முன்னரெல்லாம், தகனம் செய்ததற்கு மறுநாள் அல்லது மூன்றாம் நாள் நடைபெற்ற இச்சடங்கு, இப்போது தகனத்தன்றே நடைபெறுகிறது.

உடல் வீட்டை விட்டுக் கொண்டு செல்லப் பெறும்போது, பங்காளிகள் உடன் செல்வர். ஆயினும் நால்வர் மட்டும் வீட்டில் தங்கி, உடல் வெளியே சென்ற உடன் இச்சடங்கைச் செய்து முடிப்பர். பங்காளிகள் நால்வர் பந்தலின் நான்கு கால்களையும் களிமண் உருண்டைகளிலிருந்து எடுத்து, மொத்தப் பந்தலையும் குறவரிடம் கொடுப்பர். அவர் அதனை அப்புறப்படுத்துவார். பந்தல் பிடுங்கிய பங்காளி வீட்டு ஆண்கள் நால்வரும், பந்தல் பிடுங்கியவுடன் சிறிது மோர் அருந்துவது மரபு.

துக்கப் பந்தல்

ஆண் இறந்து அவர்தம் மனைவி உயிரோடு இருந்தால், பந்தல் பிடுங்குதல் எனும் சடங்கு இன்னும் சிறிது விரிவாக நடைபெறும். இச்சாவுக்குப் போடப்பெறும் பந்தலைத் துக்கப் பந்தல் எனக் கூறுவது நகரத்தார் தமிழின் மரபு.

கணவனை இழந்து, உயிரோடு இருக்கும் மனைவிக்கு, நகரத்தார் சமூகத்தில் சாகக் கொடுத்தவள் என்று பெயர். அவ்வாறு சாகக் கொடுத்தவளை நீராட்டி, ஈரச் சேலையுடன் துக்கப்பந்தலின் நடுவே உட்கார வைப்பர். அவருக்கு அருகே நிறைநாழி நெல், வெள்ளைப் பூண்டு, ஒரு தண்ணீர்ச் செம்பு ஆகியவை வைக்கப்பெறும்.

முதலில் பங்காளி வீட்டு ஆண்களும், பின்னர் சாகக்கொடுத்தவளின் தாய் வீட்டுப் பங்காளிகளும், பந்தலை மும்முறை சுற்றி வருவர். பங்காளி வீட்டு ஆண்கள் மூன்று சுற்றுச் சுற்றியதும், சாகக் கொடுத்தவளின் மகனும், தாய் வீட்டுப் பங்காளிகள் சுற்றியதும், சாகக் கொடுத்தவளின் உடன் பிறந்தவர் அல்லது அவர் மகனும் ஆளுக்கொரு கோடி வெள்ளைப் புடவையைச் சாகக் கொடுத்தவளின் அருகே வைப்பர். இதற்குக் கச்சை கொடுத்தல் என்று பெயர்.

பின்னர் பங்காளி வீட்டைச் சேர்ந்த வயது முதிர்ந்த கைம்பெண்கள் (சாகக்கொடுத்தவர்கள்), இப்போது சாகக்கொடுத்தவளின் தாலிச் சங்கிலியைக் கழற்றித் தண்ணீர்ச் செம்பில் போடுவர். இதற்குத் தாலி வாங்குதல் என்று பெயர். இச்சடங்கு முடிந்ததும். பங்காளி வீட்டு ஆண்கள் நால்வர் பந்தல் பிடுங்குவர்.

துக்கப் பந்தல் பிடுங்குதல் பெரும்பாலும், தகனம் செய்ததற்கு மறுநாள் அதிகாலைப் பொழுதில் நடைபெறுவது மரபு.

காடு ஆற்றுதல்

தகனம் செய்ததற்கு மறுநாள் இறந்தவரின் மகன் தண்டல்காரனுடன் சுடுகாட்டிற்குச் சென்று எரியூட்டப்பெற்ற உடலின் அஸ்தியை (உடலின் 5 இடங்களிலிருந்து எடுக்கப்பெறும் எலும்புகள்) எடுத்து வருவர். அவ்வாறு அஸ்தி எடுக்கச் செல்லும்போது, எரியூட்டப் பெற்ற உடலின் மீது, பால், இளநீர் முதலியவற்றைத் தெளித்த பிறகு

அஸ்தி எடுத்து வருவது மரபு. பேச்சு வழக்கில் இதனைக் காடேத்தல் என்கின்றனர். உண்மையில் இது காடு ஆற்றுதல் ஆகும்.

அஸ்தி கரைத்தல்

அஸ்தியை எடுத்துக்கொண்டு இறந்தவரின் மகன் சென்று, திருவரங்கம், திருவையாறு ஆகியவற்றுள் ஓரிடத்தில் காவிரியில் கரைப்பது மரபு. அல்லது திருப்புவனம் சென்று வைகையில் கரைப்பதும் உண்டு. வாய்ப்பு இருந்தால் காசிக்குச் சென்று கங்கையில் கரைப்பதும் பழக்கம். அப்படி ஒரு வேளை நேரில் செல்லாவிடினும், அஸ்தியைக் காசி நகர விடுதிக்கு அனுப்பி, விவரம் எழுதினால், அவர்கள் கங்கையில் கரைத்து, உரிய சடங்குகளைச் செய்து தகவல் அனுப்புவர்.

கழித்தலும் கல்லெடுத்தலும்

இவற்றிற்குப் பின்னர் நடைபெறும் சடங்கு கழித்தல் என்பதும் கல் எடுத்துப் புலால் ஊற்றிக் கொள்ளுதல் என்பதும் ஆகும். இக்காலத்தில் எரியூட்டப்பெற்ற உடலின் எலும்பு, சாம்பல் இவற்றை எடுத்து, புனிதம் எனக் கருதப்பெறும் ஆற்றங்கரையில் மந்திரங்கள் ஓதி, ஆற்றில் கரைப்பது எனும் வைதீகச் சடங்காகவும் தீட்டைக் கழித்தல் என்பதாகவும் இச்சடங்குகள் அமைந்து நின்று விடுகின்றன.

ஆனால் கல்லெடுத்துப் புலால் ஊற்றிக்கொள்ளுதல் என்ற தொடர், சங்ககால நடுகல் மரபை நினைவூட்டுகிறது. இறந்த வீரர்கட்குக் கல்லெடுத்து (சிலைநட்டு) வழிபடுவதை மரபாகச் சுடும் தொல்காப்பியம். காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல், சீர்த்தகு சிறப்பில் பெரும்படை, வாழ்த்தல் என்பவை செய்யத்தக்கவை எனக்காட்டுகிறது. இவற்றின் சுவடுகளை, நாம் நகரத்தார் சமூகத்தின் கழித்தல், கல்லெடுத்தல் சடங்குகளில் காண முடிகிறது. ஊரின் புறத்தேயுள்ள ஆற்றங்கரை அல்லது குளத்தங்கரைக்கு இறந்தவர் மகனை அழைத்துச் சென்று, ஐயர் செங்கல் முதலியவற்றை வைத்துச் செய்யும் கழித்தல் எனும் சடங்கு, முற்றிலும் பழைய கல்லெடுத்தல் மரபையே நினைவூட்டுகிறது.

சங்ககால மரபோடு தொடர்புடைய கல்லெடுத்தல் சடங்கு முடிந்து, இறந்தவரின் மகன் வீடு திரும்பும் போது. இறந்தவரின் உடல் கிடத்தப் பெற்ற இடத்தில் (ஆல்வீடு அல்லது வளவுப் பட்டகசாலையில்) விளக்கேற்றி வைத்திருப்பர். விளக்கிற்கு அருகே. சடங்கு செய்து திரும்பியவரை

(இறந்தவரின் மகன்) அமரச் செய்து, உறவினரெல்லாம் அவரை வணங்கி அவரிடம் திருநீறு பெற்றுக் கொள்வர்.

அப்போது உறவினர் அரிசி முதலியவற்றைக் காணிக்கையாக வைப்பர். அல்லது அரிசிக்கு என ஒரு தொகையைக் கொடுப்பர். பின்னர் உறவினர் அனைவரும் ஒன்றாக அமர்ந்து, மதிய உணவு உண்பர்.

சவண்டி

இழவு கூட்டுதலின் இறுதிச் சடங்கு சவண்டி. இது முடிந்தால் இழவு கூட்டுதல் நிறைவெய்தியதாகப் பொருள். முன்னரெல்லாம் சவண்டி பதினாறாம் நாள் நடைபெற்றது. இப்போது மிகச் சிலர் வீடுகளில் மட்டும் பழைய மரபுப்படி பதினாறாம் நாள் சவண்டி நடைபெறுகிறது. மற்றபடி பெரும்பாலான குடும்பங்களில் பதினொன்றாம் நாள், ஏழாம் நாள் அல்லது ஐந்தாம் நாளே சவண்டி நடத்தி இழவு கூட்டுதலை முடித்து விடுகின்றனர்.

இதற்கு இரு காரணங்கள். பதினாறு நாட்கள் வரை இழவு கூட்டுதலை நீடித்தால் பணம் கூடுதலாகச் செலவாகும். அதனைக் குறைக்க வேண்டும் என்பது ஒன்று. அதைவிட இன்றியமையாதது நடைமுறைத் தேவை கருதிய காரணம் ஆகும். இழவு கூட்ட வேண்டியவர் களாகிய, இறந்தவரின் குடும்பத்தினர், ஆளுக்கு ஓர் ஊரில், ஆளுக்கு ஒரு வேலையில் அல்லது தொழிலில் இருப்பதால் அவர்களனைவரும் விடுப்பு எடுத்துக் கொண்டோ, தொழிலை விட்டு விட்டோ, சொந்த ஊரில் வந்து பதினாறு நாட்கள் தங்கியிருந்து இழவு கூட்ட முடியவில்லை என்பதே இந்த இரண்டாவது காரணம் ஆகும்.

சவண்டியன்று புரோகிதர் வருவார். மூன்று, ஐந்து என ஒற்றைப் படையில் இலைகள் போடுவார். எத்தனை இலைகள் போடுகிறாரோ, அத்தனை ஐயர்களை அழைத்து வருவார். போட்ட இலைகளில் அரிசி, பச்சைக்காய்கறிகள் ஆகியவற்றைப் பரிமாறுவார். இறந்தவரின் மகன்கள், மருமகள்கள் ஆகியோரை அமரச் செய்து மந்திரங்கள் சொல்லி, இப்போது இறந்தவர்க்கும், இக்குடும்பத்தில் இதற்கு முன்னரே இறந்த தென்புலத்தோர் அனைவர்க்கும், எள்ளும் தண்ணீரும் இறைத்து நீர்க்கடன் செய்வதைச் சடங்காக நிகழ்த்துவார். இதுதான் சவண்டி. பின்னர் அந்த இலைகளில் பரிமாறப்பெற்ற பொருட்கள்,

புரோகிதருக்கும், அவர் அழைத்து வந்த ஐயர்கட்கும் தானமாக வழங்கப்பெறும்.

சில குடும்பங்களில் இந்தச் சவண்டியை வீட்டில் கொடுக்காமல், திருவையாறு, திருவரங்கம், திருப்புவனம் போன்ற புனிதத் தலங்களுள் ஒன்றில் ஆற்றங்கரையில் கொடுப்பதும் உண்டு.

ஒப்பாரி

இழவு கேட்க வருபவர்களிடம், இழவு சொல்லும்போது, இறந்தவரின் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள், தம் குடும்பப் பெருமை, இறந்தவரின் தனிச்சிறப்பு, அவரை இழந்து நிற்கும் தங்கள் அவலம் இவற்றை வெளிப்படுத்தும் வண்ணம் தாங்களே புனைந்த ஆசுகவி வகையைச் சேர்ந்த ஒப்பாரிப் பாடல்களைப் பாடுவது நகரத்தார் சமூக மரபு.

செட்டிநாட்டுப் பெண்களின் உணர்ச்சி இலக்கியம், ஒப்பாரி ஆகும். இழவு கேட்கப் பெண்கள் வரும்போது சாகக் கொடுத்த பெண், தன் உணர்ச்சிகளை மடைதிறந்த வெள்ளம் போல் பாடித் தன் துன்ப உணர்வை வெளிப்படுத்துகிறார். இழவு கேட்கவருகின்ற பெண்களும் ஒப்பாரி வைப்பதுண்டு. மகனையோ, மகளையோ, கணவனையோ, தாய் தந்தையரையோ சாகக் கொடுத்த பெண்ணின் அவலத்தைத் தாங்களும் உணர்ந்து அவள் நிலை ஒத்த உணர்வில் கேட்கும் பெண்களும் பாடுவதால் ஒப்பாரி என்ற பெயர் வழங்கியிருக்கலாம்.

கட்டி அழுதல் என்ற சொல் வழக்கு செட்டிநாட்டில் உண்டு. சாகக் கொடுத்த பெண்ணை மற்ற பெண்கள் கட்டிக் கொண்டு அழுதல் எனச் சிலர் எண்ணுகின்றனர். ஆனால் அது அன்று இத்தொடரின் பொருள். இழவு சொல்லும் பெண்ணும், கேட்கும் பெண்களும் பாட்டுக்கட்டி (கவிதை இயற்றி) அழுதல் என்பதே இத்தொடரின் உண்மைப்பொருள் ஆகும்.

தாலாட்டுப் பாடல்கள் முன்னோர் பாடியதை அப்படியே பின்பற்றிப் பாடிவிடலாம். ஆனால் ஒப்பாரிப் பாடல்கள், சூழ்நிலைக்கேற்ப, அவ்வப்போது, புதிதாகப் புனையப் படுபவையே. வாய்மொழி இலக்கியக் கூறுகள் உடைய இவ்வொப்பாரிப் பாடல்களைப் புனையும் நகரத்தார் சமூகப் பெண்கள் பற்றி, நாமக்கல் கவிஞர்.

இழவில் அழுதிடும் பெண்கூட
இசையோடு அழுதல் கண்கூடு

என்று குறிப்பிடுகிறார்.

ஒப்பாரிப் பாடல்கள் சூழ்நிலைக்கேற்பப் பாடப்படும் உணர்ச்சி இலக்கியம். நகரத்தார் வீட்டுப் பெண்களின் உள்ளத்தில் கவிதை குடியிருக்கிறது என்பதைக் காட்டும் கண்ணாடி. ஆயினும் இப்போது இழவு வீடுகளில் ஒப்பாரிப் பாடல்கள் ஒலிப்பது படிப்படியாகக் குறைந்து வருகிறது.

தர்ப்பணம்

ஓர் உயிர் இவ்வுலகில் பிறப்பதற்கு முன்னரே அது தொடர்பான சிறப்பு நிகழ்ச்சிகள் (மருந்து குடித்தல், பிள்ளைப்பெறக் கூட்டுதல் போன்றவை) நடைபெறுகின்றன என்பதை இந்நூலின் தொடக்கத்தில் பார்த்தோம். அவ்வாறே ஓர் உயிர் இவ்வுலகை விட்டு மறைந்த பிறகும், அவ்வுயிர் தொடர்பான சிறப்பு நிகழ்ச்சிகள் தொடர்கின்றன. அத்தகு நிகழ்ச்சிகளுள் ஒன்று தர்ப்பணம்.

இறந்தவர்க்கு எள்ளும் தண்ணீரும் இறைத்து நீர்க்கடன் செய்தலே தர்ப்பணம் ஆகும். தந்தையை இழந்த மகன், அமாவாசை தோறும் தர்ப்பணம் செய்தல் நகரத்தார் சமூக மரபு. செட்டி நாட்டு ஊர்களில், பஞ்சாங்கக்காரர், அமாவாசை தோறும் தர்ப்பணம் செய்பவர் வீட்டிற்கு வந்து, தர்ப்பணம் செய்து வைப்பது வழக்கமாக உள்ளது. தந்தையை இழந்த மகன் அமாவாசை அன்று தர்ப்பணம் செய்த பிறகே சாப்பிடுதல் மரபு.

தர்ப்பணம் செய்வதற்கு, பஞ்சாங்கக்காரர் வந்தவுடன், தர்ப்பணம் செய்பவரின் வலது கை மோதிர விரலில் தர்ப்பைப் புல்லால் பவித்திரம் அணிவிப்பார். பிறகு சங்கல்பம் செய்து வைப்பார். வருடம், மாதம், அயனம், ருது, பட்சம் – திதி, வாரம், நட்சத்திரம் ஆகியவற்றைக் கூறி அமாவாசை தர்ப்பணம் செய்கிறேன் எனப் பஞ்சாங்கக்காரர் சொல்ல, தர்ப்பணம் செய்பவர் திருப்பிச் சொல்வதே சங்கல்பம் செய்வது ஆகும்.

பிறகு தர்ப்பணம் செய்பவருக்கு முன்னர் ஒரு தாம்பாளம் வைக்கப் பெறும். அதில் தர்ப்பைப் புல்லைப் பஞ்சாங்கக்காரர் முறைப்படி (கிழக்கு மேற்காக 3 கட்டைப்புல், நடுவே தெற்கு நோக்கி நுனிப்புல்லாகிய கூர்ச்சம் அமையும் வண்ணம் ஒரு புல்) போடுவார். பின்னர் தர்ப்பணம் செய்பவரின் தந்தை, தாத்தா, முப்பாட்டனார் (இவர்களில் எவரேனும் உயிருடன் இருப்பின், அவருக்கு முந்திய தலைமுறையினர்) பேர்

சொல்லி, ஆவாகனம் செய்து, எள்ளையும், தண்ணீரையும், தர்ப்பணம் செய்பவர் தாம்பாளத்தில் விட வேண்டும். பின்னர் கூர்ச்சத்தைப் பிரித்துப் போட வேண்டும். தர்ப்பணம் செய்து முடிந்ததும் பவித்திரத்தைக் கழற்றி விடுவர். அல்லது கிணற்றில் விட்டு விடுவது பழக்கம். இப்போது தர்ப்பணம் செய்யும் பழக்கம் அருகி வருகிறது.

திதி

மாதத்தின் முப்பது நாட்கள், சந்திரனின் வளர்ச்சி, தேய்வு இவற்றை அடிப்படையாக வைத்து, வளர்பிறை (சுக்கில பட்சம்), தேய்பிறை (கிருட்டிண பட்சம்) என இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பெற்றுள்ளன. ஒவ்வோர் பிரிவிலும் அடங்கிய 15 நாட்களை அவற்றின் வடமொழிப் பெயரில் பஞ்சாங்கம் குறிப்பிடும். முதல்நாள் பிரதமை, இரண்டாம் நாள் துவிதியை, இவ்வாறு குறிப்பிடப்படும்.

எந்தப் பட்சம் எந்தத் திதியில் ஒருவர் இறக்கிறாரோ, அதே பட்சம் அதே திதியில், ஆண்டுதோறும், குறிப்பிட்ட மாதத்தில் இறந்தவரின் ஆண்பிள்ளைகள் இறந்தவர் நினைவவைப் போற்றி, அரிசி, காய், கறி, தானம் அளித்துப் பிண்டம் போட்டு வழிபடுவது திதி கொடுத்தல் எனப்படும்.

தந்தை இறந்தால் மட்டுமே தர்ப்பணம் செய்வது மரபு. ஆனால் தந்தை, தாய் இருவரில் யார் இறந்தாலும் திதி கொடுப்பது மரபு, இறந்ததற்கு மறு ஆண்டு வரும் முதல் திதி தலைத்திதி அல்லது தலைத்திவசம் எனப்படும். இதனைச் சிறப்பாக நடத்துவது நகரத்தார் சமூகப் பழக்கம். உறவினர், பங்காளிகள் ஆகியோரை அழைத்து, பஞ்சாங்கக்காரரையும், தானம் பெறும் அந்தணர்களையும் வீட்டிற்கே வரச்சொல்லி, விருந்து முதலியவற்றோடு தலைத்திதி கொடுக்கப் பெறும். அடுத்தடுத்த ஆண்டுகளில் இறந்தவரின் மகன் குடும்பத்தார் தங்கள் இல்லத்தில், அல்லது பஞ்சாங்கக்காரர் இல்லத்தில், அல்லது ஏதாவதொரு கோவிலில் திதி கொடுப்பர்.

திதி கொடுப்பவர் கர்த்தா ஆவார், செய்து வைக்கும் பஞ்சாங்கக் காரர் உபாத்தியாயர் அல்லது ஆச்சாரியர் ஆவார். கர்த்தாவை மணைப் பலகையில் உட்கார வைத்து, தர்ப்பைப் புல்லால் பவித்திரம் (மோதிரம்) அணிவித்து, பூணூல் அணிவித்து முதலில் சங்கல்பம் செய்து வைப்பார். நகரத்தார் இல்லங்களில், சிவப்புப் பட்டுப் பூணூல், பாதம் செதுக்கப்

பெற்ற காசித் தாம்பாளம் போன்றவை திதி கொடுப்பதற்காகவே மரபு வழியாகப் பேணி வைத்துக் கொள்ளப்பெறும்.

பஞ்சாங்கக்காரர் குடம், செம்பு ஆகியவற்றிற்கு நூல்சுற்றி, மஞ்சளால் பிள்ளையார் பிடித்து வைத்து, கோமயம், பால், தயிர், தேன் ஆகியவற்றால் பஞ்ச கவ்வியம் தயார் செய்து முன்னேற்பாடுகள் செய்வார்.

சங்கல்பம் செய்து வைத்த பிறகு, வாழையிலையில் அரிசி பரப்பி, அதன்மேல் நீர் நிறைந்த கும்பம், அதன் மேல் மாவிலை, தேங்காய் ஆகியவற்றையும், அதன் முன்னே மஞ்சளில் பிடித்த பிள்ளையாரையும் வைப்பார். பின்னர், விக்னேசுவர பூசை, வர்ண கும்ப பூசை, பஞ்ச கவ்விய பூசை, தீபலட்சுமி பூசை, பிதுர் கும்பபூசை ஆகியவற்றைச் செய்து வைப்பார்.

நான்கு வாழை இலை போட்டு, அரிசி, காய்கறிகள் வைத்து, நான்கு அந்தணர்க்குத் தானம் அளித்துத் திதி கொடுப்பது மரபு. முதல் இலையில் ஓர் அந்தணர் கிழக்கு முகமாக வீற்றிருப்பார். அவர் விஸ்வதேவர் எனப்படுவார். ஆசாரியரும், மற்றொரு அந்தணரும் வடக்கு முகமாக வீற்றிருப்பர். அவ்விருவரும் பிதுர்ஸ்தானம், காருண்ய பிதுர்ஸ்தானம் எனப்படுவர். நான்காவது அந்தணர் மேற்கு முகமாக வீற்றிருப்பார். அவர் மகாவிஷ்ணு ஸ்தானம் ஆவார்.

நால்வர் முன்னும் இலையில் அரிசி, காய்கறி படைத்து, அவர்களை இறந்தவர் வடிவில் (தந்தை அல்லது தாய்) வந்து இப்பொருட்களை ஏற்று நிறைவெய்தி வாழ்த்துமாறு ஆச்சார்யர் சொல்லும் மந்திரங்களைக் கர்த்தா திருப்பிச் சொல்லி வழிபடுவார். பின்னர், பாதத் தட்டில் வெற்றிலை பாக்கு வைத்து, இந்தச் சிரார்த்தத்தைக் காசியிலே, கங்கையிலே, வடவால விருட்சம், 108 திருப்பதியில் 1008 சிவாலயங்களில், ராமேஸ்வர, புஷ்பவன காசியிலே செய்தால் எந்தப்பலன் உண்டாகுமோ அந்தப்பலனை அடியேனுக்குத் தந்து நன்மையைத் தந்து, தீமையை விலக்கி ரட்சிக்க என வேண்டி, மனைவி நீர் வார்க்க, கர்த்தா எள்ளும் நீரும் விளாவி ஆசாரியரை வணங்குவார்.

ஒரு பாத்திரத்தில் அரிசி, உளுந்து, எள், வாழைப்பழம், தேன் ஆகியவற்றைக் கலந்து பிசைந்து நான்கு கூறாக வைப்பார் கர்த்தா. இதற்குப் பிண்டம் வைத்தல் எனப்பெயர். மூன்று பிண்டங்கள் முந்திய

மூன்று தலைமுறையினருக்கு (தந்தை, தாத்தா, முப்பாட்டனார் அல்லது தாய், அப்பத்தா, பாட்டி) உரியவை. நான்கவாது பிண்டம் இவர்கள் தவிர, ஏனைய முன்னோர் அனைவர்க்கும் என்பது மரபு. திதி கொடுக்கும் மந்திரங்கள் கூறி முடித்ததும் பிண்டங்கட்குப் பூ, சந்தனம், குங்குமம் சாத்தி, அவற்றை வாழை இலையோடு ஒரு பாத்திரத்தில் வைத்து, ஊருணியில் கொண்டு போய் விட்டு விடுவர். முன்னோர்க்கு (தென்புலத்தாருக்கு) உணவு வழங்கல் இதன் பொருள். ஆசாரிய தட்சணை கொடுத்து, அவரிடம் திருநீறு பெற்றுக் கொள்ளுதல் திதி கொடுக்கும் சடங்கின் நிறைவு நிகழ்ச்சியாகும்.

திதி கொடுக்கும் நாளில் கர்த்தா காலை உணவருந்தாமல் இருந்து, திதி கொடுத்த பிறகே சாப்பிடுவது மரபு. ஏதாவது காணரத்தினால் குறிப்பிட்ட திதியில், திதி கொடுக்க இயலாமல் போய் விட்டால், புரட்டாசி மாத அமாவாசையன்று (மகாளய அமாவாசை) திதி கொடுப்பது மரபு.

ஓர் உயிர் பிறப்பதை, அது பிறக்கும் போது உச்சத்தில் இருக்கும் விண்மீனை அடிப்படையாக வைத்தே பேசுவர். அது போல, மறைவும், மறைந்த போது உச்சத்தில் இருக்கும் விண்மீன் அடிப்படையிலேயே கணக்கிடப்பெற்று, நினைவு நிகழ்ச்சி நடத்தப்பெறும் மரபு இருந்திருக்க வேண்டும் என்பதைச் சைவ நாயன்மார்கள் குருபூசை நமக்கு உணர்த்துகிறது. (அப்பர் குருபூசை – சித்திரைச் சதயம் என்பது போல 63 பேருக்கும் இறந்த நாள் மாதமும் விண்மீனும் சுட்டியே கூறப்பெறுகிறது). எனவே, இறந்த நாளைத் திதி அடிப்படையில் நினைவு வைத்து, நினைவு நிகழ்ச்சி நடத்தும் மரபு பின்னாளில் வந்து விட்ட பழக்கம் என்றே தோன்றுகிறது.

படைப்பு

இறந்தவருள் சிலர், அவர்தம் வழிமுறையினரால் தெய்வமாக ஏற்றுக் கொள்ளப் பெறுவர். அவர்கள் அத்தெய்வத்தை வழிபடுவதற்காகப் படைப்பு நிகழ்த்துவர். காலம் சென்ற தம் முன்னோரின் நினைவைப் போற்றி, அவர்களுக்குச் சோறு படைப்பது, வழிபடுவது என்ற முறையில் வீட்டில் படைக்கின்றனர்.

காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு சிறப்பில் பெரும்படை வாழ்த்தல்

என்பது தொல்காப்பிய நூற்பா. இதில் இடம்பெறும் பெரும்படை என்ற தொடர் இறந்தோரைத் தெய்வமாக நினைத்து நடத்தும் படைப்போடு தொடர்புடையது என்பர் ஆய்வறிஞர்.

படைப்பவருக்குரிய வேட்டி, துண்டு, உருமால் துண்டு, (பெண்ணாயின் சேலை, சட்டை) ஜபமாலை ஆகியவற்றை ஓர் ஓலைப்பெட்டியில் வைத்துப் பாதுகாப்பர். இது பேழை என அழைக்கப் பெறுகிறது. (இப்போது பிளாஸ்டிக் ஓலையால் ஆன பெட்டியில் வைக்கின்றனர்) பேச்சுத் தமிழில் இதனைப் போழை என்றும் சொல்வர். இந்தப் பேழையைப் படைக்கும் வீட்டிற்குள் (வளவு வீடு) உத்தரத்தில் அல்லது ஒரு வளையத்தில் கட்டி வைத்திருப்பர். வெள்ளிக்கிழமை விளக்கேற்றும்போது பேழைக்கும் பூப்போட்டு வழிபடுவதுண்டு.

பொதுவாகப் புதன், வியாழன், வெள்ளிக்கிழமைகளில் படைப்பர். சில வீடுகளில் ஆண்டுதோறும் படைக்கின்றனர். வீட்டில் திருமணம், மணிவிழா போன்ற விழாக்களை ஒட்டியும் படைப்பதுண்டு. வேண்டிக் கொண்டதற்காக (பிரார்த்தனை)ப் படைப்பதும் உண்டு.

படைப்பு அன்று காலையில் ஊர் வேளார் வீட்டில் விதைப்பு நெல் கொடுத்து, அவர்தரும் திருநீற்றைப் பெற்றுவந்து வீட்டில் உள்ள விபூதி மடலில் இட்டுவைப்பர். இது விதைப்புக் கொடுத்தல் எனப்படும்.

சில குடும்பங்களில் படைப்பன்று காலையில் தம் குலதெய்வக் கோவிலுக்குச் சென்று அபிடேகம், அர்ச்சனை செய்து வழிபட்டுத் தீர்த்தம் கொண்டு வருதலும், திருநீறு பெற்று வருதலும் உண்டு.

படைப்பு அன்று மதியம் 2 மணி அளவில் வீட்டு ஆண்கள் பேழையை அவிழ்த்து, துணிகளை, ஊருணியில் அல்லது வீட்டுக் கிணற்று நீரில் அலசிப் பிழிந்து காயப்போடுவர். இது பேழை துவைத்தல் எனப்படும். துணிகளைக் கொடியில் காயப்போடும்போது, அவை தவறுதலாகக் கீழே விழுந்து விட்டால், மறுபடி அலசுவது மரபு, காயப் போட்டிருக்கும் பேழைத் துணிகளின் குறுக்கே செல்லக்கூடாது என்பதும் மரபு.

ஒவ்வொரு முறை படைக்கும்போதும் உறவினர்கள் புதிய துணிகளைப் பேழையோடு சேர்த்து வைத்து வழிபடுவர். அப்புதிய துணிகளும், பேழை துவைக்கும்போது சேர்த்துக் கொள்ளப்பெற்று,

அவையும் அலசிக்காயப் போடப்படும். பேழையில் இருக்கும் பழைய துணிகள் எதுவும் கோரை பட்டிருந்தால் (கிழிசல்) அவற்றை எடுத்துவிடுவார்கள். அப்படி இல்லையென்றாலும் பேழையின் கொள்ளளவு கருதிப் புதிய துணிகள் வைக்கும்போது முன்பு வைத்த துணிகளை எடுத்துவிடுவது வழக்கம். ஆனால் துணிகளைப் பேழையிலிருந்து எடுப்பது என்பது படைப்பு முடிந்த மறுநாள், மீண்டும் பேழையைக் கட்டும்போதுதான் செய்யப்பெறும். பேழையிலிருந்து எடுக்கும் துணிகளை, முன்னர் எந்த உறவினர், பேழையில் வைத்தாரோ, அவர் எடுத்துக் கொள்வது பெருவழக்கு.

பேழை துவைக்கத் தொடங்கும்போது பெண்கள் வளவுப்பத்தியில், படைக்கும் வீட்டிற்கு எதிரில், மணல்பரப்பி, அதில் அடுப்புக்களை வைத்து விறகடுப்பில் சமையல் செய்யத் தொடங்குவர். (இப்போது எரிவாயு அடுப்பு, பல வீடுகளில் பயன்படுத்தப்படுகிறது). சுவை பார்க்காமல் எச்சில்படாமல் பக்தி உணர்வுடன் இச்சமையல் செய்யப்பெறும்.

வாழைக்காய்ப் பொரியல், பலாக்காய்ப் பொரியல், அவரைக்காய்ப் பொரியல், புடலங்காய்க் கூட்டு,வெண்டைக்காய்ப் பச்சடி, கத்தரிக்காய்க் குழம்பு, கருணைக்கிழங்குக் குழம்பு, பறங்கிக்காய்க் குழம்பு, ஆகியவற்றுள் அந்தந்தக் குடும்ப வழக்கப்படி உள்ளவை செய்யப்பெறும். இவற்றோடு பிரசாதமாக, கற்கண்டு வடை, உளுந்துவடை, பாற்சோறு, வெள்ளைப் பணியாரம், பாயாசம் என்பவற்றுள் ஒன்றோ சிலவோ செய்யப்பெறும்.

இரவு ஏழு மணியளவில் காய்ந்த பேழைத் துணிகளை ஆண்கள் மடிப்பர். வேட்டி, சேலை ஆகிவற்றைக் கொய்து, விசிறி மடிப்புப் போல மடித்து, நுனியில் ஒரு முடிச்சிட்டு, பெரியவர்கள் கட்டிக்கொள்வது போல வைப்பர். உருமால் துண்டு, தலைப்பாகை போலவே கட்டிவைக்கப்பெறும் இப்போதெல்லாம், பெரும்பாலும் துணிகளை அடுக்காக ஒன்றின் மேல் ஒன்றாக வைத்துப் படைப்பதே பெருவழக்காக இருக்கிறது. இவ்வாறு (படைக்கும் வளவு வீட்டின் உள் வீட்டிற்குள்) வைக்கப்பெறும் பேழைத்துணிகளின் மீது, கவுடு, சிவண்டி மாலை, (வாழ்வரசிப் பெண்களாயின்) கழுத்துரு, தாலி, மோதிரம், கால்மிஞ்சி போன்ற நகைகளும் வைக்கப்பெறும். யாருக்குப் படைப்பு நடக்கிறதோ, அவர்

விரும்பிப் பயன்படுத்திய சுருட்டு, புகையிலை போன்ற பொருட்களும் வைக்கப்பெறும்.

இவற்றோடு பால், பழம், சிறிய செம்பில் எண்ணெய், அரைத்த சீயக்காய் உருண்டை, அரைத்த மஞ்சள் உருண்டை ஆகியவற்றையும் வைப்பர். துணி அடுக்குகளின் மீது மாலை, உதிரிப்பூக்கள் ஆகியவையும் அழகான முறையில் அணிவிக்கப்பெறும். படைக்கப் பெறுபவரது ஓவியம் அல்லது புகைப்படம் இருந்தால் அது சுவரோரமாக வைக்கப்பெற்று மாலை அணிவிக்கப்பெறும். ஊதுவத்தி ஏற்றி, சாம்பிராணிப் புகை போட்டு அந்த வீடு (வளவு வீடு) தெய்வீக மணம் கமழும் நிலையை உருவாக்குவர்.

இந்தப் பணிகளையெல்லாம் ஆண்கள் செய்த பிறகு, பெண்கள், துணி அடுக்குக்களுக்கு எதிரே இலைகள் போட்டு, அவற்றில் அனைத்துக் காய்கறிகளையும் பரிமாறி, சோறு போட்டு, பருப்பு நெய் ஊற்றி வைப்பர். இதற்குப் பள்ளயம் போடுதல் என்று பெயர்.

மீண்டும் ஆண்கள் பொறுப்பெடுத்துக் கொண்டு நீர் விளாவி, நைவேத்தியம் செய்து, கற்பூரம் அல்லது சாம்பிராணித் தீபம் (வீட்டு வழக்கத்திற்கேற்ப) காட்டுவார்கள். பெரும்பாலும் குடும்பத்தில் மூத்தவர் இதனைச்செய்வது வழக்கம், தீபம் பார்த்த பிறகு கூடியிருக்கும் ஆண், பெண் உறவினரனைவரும் ஒவ்வொருவராக உள்வீட்டிற்குள் வந்து விழுந்து கும்பிட்டுத் திருநீறு, குங்குமம் இட்டுக் கொள்வர். படைத்த இலைகளில் பெரியவர்கள் வளவு வீட்டிற்குள்ளேயே சாப்பிடுவர். ஏனையவர்கள் வளவுப்பத்தி அல்லது ஆல்வீட்டில் வைக்கப்பெறும் பந்தியில் சாப்பிடுவர். சாப்பிட்ட இலையை வீதியில் கொண்டுபோய் எறிவதில்லை. வளவு வாசலில் ஒரு மூலையில் குவித்து வைத்திருந்து மறு நாள்தான் வீதியில் போடுவது மரபு.

பிரசாதமாகிய பாற்சோறு, பால், வடை அல்லது பணியாரம் முதலியவை அனைவருக்கும் வழங்கப்பெறும்.

படைத்த வீட்டுக் கதவை இரவு சாத்திப் பூட்டி விட்டால் மறுநாள் காலைதான் திறப்பது மரபு. சில குடும்பங்களில் மறுநாள் காலையில் நீர்ச்சோற்றுப் படைப்பு படைப்பார்கள். இது பேச்சு வழக்கில் நெய்ச் சோற்றுப் படைப்பு என வழங்குகிறது.

முதல்நாள் வடித்த சோற்றில் தண்ணீர் ஊற்றி, வெங்காயம் நறுக்கிப் போட்டு, எலுமிச்சங்காய் ஊறுகாய் சேர்த்துப் பிசைந்து படைப்பார்கள். பல காய்களோடு, துவரம் பருப்பு அரைத்துப் பிசைந்து மரக்கறிக்காய்த் தோசை சுட்டு, அதனையும் நீர்ச் சோற்றோடு வைத்துப் படைப்பது மரபு.

நீர்ச் சோற்றுப்படைப்பு முடிந்ததும், பேழைத் துணிகளை (இரவு கொய்து வைத்த அல்லது அடுக்கி வைத்த துணிகளை) மறுபடி எடுத்து உதறி, வெய்யிலில் காயவைத்து, மடித்து, மீண்டும் பேழைக்குள் (பெட்டிக்குள்) வைத்து, படைக்கும் நகைகளையும் அவற்றோடு வைத்து, பேழையைக் கட்டி, வளவு வீட்டிற்குள் வழக்கமான இடத்தில் கட்டி வைத்து விடுவர்.

தெய்வமாக ஏற்றுக்கொள்ளப்பெற்றவரின் மகன் வழியினர்தான் படைப்பது பொது வழக்கு. பெண் வழியினர் வேண்டிக்கொண்டு (பிரார்த்தனை) தாய் வீட்டில் வந்து படைப்பதும் உண்டு.

படைக்கப்படுகிறவரின் வாரிசு வழிமுறைகள் பெருகும்போது பங்காளிகள் அனைவரும் கூடிப் படைக்கும் பொதுப் படைப்பாக விரிவடைகிறது. அந்தப் பங்காளிகள் பல்வேறு ஊர்களில் குடியேறிய பின்னர். படைப்புக்காக மட்டும், பல்வேறு ஊர்களைச் சேர்ந்த குறிப்பிட்ட கோவில் பங்காளிகள், படைக்கப்படுபவர் வாழ்ந்து தெய்வமாகிய ஊரில் கூடிப் படைக்கும் பொதுப்படைப்பாக விரிவடைகிறது. இத்தகைய பொதுப்படைப்புக்கள் செட்டிநாட்டில் 50க்கு மேல் வழக்கமாக நடைபெற்று வருகின்றன.

நகரத்தார் மரபில், ஓர் உயிர் கருவாக உருவான உடனேயே (அது தலைப்பிள்ளையாக இருந்தால்) அவ்வுயிருக்காக, அதன் தாய் மருந்து குடிப்பதில் குடும்பச் சிறப்பு நிகழ்ச்சிகள் தொடங்குகின்றன. அதே உயிர் இவ்வுலகை நீத்த பிறகு (அவ்வுயிர் தெய்வமாக ஏற்கப்பெற்றால்) அதனை நினைத்து நிகழ்த்தும் படைப்பு குடும்பச் சிறப்பு நிகழ்ச்சிகளின் நிறைவு நிகழ்ச்சியாகிறது.

பிற வாழ்வியற் செய்திகள்

தாலாட்டு

ஆச்சிமார் பாடிய அழகிய தமிழ்க்கவிதைகள் தாலாட்டுப் பாடல்கள். இவை ஏட்டில் எழுதாக் கவிதைகள். மனத்தோட்டத்தில் பூத்த மகரந்தத் தேன்மலர்கள். எழுத்தெண்ணி இலக்கணம் பாராமல், காதில் கேட்கும் கவினுறு ஓசைச் சந்தத்தில் கணக்குப் பிழையாமல் கற்பனையோடு கலைநயம் மிகுந்தனவாய் ஆச்சியர் இயற்றிய பாடல்கள். பெரும்பாலும் மரபு வழியாக வயதில் முதிர்ந்த பெண்கள் பாட அவற்றைக் கேட்டு இளம்பெண்கள் பாடிப்பார்த்துத் தத்தம் குழந்தைக்குத் தாலாட்டுப் பாடி வழிவழியாக அடுத்த தலைமுறைக்கு வழங்கும் கவிதைச் சீதனம். ஓயாமல் இல்லத்தில் முழங்கும் திரைப்படப் பாடல்களின் தாக்கத்தால் வழிவழியாக வந்த தாலாட்டுப் பாடல் பழக்கம் இக்காலத்தில் குறைந்துவிட்டது நமது சமூகத்திற்கு ஒருவகைப் பண்பாட்டு இழப்பே யாகும்.

தாலாட்டுப் பாடல்கள் எளிய இனிய சொற்களால் இரண்டிரண்டு சீர்கள் வரும் வகையிலே அமைந்திருக்கும்.

ஆராரோ ஆரிரரோ
ஆரிரரோ என் கண்ணே
ஆரடித்தார் ஏனமுதாய்
அடித்தாரைச் சொல்லியழு

என இவ்வாறு இருசீர்களாகவும் மிக அருகி

மீன்பூக்க நிலவெரிக்க மின்னல் குளம்பெருக
மின்னலிலே காதவழி தம்பிநீ விளையாடி வந்தாயோ
அச்சடிக்கப் பொன்விளைய ஆதிச்சர் உன்நாடு
வைத்திருக்கத் தந்தமகன் வாழுவான் நூறுகுடி

என்று நான்கு சீர்களாகவும் வரும்.

தாலாட்டுப் பாடல்களில் குலப்பெருமை, குடிச்சிறப்பு, தவம் செய்து பிள்ளை பெற்ற சிறப்பு. கடவுள் பற்றிய கதைகள், உறவு முறைச் சிறப்புக்கள் முதலியன பொதுவாக இடம்பெறும்.

தவத்தால் விளைந்த தங்கமகன்

ஸ்ரீரங்கம் ஆடித்

திருப்பாற் கடலாடி

மாமாங்கம் ஆடி

மதுரைக் கடலாடிச்

சங்குமுகம் ஆடிச்

சாயாவனம் பார்த்து

முக்குளமும் ஆடி

முத்தி பெற்று வந்த கண்ணே

என ஒருதாய் பல்வேறு தீர்த்தமாடிப் புண்ணியப் பயனால் மகன் பிறந்த பெருமையைப் பாடுகிறாள்.

தெள்ளுதமிழ் வளர்த்த

தென்னவராம் பாண்டியர்க்குப்

பிள்ளைக்கலி தீர்த்த

பெருமானும் நீதானோ

என்றும்

வாடிய நாளெல்லாம் வருந்தித் தவமிருந்து

தேடிய நாள்தன்னில் செல்வமாய் வந்த கண்ணோ

மலடி மலடியென்று வையகத்தார் ஏசாமல்

மலடி என்ற சொல்லை மாற்றப் பிறந்தாயோ

என்றும் தேடித் தவமிருந்து செல்வமகன் பெற்றதனைப் போற்றிப் பாடுகிறார்கள். இவ்வாறு பிறந்த குழந்தை தொட்டிலில் தூங்கும் அழகைப் பார்க்கப் பார்க்கத் தாய்க்குக் கற்பனை கரை புரண்டோடுகிறது.

கரும்போ இனிதேனோ

கற்கண்டோ சர்க்கரையோ

சர்க்கரையோ முக்கனியோ

சாதி மருக்கொழுந்தோ

கொடிக்கால் மருக்கொழுந்தோ கண்ணம்மா
கோதைதகையிற் பூச்சரமோ
சாதி மருக் கொழுந்தோ கண்ணம்மா
சாமி கொடுத்த பூச்சரமோ

என்று பெண் குழந்தைக்குத் தாலாட்டுப் பாடுகிறாள் ஒரு தாய்.

ஆயிரம் முத்திலே – என் கண்ணே நீ
ஆராய்ந் தெடுத்த முத்தோ
தொண்ணூறு முத்திலே என் கண்ணே நீ
துணிந்தெடுத்த ஆணிமுத்தோ
வைகை பெருகிவர
வார்ந்த மணல் ஊர்ந்துவர
ஊறி வந்த தண்ணியிலே
ஒட்டிவந்த கட்டி முத்தோ
பெருகிவந்த தண்ணியிலே
பின்னரைத்த சந்தனமோ
சந்தனமோ என்பொருளோ
சாமி தந்த தவப்பயனோ

என்று முத்தாக மணியாகப் பூவாகச் சந்தனமாகப் பிள்ளைகளைப் போற்றித் தாலாட்டுகின்றனர்.

குடிப்பெருமை குலப்பெருமை கூறல்

பரட்டைப் புளியமரம்
பந்தடிக்கும் நந்தவனம்
நந்தவனம் கண்திறந்து
நாலுவகைப் பூவெடுத்து
பூவெடுத்துப் பூசை பண்ணும்
புண்ணியவார் பேரேனோ... என்றும்

வித்தகசாலை கட்டும்
வீமரோட பேரேனோ
பாடகசாலை கட்டும்
பாண்டியனார் பேரேனோ
குளிக்கக் குளமும் வெட்டிக்
கும்பிடவும் கோயில் கட்டி
அசராமல் அன்னமிடும்
அர்ச்சுனவார் பேரேனோ என்றும்

முல்லைப்பூக் கட்டிடமாம்
முகப்பெல்லாம் உத்திரமாம்
முகப்பைத் திறந்துவிட்டால்
முல்லைப்பூ வாசனையாம்
உங்கள் ஐயா மூத்தவுக யோசனையாம்

என்று குழந்தை பிறந்த குலப்பெருமை குடிப்பெருமையைத் தாய் பாடுகிறாள்.

தெய்வக் கதைகள்

சொக்கருக்கு மீனாட்சி சோறு கொண்டுவரச் சற்று நேரம் கூடுதலாக ஆனதால் உண்ணும் நேரம் கடந்ததே என்றும் சோற்றில் கல்கிடக்கின்றதென்றும் நெல்கொண்டு எறிந்தாராம். மயங்கி விழுந்த மீனாள் அழுத குரல் கேட்டுத் தல்லாகுளம் விட்டுத் தமுக்கம் விட்டு, வையத்தில் உள்ளமட்டும் வரிசை கொடுத்தாராம் மீனாளின் அண்ணனாகிய அழகர். இதேபோல் வள்ளியை மணக்க வந்த வடிவேலன் மான்தேடிவந்த கதையையும், ஸ்ரீராமர் சீதையை மீட்டுவந்த கதையையும், அல்லி அர்ச்சுனர் கதையையும் தாலாட்டில் பாடும் மரபு உள்ளது.

தாய்வீட்டுப் பெருமை – உறவுநிலை

தன்னுடைய குழந்தைக்கு என்னென்ன சீர் தருவார்கள் தாய்வீட்டார் என்றும் அதிலும் குறிப்பாக அம்மான்மார் என்ன கொண்டு வருவார்கள் என்றும் எண்ணி எண்ணி மகிழ்ந்து தாய்மார் பாடுவது மரபு.

சங்கினால் பால் கொடுத்தால்
சந்தனவாய் நோகுமென்று
தங்கத்தினால் சங்குசெய்து
தருவார்கள் தாய்மான் என்றும்

அக்கரையின் சர்க்கரையும் அதிமதுத் தென்னவட்டும்
கோடைப் பலாச்சுளையும் குலைசேர்ந்த மாங்கனியும்
போட்டு விளையாடப் பொன்னாலே அம்மானை
கட்டி விளையாடக் காசிச் சிண்டுமணி
வைத்து விளையாட ஒயிலா ரயில்வண்டி
சாதிக் களிப்பாக்கும் சங்குவெள்ளைச் சுண்ணாம்பும்
ஏலங் கிராம்பும் இளங்கொடிக்கால் வெற்றிலையும்
அத்தனையும் கொண்டு அறியவந்தார் அம்மான்மார்

என்றும் அம்மான்மார் தரும் சீரைப் பாடி மகிழ்வாள் தாய்.

நகரத்தார் சமூகத்தின் மேன்மைநிலை, செல்வவளம், தெய்வ பக்தி, கற்பனைவளம் ஆகியவற்றைத் தாலாட்டுப் பாடல்கள் காட்டுகின்றன.

ஒப்பாரி

செட்டிநாட்டுப் பெண்களின் உணர்ச்சி இலக்கியம் ஒப்பாரி ஆகும். இழவு கேட்கப் பெண்கள் வரும்போது சாகக் கொடுத்த பெண் தன் உணர்ச்சிகளை மடைதிறந்த வெள்ளம்போல் பாடித் தன் துன்ப உணர்வை வெளிப்படுத்துகிறார். இழவு கேட்க வருகின்ற பெண்களும் ஒப்பாரி வைப்பதுண்டு. மகனையோ, மகளையோ, கணவனையோ, தாய்தந்தையரையோ சாகக் கொடுத்த பெண்ணின் அவலத்தைத் தாங்களும் உணர்ந்து அவள்நிலை ஒத்த உணர்வில் கேட்கும் பெண்களும் பாடுவதால் ஒப்பாரி என்ற பெயர் வழங்கியிருக்கலாம். கட்டி அழுதல் என்ற சொல்வழக்கு இப்பகுதியில் உண்டு. சாகக் கொடுத்த பெண்ணை மற்ற பெண்கள் கட்டிக்கொண்டு அழுதல் என இதற்குச் சிலர் விளக்கம் கூறுவர். ஆனால் இழவு சொல்லும் பெண்ணும் கேட்கும்

பெண்களும் பாட்டுக்கட்டி அழுதல். ஒப்பாரி வைத்தல் என்பதே இச்சொல் வழக்குக்குப் பொருத்தமான பெயர். வாய்மொழி இலக்கியக் கூறுகள் உடையன ஒப்பாரிப் பாடல்கள். நாமக்கல் கவிஞர் செட்டிநாட்டுப் பெண்களைப் பற்றிக் கூறும்போது.

இழவில் அழுதிடும் பெண்கூட
இசையோடு அழுதல் கண்கூடு

என ஒப்பாரி வைக்கும் கவிதை உள்ளத்தை எடுத்துக் காட்டுகிறார். தாலாட்டுப் பாடல்கள் கூட முன்னோர் பாடியதை அப்படியே பின்பற்றிப் பாடுதல் உண்டு. ஆனால் ஒப்பாரிப் பாடல்கள் சூழ்நிலைக்கேற்ப அவலத்தின் உணர்ச்சி வேகத்திற்கேற்பப் புதிது புதிதாகப் பிறந்து வருகின்றன.

நகரத்தார் பண்பாடு, பழக்கவழக்கங்கள், குல வரலாறு, தொழில்திறம் ஆகிய அனைத்துச் செய்திகளும் ஒப்பாரிப் பாடல்களின் வாயிலாக அறியக் கிடைக்கின்றன. தொலைக்குக் கொண்டு விற்கப் போனவர்கள் பெட்டியடி உதவியாளராகச் சென்று கூட்டாளி என உயர்ந்து பல கடைகளை மேற்பார்ப்பார்கள். இத்தகைய ஒரு கணவரை இழந்த பெண்.

எட்டுக்கடை பார்ப்பார்
எதிர்த்தகடை மேல்பார்ப்பார்
எட்டு லட்சம் கொண்டுவரும்
இந்திரரைத் தப்பவிட்டேன்

பத்துக்கடை பார்ப்பார்
பழையகடை மேல்பார்ப்பார்
பத்துலட்சம் கொண்டுவரும்
பாண்டியரைத் தப்பவிட்டேன்

என்று தன் கணவருடைய நிருவாகத் திறமையைப் பாடுகிறாள். இறந்த தன் கணவருடைய அன்பை எண்ணியெண்ணி இப்படி அழுகிறாள் ஒரு பெண்,

தள்ளியிருன்னு சொல்லாத
தங்கராசன் பொயிட்டாரே
போய் இருன்னு சொல்லாத
பொன்னரசன் பொயிட்டாரே
ஒதுங்கியிருன்னு சொல்லாத
உத்தமரும் பொயிட்டாரே!

கணவனை இழந்த விதவையான பெண்ணுக்கு வெள்ளைச் சேலை தருவது வழக்கம். பொன்னிழந்து பூவிழந்து புதுவண்ண உடைதுறந்து வெள்ளைக் கச்சை கட்டும் காலம் வந்ததென்று இழவுச் சடங்குகளைப் பாடுகிறார் ஒரு மனைவி.

ஒரு கோடி தங்கநகை
உருவிவைக்கச் சொன்னீரே
கால்கோடி தங்கநகை
கழற்றிவைக்கச் சொன்னீரே!

என்று பந்தலில் நகை வாங்கியதையும்

கந்தையிது கந்தையிது
கால்பணத்துக் கந்தையிது
ஆக்குகிற பெண்களுக்கு
அடைபிடி கந்தையிது
பொங்குகிற பெண்களுக்கு
பிடிச்சிறக்கும் கந்தையிது
காசிப் பரதேசி
கைதுடைக்கும் கந்தையிது
மடத்துப் பரதேசி
வாய்துடைக்கும் கந்தையிது

என்று வெள்ளைக்கச்சை கட்டநேர்ந்த அவலத்தையும் அப்பெண் பாடுகிறாள். கணவர் நோய்வாய்ப்பட்டபொழுது மருத்துவர் வந்து பார்த்தும் குணப்படுத்த இயலாமல் அவர் இறந்ததை இழவு கேட்பவர்க்குச் சொல்கிறாள் மனைவி :

மலையாள வைத்தியனை மடிவசமாய்க் கூட்டி வந்தோம்
மலையாள வைத்தியனும் மருந்தறிய மாட்டலையே
சீமை வைத்தியனைச் சீக்கிரமாய்க் கூட்டிவந்தோம்
சீமை வைத்தியனும் சீக்கறிய மாட்டலையே

என்று முயற்சி செய்தும் கணவர் உயிரைக் காப்பாற்ற முடியாத வேதனையை மனைவி பாடுகிறாள். இன்னொரு பெண் தன்னுடைய வாழ்க்கை இழப்புக்கு யாரைக் குறை சொல்வது என்று பாடுகிறாள்.

தாலிக்கு அரும்பெடுத்த தட்டானும் கண்குருடோ?
சேலைக்கு நூலெடுத்த சேணியனும் கண்குருடோ?
பஞ்சாங்கம் பாக்கவந்த பாப்பானும் கண்குருடோ?
எழுதினவன்தான் குருடோ? எழுத்தாணி கூரிலையோ?
சிதம்பரத்துத் தட்டான் சீர்காழி ஆசாரி
பட்டறையைக் கிட்டவச்சுப் பண்ணும் சிறுதாலி
தாலி பொருத்தமில்லே தட்டான்கை ராசியில்லே
மாலை பொருத்தமில்லே வயிராவி கை ராசியில்லே
சேலை பொருத்தமில்லே சேணியன்கை ராசியில்லே

என்று இறைவனையே கண்குருடோ என்று கேட்பதும் என் விதியை இறைவன் அழுத்தமாக எழுதவில்லையா என்று பாடுவதும் எதிலும் கைராசிப் பொருத்தம் பார்க்கும் பண்பாட்டைப் பாடுவதும் அவள் துன்பத்துக்குக் காரணம் தேடி அழுவதை உணர்த்துகிறது. காரணம் சொல்ல முடியாதபோது விதி, ராசி என அமைதிப்படுத்திக் கொள்ளும் மனப்பான்மையை இப்பாடல்கள் காட்டுகின்றன.

ஒரு பெண் திருமணம் ஆகி ஒன்று இரண்டு நாட்களில் கணவனை இழந்தாள். ஆகவே தனது திருமண நாள், வருடம் மாதம் கூறிப் பாடுகிறாள்.

மாது நல்லாள் என்னை மாலை யிட்டுப்பார்ப்பதற்கு
அஞ்சாறு ஊர்ப் பஞ்சாங்கக் காரரிடம்
நல்ல நாள் எப்பவென்று எங்களய்யா
நடுவிருந்து பார்த்தார்கள்

அச்சுத வருசம் அர்ப்பசி மாதம்
அஞ்சாம் தேதியிலே ஆயில்ய நட்சத்திரத்தில்
கொஞ்சமும் தவறாமல் கொம்பனையாள் என்னைக்
குணமுள்ள மாதென்று மாலை முடிப்பதற்குக்
கல்யாண முகூர்த்தமென்று கடலேறிப் பாக்குவைத்து
சீமந்த மென்று சீமையெங்கும் பாக்குவைத்தார்!
உங்களைக் குதிரையிலே வைத்துக் கூட்டி வரும் வேளையிலே
நீங்கள் சௌக்கியம் இல்லையென்று என்
அண்ணனிடத்தில் சொல்லாமல்
மணையிலே இருக்கையிலே மயக்கமாய் வருகுதென்று
உங்களய்யா இடத்தில் வருத்தமாய்ச் சொன்னீராம்...
கட்டின காப்புக் களத்துவ தற்குள்ளாக
காப்புக் களத்தித் கால்மோதிரம் இடுவதற்குள்
நீராட்டு அன்றைக்குச் சீக்கென்று சொல்லிச்
சிவலோகம் சேர்ந்தீரே!
நாளே சரியாச்சோ நடப்பதற்கு நாளாச்சோ
பொழுதே சரியாச்சோ போவதற்கு நாளாச்சோ

நல்லநாள் பார்த்து நடைபெற்றதெல்லாம் இருந்து மகிழ்வதற்காகவா? எண்ணி எண்ணி அழுவதற்காகவா? என்று பாடும் இப்பெண் சாவு எல்லோர்க்கும் வருவதுதான்: ஆனால் தாலிகட்டிய மறுநாளே இப்படி அநியாயச் சாவு வரலாமா என்று அழுது புலம்புகிறாள்.

விதிவந்தா லென்ன கொஞ்சம் விலகி வந்தா லாகாதோ
சாவு வந்தா லென்ன கொஞ்சம் தள்ளி வந்தா லாகாதோ
உங்களைப் பார்க்க வருவமின்னா
நீங்களிருக்கும் பள்ளியறை தூரமில்லோ
உங்களைக் காண வருவமின்னா
நீங்களிருக்கும் கயிலாயம் தூரமில்லோ
தாலி கொண்டுவந்த தட்டானும் போகலியே

மாலை கொண்டுவந்த வயிராவி போகலியே

சேலை கொண்டுவந்த சேணியனும் போகலியே

கல்யாணப் பானைகளும் கழுவிக் கவுக்கலியே

பணியாரம் சுட்ட சட்டி பாதிமணம் போகலியே

என்று திருமண வாசம் மாறா நிலையில் கணவனை இழந்த பெண் கதறுகிறாள். தேடித்தேடி மாப்பிள்ளை தனக்குப் பார்த்த கதையை நகரத்தார் குலமரபு கோவில் பிரிவுகள் ஆகியவற்றைக் கூறிப் பாடுகிறாள் அவள்.

என் அப்பச்சி

இலுப்பக்குடி மாப்பிள்ளையை இணக்கமில்லை என்றார்கள்

மாத்தூர் கோவில் மாப்பிள்ளையை மணமில்லை என்றார்கள்.

வேலங்குடி மாப்பிள்ளையை விவஸ்தையில்லை என்றார்கள்

சூரக்குடிகோவில் மாப்பிள்ளையை நம்பள் சொந்தமில்லை என்றார்கள்.

நேமங்கோவில் மாப்பிள்ளையை நமக்கு நேர்மையில்லை என்றார்கள்

பிள்ளையார்பட்டிக் கோவில் மாப்பிள்ளையைப் பெலமில்லை என்றார்கள்.

வயிரவன் கோவில் மாப்பிள்ளையை வாயில்லை என்றார்கள்

இரணியூர்க்கோவில் மாப்பிள்ளையை நமக்கு இணையில்லை என்றார்கள்.

இளையாத்தக்குடி மாப்பிள்ளைக்கு இணக்கமென்று சொல்லி

என்னை ஏங்கவைத்துப் பார்த்தீரே!

பிள்ளையை இழந்து தாய் பாடும் ஒப்பாரியிலும் உணர்ச்சி கொப்பளித்து வரக் காணலாம்.

ஈச்சங் குருத்துல எடுத்த நல்ல தங்கமில்ல

வாழைக் குருத்துல எடுத்த நல்ல தங்கமில்ல

கையில் செபமாலை கக்கத்துப் பூமாலை

மடியில் செபமாலை வச்சாடும் பூமாலை

கால் அழகும் கை அழகும்
கட்டைவிரல் லெட்சணமும்
தோள் அழகும் கால் அழகும்
சுண்டுவிரல் லெட்சணமும்
நீலமுழிக் கண்கள் ரெண்டும்
நிலக்கரையான் திங்க விட்டம்
கோலமுழிக் கண்கள் ரெண்டும்
குழிக் கரையான் திங்க விட்டம்

என்று மகன் அழகுமேனியை மண்ணில் புதைத்த துயரத்தை மனம் ஆறாமல் பாடும் தாய். அவனைக் கண்ணுள் மணிபோல் வைத்துக் காத்தும் எவரும் அறியாமல் எமன் கவர்ந்து போனானே எனத் துயரத்திலும் கவிதை பாடுகிறாள்.

சுத்தித் திரை வளைச்சம்
சூரியனைக் காவல் வைச்சம்
பக்கம் திரை வளைச்சம்
பகவானைக் காவல் வைச்சம்
எங்கும் திரை வளைச்சம்
இந்திரனைக் காவல் வைச்சம்
நடுவே திரை வளைச்சு
நானும் ஒரு காவல் நின்னேன்
இத்தனைபேர் காவலிலே
எமன்வந்தான் காணலியே
தொண்ணூறுபேர் காவலிலே
தூதன் வந்தான் காணலியே!

என்று எவரும் அறியாமல் எமன் வந்தான் எனப் பாடும் தாய் எமனின் இயல்புகளையும் பாடுகிறாள்.

கொல்லவந்த எமனுக்கு
கோடித் திரவியமும்

குருதைவிடாய் தாரமின்னம்
கோப்பான மஞ்ஞுனைக்
கொன்னே விடுவ மின்னான்
பிடிக்கவந்த எமனுக்கு
புள்ளையைப் போல பிள்ளை
பொம்மை பண்ணித் தாரமின்னம்
பொம்மையின்மேல் சிந்தை இல்லை
புடிச்சால் விடுவ மின்னான்
வாங்கவந்த எமனுக்கு
மைந்தனைப்போல் மைந்தன்
மதலை பண்ணித் தாரமின்னோம்
மதலையுமே தேவை இல்லை
மைந்தன் வந்தால் விடுவ மின்னான்
கூட்டிப் போய்விட்டவன்
குதிரைமெடல் பெற்றானா
அழைத்துப் போய்விட்டவன்
ஆனைமெடல் பெற்றானா.

என்று தாய் பாடும்போது என் பிள்ளையைப் பிடித்துப் போனதால் எமனுக்கு என்ன மெடல் கிடைத்ததா என்று இகழ்ச்சி அவலம் தோன்றப் பாடுகிறாள். ஒப்பாரிப் பாடல்கள் சூழ்நிலைக்கேற்பப் பாடப்படும் உணர்ச்சி இலக்கியம். நகரத்தார் வீட்டுப் பெண்களின் உள்ளத்தில் கவிதை குடியிருந்து வாழ்கிறது என்பதைக் காட்டும் காலக்கண்ணாடி, வாழ்க்கையை எதிர்கொள்ளும் உணர்ச்சிகளின் வடிகாலான வாழ்க்கை இலக்கியம் ஒப்பாரிப் பாடல்கள். ஆயினும் இப்போது இழவு வீட்டில் ஒப்பாரிப் பாடல்கள் ஒலிப்பது படிப்படியாகக் குறைந்து வருகிறது.

பிள்ளை கூட்டுதல்

உ.ராம.மெ.சுப.சேவு.அ. என்று தொடர்ந்து தலைமுறை விளக்கம் போன்ற விலாசம் எழுதும் இயல்புடையவர்கள் நகரத்தார். அடுக்கிவரும் விலாசம் வாரிசு தொடர வேண்டும் என்ற எண்ணத்தையும் காட்டுகிறது.

ஆண்மக்களைப் பெறாதவர்கள் தமக்கு வாரிசு வேண்டும் என்று தம்முடைய கோவில் சார்ந்த அதிலும் தம்முடைய பிரிவையே சார்ந்த, ஒரு குடும்பத்தில் பிறந்த ஆண்மகனைத் தமக்கு மகனாகப் பிள்ளை கூட்டிக் கொள்வர். இவ்வழக்கம் பிள்ளை கூட்டுதல் எனப்படும். பெண்மக்கள் இருந்தாலும் ஆண் மகன் ஒருவன் வேண்டும் எனப் பிள்ளை கூட்டிக் கொள்வார்கள்.

பிள்ளையில்லாத வீட்டில் ஆண்மகனைப் பிள்ளை கூட்டிக் கொள்ளும் வழக்கம் பிற சமூகத்தில் இருந்தாலும் அதற்கும் நகரத்தார் சமூகத்தின் சுவீகாரத்திற்கும் அடிப்படை வேறுபாடு உண்டு. பிற சமூகத்தில் சகோதரி மகனைக் கூடப் பிள்ளையாகக் கூட்டிக் கொள்வார்கள். எந்தவித உறவுமுறையும் இல்லாதவரையும் பிள்ளை கூட்டிக் கொள்வார்கள். பெண்களைக் கூடப் பிள்ளை கூட்டிக் கொள்வதுண்டு. ஆனால் நகரத்தார் சமூகத்தில் எப்பொழுதுமே சகோதர உறவு எனக்கருதப்படும் தங்கள் கோவிலில் தங்கள் உட்பிரிவைச் சேர்ந்த ஆண்மகனையே பிள்ளையாகக் கூட்டிக் கொள்வார்கள். பெண்களைச் சுவீகாரம் செய்து கொள்ளும் வழக்கம் நகரத்தாரிடம் இல்லை.

பிள்ளை கூட்டுதல் புதுமை போன்ற விழாவாக நடத்தப் பெறும். இதைச் சுவீகாரப் புதுமை என்றும் கூறுவதுண்டு. உள்ளூரிலோ, வெளியூரிலோ பிள்ளை கூட்டினால் அந்தப் பிள்ளையைப் பிள்ளை கூட்டிக் கொள்பவர் ஊரில் பொதுக் கோவிலில் வைத்து அல்லது பங்காளி வீட்டில் வைத்து அங்கு பிள்ளை கூட்டிக் கொள்பவர் உற்றார் உறவினர். பங்காளிகளுடன் வந்து அழைத்துச் செல்வர். சரிகை வேட்டி சட்டை, சங்கிலி, மோதிரம் முதலியவற்றைக் கூட்டிக்கொள்ளும் தகப்பனார் கொண்டுவந்து பிள்ளையை அணிந்து கொள்ளச் சொல்லி அழைத்துச் செல்வர். வீட்டுக்குச் சென்றதும் மங்கலச் சங்கு ஊதி. பிள்ளையை வரவேற்பார்கள். பிள்ளை வருபவன் வீட்டுக்குள் வந்ததும், கூட்டிக் கொள்ளும் தாயின் பாதங்களைப் பாலால் கழுவி வணங்குவான். பின் தாய் பால் குவளையைக் கொடுப்பாள்: அதன்பின்னே தாய் – மகன் உறவு உறுதிப்படும். பிள்ளையின் பிறந்த இடத்து அம்மானாகிய மாமக்காரர் கூட்டிக் கொண்ட ஆத்தாவின் சகோதரரான மாமக்காரரிடம் பிள்ளையைக் கையைப் பிடித்துக் கொடுத்து ஒப்படைப்பார். மாமப்பணம்

எழுதிக் கூடுவார்கள். ஆயாவீட்டிலிருந்து வைரத்தோடு முதலியவை பிள்ளைக்குத் தரப்படுவதும் உண்டு.

பிள்ளை வந்த பிறகு அந்த வீட்டிற்கேற்ற மரபுப்பெயர் பிள்ளைக்குச் சூட்டப்பெறும். கவிஞர் கண்ணதாசனுக்குப் பெற்றோர் இட்ட பெயர் முத்தையா. பிள்ளை வந்த இடத்தில் அவர் பெயர் நாராயணன், பொற்கிழிக் கவிஞர். சோமசுந்தரத்திற்கு இப்பெயர் பிள்ளை வந்த இடத்தில் இட்ட பெயராகும். புதுவயலில் அவர் பிறந்தபோது இட்ட பெயர் வைரவன். பிள்ளையைப் பெற்ற வீட்டாரின் பங்காளிகளில் மூத்தோரும் பிள்ளை கூட்டிக்கொண்ட வீட்டாரின் பங்காளிகளில் மூத்தோரும் இருந்து பிள்ளை கூட்டிக்கொண்ட முறி எழுவார்கள். ஈரிடத்துத் தந்தையரும் இருவீட்டுப் பங்காளிகளில் பெரியோரும் அதில் கைச்சாத்து இடுவர். இது பிள்ளை எழுதிக்கொள்ளுதல் என்று நடைமுறையில் வழங்கப்படுகிறது. இந்நாளில் பிள்ளை கூட்டிக்கொண்டமைக்கான ஆவணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்படுகிறது.

பிள்ளை கூட்டிக் கொள்ளுவதற்கு எழுதிக் கொள்ளும் முறி:

ஆங்கீரச வருடம் ஆவணி மாதம் 17 ஆம் தேதி கல்வாச நாட்டில் இளையாற்றக் குடியான குலசேகரபுரத்தில் இரணியூர் மருதங்குடியான ராசநாராயணபுரத்தில் பிள்ளையார்பட்டியான திருவேட்பூருடையான் ஆத்தங்குடி ஆ.ந.சிவ. சொக்கலிங்கம் செட்டி சுந்தரேசருக்குக் கோனாபட்டு பழ.சிவ.சிவலிங்கம் செட்டியார் மகன் ஆறுமுகம் என்ற பழநியப்பனைச் சுவீகாரப் புத்திரனாகக் கூட்டிக் கொண்டதினாலே மேற்படி சுந்தரேசனின் தேட்டு, ஆட்டு, நீட்டுப் பெட்டி, தெய்வ ஆதாயம், ஆஸ்தி பூஸ்தி சகலமும், மேற்படி மனைவி மீனாட்சியின் ஸ்ரீதனம் சீர்முறை நகைப்பணம் நகை யாவற்றையும், மேற்படி பழனியப்பன் அடைந்து அனுபவித்துக் கொள்ளுகிறது. பள்ளத்தூர் சோலையப்பசெட்டி நாராயணன் வகையார் தாய் மாமனாக இருந்து மாமச்சடங்கு செய்து வருகிறது. இப்படிக்கு நகரத்தார் சொல்ல இது எழுதியது. கல்வாச நாட்டில் இளையாற்றக்குடியான குலசேகரபுரத்தில் இரணியூர் மருதங்குடியான ராசநாராயணபுரத்தில் பிள்ளையார்பட்டியான திருவேட்பூருடையான் ராமனாதன் செட்டி சிதம்பரம்.

பிள்ளை கூட்டிக் கொள்பவர் கையெழுத்து

பிள்ளையை விடுபவர் கையெழுத்து

பிள்ளை கூட்டிக் கொள்ளும் தாய்மாமன் கையெழுத்து

பிள்ளை பிறந்த இடத்துத் தாய்மாமன் கையெழுத்து

(ஆட்டு என்பது பூர்வீகச் சொத்துக்கள். தேட்டு என்பது தான் சொந்தமாய்ச் சம்பாத்தியம் செய்தது. நீட்டுப்பெட்டி என்பது முன்னோர்களுக்குப் படைக்கும் பேழை. ஆஸ்திபூஸ்தி என்பது நகைகள், ரொக்கம், நிலங்கள்)

பிள்ளையார் நோன்பு

தமிழ்நாட்டில் நகரத்தார் மட்டுமே கடைப்பிடித்துக் கொண்டாடும் விழா பிள்ளையார் நோன்பு, திருக்கார்த்திகையிலிருந்து 21ஆவது நாளில் சஷ்டி திதியும் சதய நட்சத்திரமும் சேரும் நாளில் பிள்ளையார் நோன்பு கொண்டாடுவது வழக்கம். இழை எடுத்துக் கொள்ளுதல்தான் இதில் முதன்மை வாய்ந்த சடங்காகும்.

நெற்கதிர், ஆவாரம்பூ, கண்ணுப்பூளைப் பூ ஆகியவற்றைப் பந்தாகக் கட்டி வாயில் நிலையில் செருகிவைப்பதும் சாமி வீட்டுக்குள் வைத்து வணங்குவதும் இந்நோன்பின் தொடக்கமாக இப்பொழுது அமைந்துள்ளது. சாமி வீட்டில் சுவரில் தும்புபிடித்துக் கோலம் இடுவார்கள். சிறிய வெள்ளிப் பிள்ளையார் அல்லது பிடித்து வைத்த பிள்ளையார் வீற்றிருப்பார். வழக்கமாக ஏற்றும் வெள்ளிக் குத்து விளக்கோடு அகன்ற சிட்டி விளக்கு ஒன்றை நெய் ஊற்றிப் பிள்ளையார் நோன்பு விளக்காக ஏற்றுவார்கள். தேங்குழல் முறுக்கு மாவுருண்டை மணகோலம் முதலிய பலகாரங்களோடு முக்கியமாக எள்ளுருண்டை கடலை உருண்டை விநாயகர் முன் வைக்கப்படும். இவற்றோடு சுட்டு வைக்கும் பலகாரங்களாகிய பணியாரம் வடை போன்றவையும் இருக்கும். இவற்றுள் முக்கியமாகக் கருப்பட்டிப் பணியாரம் சுட்டு வைப்பார்கள். வெல்லப்பாகு சேர்த்த மாவில் இழை எடுக்கக் கெட்டியாக வைத்துக் கொண்டு. பிறகு மாவில் தண்ணீர் விட்டுக் கரைத்துக் கருப்பட்டிப் பணியாரம் சுடுவார்கள். ஆகவே இதை எச்சில் படுத்தக்கூடாது எனக் கருப்பட்டிப் பணியாரம் மட்டும் சாமி கும்பிடுமுன் பிள்ளைகளுக்குக் கூடச் சாப்பிடக் கொடுப்பதில்லை. ஆனால் வடை பணியாரம் தரத் தடை சொல்வதில்லை.

21 இழைகள் கொண்ட நூலைச் சிறுசிறு துண்டுகளாக அளவாக நறுக்கி வைப்பார்கள். கோடி வேட்டி அல்லது துண்டிலிருந்து இழைநூல்

எடுக்கப்படுவது வழக்கம். நகரப் பிள்ளையார் கோவில்களில் பங்காளிகளுக்கு இழைநூல் வழங்குவதும் உண்டு. வெல்லப்பாகு அல்லது திரட்டுப்பால் பாகில் சிறிது நெய் சேர்த்துக் கூம்பு போன்ற வடிவில் பிடித்து வைத்து அதில் திரிபோல நறுக்கிவைத்த நூல் இழை நடுவில் மேல்எழுந்து நிற்கும் வண்ணம் பிடிப்பார்கள். குடும்பத்தினர் எண்ணிக்கைக்கேற்ப 5,7 என இழை பிடித்து வைப்பதுண்டு. ஒற்றைப்படை எண்ணிக்கையில்தான் பிடித்து வைப்பது வழக்கம். குடும்பத் தலைவர் தடுக்கில் வந்து அமர்வார். வறுத்து வைக்கப்பட்ட எள்ளுப்பொரி நெல்லுப்பொரி ஆகியவற்றைத் தூவிப் பிள்ளையாரை வழிபடுவார். பிடித்து வைத்த இழையைப் பிள்ளையார் விளக்கில் ஏற்றித் தீப ஒளி அணையாமல் வாயில் போட்டுக் கொள்வார். இது பிள்ளையார் இழையாகும். பிறகு குடும்பத் தலைவர் தனக்குரிய இழையை எடுத்துக் கொள்வார். மற்றவர்களுக்கும் கூம்பு வடிவமான இழையை நெய்தோய்ந்த திரியை விளக்கில் காட்டி ஏற்றிக் கொடுப்பார். குடும்ப உறுப்பினர்கள் தலைவரை விழுந்து வணங்கி இழையைப் பெற்றுக்கொண்டு சுடர் அணையாமல் வாயில் போட்டுக்கொள்வர். ஒளி வடிவான இறைவனை நமக்குள்ளே எழுந்தருளச் செய்யும் செயல் என இதற்குத் தத்துவ விளக்கம் அளிப்பர். இழை எடுத்துக்கொள்ளும் போது பெண்கள் மங்கலச் சங்கு ஊதுவர்.

முன்னாட்களில் முருகனுக்குரிய கார்த்திகைத் திருநாளின் மறுநாள் நோன்பு தொடங்கி மார்கழி வளர்பிறை சஷ்டி வரை இவ்விரதத்தை மேற்கொண்டு வந்தனர். முதல் 20 நாட்கள் ஒருவேளை மட்டுமே பலகாரம் சாப்பிட்டு நோன்பிருந்து 21ஆம் நாள் சஷ்டியன்று முழுப்பட்டினி நோன்பிருந்து விநாயகரை வழிபட்டு விரதத்தை நிறைவு செய்வது வழக்கமாக இருந்தது. விரத நாட்களைக் கணக்கிடும் வகையில் நாளுக்கு ஒரு நூல் இழை வைத்துள்ளனர். விரத நிறைவைக் கொண்டாட நிறையப் பலகாரங்கள் செய்தனர். இப்போது நோன்பு விரதம் நின்று விட்டது. நிறையப் பலகாரம் செய்துவைத்து வழிபட்டு இழை எடுத்துக்கொண்ட பின்பு பலகாரம் சாப்பிடுவது நடைமுறையில் உள்ளது.

முன்னாட்களில் வளவுக்குள் பெரியவர்கள், பங்காளிப் பெரியவர்கள் வீடு வீடாக வந்து எல்லோர் வீட்டிலும் இழையெடுத்துக் கொடுக்கும் பழக்கம் இருந்ததாம். இப்போது செட்டிநாட்டுக்கு வெளியில்

வாழும் நகரத்தார்கள் நகரத்தார் சங்கத்தில் கூடி அங்கு பெரியவர்கள் இழை எடுத்துக் கொடுக்க வாங்கிக் கொண்டு பிள்ளையார் நோன்புப் பலகாரம் சங்கத்தில் பொதுவில் செய்து எல்லோரும் சாப்பிடுகின்றார்கள். செட்டிநாட்டிற்குள்ளும் தெற்கு வட்டகையைச் சேர்ந்த பல ஊர்களில் நகரத்தார்கள் கோவிலில் கூடிப் பொதுவாக இழையெடுத்துக் கொண்டாடுகிறார்கள். வயிரவன்பட்டி நகர விடுதியில் ஆண்டுதோறும் பிள்ளையார் நோன்பு விழா சிறப்பாக நடைபெறுகிறது. பிற கோவில் நகரத்தாரும் அங்குவந்து இழை எடுத்துக் கொண்டு பலகாரம் சாப்பிட்டுப் பிள்ளையார் நோன்பு கொண்டாடுகின்றனர்.

நகரத்தார் சமூகப் பண்பாட்டில் பிள்ளையார் நோன்பு அவர்களின் தனித்தன்மையைக் காட்டும் விழா ஆகும்.

மணிவாசகர் பதிப்பகத்தின் நகரத்தார் நூல்கள்

1. நகரத்தார் கலைக் களஞ்சியம்
2. நகரத்தார் மரபும் பண்பாடும்
3. நகரத்தார் கணக்கியல் முறை
4. நகரத்தார் ஊரும் பேரும்
5. நகரத்தார் வாழ்வியல்
6. கொடை விளக்கு தெளிவுரை
7. பிள்ளையார்பட்டி
8. இரணியூர்க் கோயில்
9. இலுப்பைக் குடிக்கோயில்
10. நேமம் கோயில்
11. இளையாத்தங்குடிக் கோயில்
12. வேலங்குடிக் கோயில்
13. மாத்தூர் கோயில்
14. சூரக்குடி கோயில்
15. வயிரவன் கோயில்



முனைவர் கரு. முத்தய்யா

முனைவர் கரு. முத்தய்யா காரைக்குடியைச் சேர்ந்தவர். தேவகோட்டை ஸ்ரீசேவுகன் அண்ணாமலை கல்லூரியில் 31 ஆண்டுகள் (1972-2003) தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

நகரத்தாரியல் ஆய்வாளர், பதிப்பாளர்களில் ஒருவராக இருந்து 'நகரத்தார் கலைக்களஞ்சியம்' நூலை உருவாக்கியவர்.

'நகரத்தார் திருமகள்' எனும் மாத இதழில் துணை ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர்.

யார்க் பல்கலைக்கழகம், கனடா, டொராண்ட்டோ பல்கலைக்கழகம், கனடா ஆகியவற்றில் தமிழ் வகுப்புகள் நடத்தியவர்.

ஏராளமான பட்டிமன்றம், வழக்காடுமன்றம், கருத்தரங்கம் சொற்பொழிவுகளில் பங்கேற்று வருபவர். பதிப்பாசிரியராகப் பணியாற்றிக் கோவில் குடமுழுக்கு விழா மலர்கள், பள்ளிப் பவளவிழா மற்றும் நூற்றாண்டு விழா மலர்கள், மணிவிழா மலர்கள் ஆகியவற்றை உருவாக்கியவர்.

முனைவர் கரு. முத்தய்யா எழுதிய நூல்கள்:

1. செயகாந்தன் நாவல்களில் பாத்திரப்படைப்பு
2. தமிழ் வளர்த்த நகரத்தார்கள்
3. தமிழகத்தில் உள்ள 32 மாவட்டங்களின் முக்கியக் கோவில்கள்
4. நடராஜபுரம் ஸ்ரீபர்வதவர்த்தனி அம்பாள் சமேத இராமநாதசுவாமி மகாத்மியம் - உரையுடன்
5. திருமந்திரம் - மாணவர்களுக்காகத் தேர்வு செய்யப் பெற்ற பாடல்கள் - உரையுடன்
6. செட்டிநாட்டைத் தெரிந்து கொள்வோம் (அச்சில்)
7. கொடை விளக்கு - உரை (அச்சில்)